# ஜகன்மோகினி

ஆசிரியை :
வை.மு.கோதைநாயகி அம்மாள்



## 2 டாக்கீ நாவல்களின்
## 2-ம் பதிப்புகள்

அனாதைப் பெண் ரூ. 1—4


ராஜமோஹன் ரூ. 1—4

படித்து
இன்புற்றுப் பிறகு
படமாகப் பார்த்துக் களியுங்கள்.

மார்ச்
1938

வாழ்க்கையின் நாதம்
அல்லது வானக் குயில் (தொடர்ச்சி)

அணா
2




“ அனாதைப் பெண் ” படமெடுக்கும் காக்ஷி.

சகல அம்சங்களிலும் சிறந்து விளங்கும் படம்
தற்பொழுது தமிழர் பெருமை கொள்ளும்படி
தயாராகிறது!

**ஸ்ரீமதி வி. எம். கோதைநாயகி அம்மாளின்**
அரிய கற்பனை

---

# அனாதைப்பெண்

---

**டைரெக்ஷன் :—பிரகாஷ்**

நவநடிகர் ஸ்ரீ. எம். கே. ராதா, பி. யு. சின்னப்பா, எஸ். எம். சுப்ரமண்யம், காமெடியன் எல். நாராயண ராவ், இ. கிருஷ்ணமூர்த்தி, ஜி. குப்புசாமி, எம். ஆர். சாமிநாதன், டி. எஸ். பிச்சாண்டி, என். திருவேங்கடம், டி. எஸ். கண்ணன், அப்துல் கரீம், ஸ்ரீமதி டி. ஏ. சுந்தராம்பாள், டி. எஸ். கிருஷ்ணவேணி, எம். ஆர். மங்களம், பி. ஆர். மங்களம், எஸ். சுப்புலக்ஷ்மி நடிக்கின்றனர்.

**ஸ்டுடியோ :—மோஷன் பிக்சர் கம்பைன்ஸ்**

| படப்பிடிப்பு : | ஒலிப்பதிவு : | பாட்டு : |
| --- | --- | --- |
| **கமால்கோஷ்** | **விஸ்வநாத்** | **பாபநாசம் சிவன்** |

---

தயாரிப்பு :—

**ஜுபிடர் பிக்சர்ஸ் லிமிடெட்,**
**திருப்பூர்,**

JUPITER PICTURES LIMITED
TIRUPUR

"அனாதைப் பெண்"
பாட்டுகளை ஓடியன் ரிக்கார்டுகளில் கேளுங்கள்.

தேசத்தின் தேவைக்கேற்ப
அன்று அவதரித்த மகானின் சரித்திரம்
இன்று திரைப்படத்திற்குத் தயாராய்விட்டது.

# ஸ்ரீ ராமாநுஜர்

தமிழ்ப் பேசும் படம்

| வசனம் : | பாட்டு : | டைரெக்டர் : |
|---|---|---|
| வ. ரா. | பாரதி தாஸன் | ஏ. நாராயணன் |

தேசத்திற்காக அரிய தியாகங்கள் செய்த பல தேச
பக்தர்கள் இந்தப் படத்தில் நடிக்கின்றனர்.

பெயர்களைக் கவனியுங்கள்.

| | | |
|---|---|---|
| சங்கு சுப்ரமண்யன் | .... | ஸ்ரீ ராமாநுஜர் |
| நா. ராமரத்னம் | .... | மத்யராமாநுஜர் |
| மாஸ்டர் முத்துஸ்வாமி | .... | பாலராமாநுஜர் |
| மதுரை சீதாலட்சுமி அம்மாள் | .... | வனஜாக்ஷி |
| ,, கமலம்மாள் | .... | தஞ்சமாம்பாள் |

மிஸ். சகுந்தலா, டி. எஸ். கிருஷ்ணவேணி முதலியோரும்,
இன்னும் பல தேச பக்தர்களும் இப்படத்தில்
நடிக்கின்றனர்.

ஸ்ரீ ராமாநுஜரின் உண்ணாவிரத ஆவேசம்,
ஹரிஜனங்களுக்கு அவர் தந்த ஆதரவு
முதலிய கட்டங்கள் வெகு உணர்ச்சி யூட்டுபவை.

ஸோல் டிஸ்டிரிபியூட்டர்கள் :

**எஸ்ஸல் பிலிம் கம்பெனி,**

வரதராஜுலு நாயுடு ரோட், எழும்பூர், சென்னை.

கலை நுட்பத்தின்

சிகரம்!

# "பக்த மீரா"

ஒய். வி. ராவின்
டைரெக்ஷன்

ஒய். எச். ராவ், பி. ஏ.யின்
நடிப்பு

வசுந்தரா தேவியின்
கர்ணாம்ருத கானம்

நடிக
மணிகள்
நிறைந்தது.

"பக்த மீரா"வின்
கீதங்களை ஒடியன்
ரிகார்டுகளில்
எதிர்பாருங்கள்.

சிந்தாமணி பிக்சர்ஸ் லிமிடெட்,
116, ராயப்பேட்டை ஹைரோட்,
சென்னை.

தந்தி :—காமதேனு. போன் :—8331.

மனோஹரமான ஆரம்பம்!

சென்னை கிரௌன் டாக்கீஸில்

1938 பிப்ரவரி 26-ந் தேதி சனிக்கிழமை முதல்

கோவை ஸெண்ட்ரல் ஸ்டூடியோஸின்

அதி உன்னத வெற்றி

# துகாராம்

(தெலுங்கு)

*

சி.எஸ்.ஆர். ஆஞ்சநேயலு
சுரபி கமலா
பாலசரஸ்வதி
மற்றும் பலர் நடிப்பது

*

முற்றும் நூதன முறையில் பிரத்தியேகமான கவர்ச்சியுடன் தயாரிக்கப்பட்டது.

குழந்தை பாலசரஸ்வதியின் "வந்தேமாதர" கீதம் கேட்கத்தக்கது.

கீழ்க்கண்ட இடங்களில் இப்போது ஜெயக்கொடி நாட்டி வருகிறது.

| | | |
|---|---|---|
| பெஜவாடா | —7-வது | வாரம் |
| ஏலூர் | —3-வது | ,, |
| விசாகப் பட்டணம் | —3-வது | ,, |
| சிகாகோல் | —3-வது | ,, |
| காகினடா | —2-வது | ,, |
| மசூலிப் பட்டணம் | —4-வது | ,, |

படம் வேண்டுவோர் எழுதவும் :—

ஸெண்ட்ரல் ஸ்டூடியோஸ்,
கோயம்புத்தூர்

ஸ்ரீராமஜெயம்

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து

—ஸ்ரீ வீரராகவ கவி.


| மலர் 15 | ஈச்வர ௵ மாசி ௴<br>மார்ச் 1938 | இதழ் 3 |
|---|---|---|


## திருமால் துதி

1. பைம்மாண்ட மணியரவில் பள்ளிகொளும்
தெள்ளியனே என்கின் றாளால்
கைம்மாவிற்கு இடர்கடிந்த காவலனே
கற்பகமே என்கின் றாளால்
நெய்ம்மாண்ட நெடுநேமிப் பொருபடையாய்
நிமலாவே என்கின் றாளால்
கைம்மாண்ட கொடையுடையார் கண்ணபுரத்(து)
அம்மானைக் கண்டாள் கொலோ ?

2. மீனமர் வேற்கண் மிளிரணி வேய்த்தோள்
மின்னிடை மெல்லிய லாளைத்
தேனமர் துளவத் தெரியல்சூழ் மார்பில்
திகழ்வுறு மணியொடு பொருத்தி
வானமர் கங்கை வளர்சடை யானும்
மலரனும் நாடொறு வணங்கும்
தேனமர் சோலை மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணியைத் தொழுமின்.

—திரு. ராகவாசாரியார்.

183019

# சுமைதாங்கி

ஸ்ரீ. வி. எம். ஸ்ரீநிவாஸன், எம். ஏ.

தணிக்கை போர்டென ஒரு பொறுப்புள்ள ஸ்தாபனம் இருப்பதன் நோக்கம் பொது மக்களுக்கு உயர்தரமானதும், கீழ்த்தர உணர்ச்சிகளுக்குச் சற்றும் இடங்கொடாததும், ஆபாஸமில்லாததும், பயன் தரக்கூடியதுமான படங்களை அளிப்பதற்காகத்தான். இப்பேர்ப்பட்ட ஒரு பெரிய காரியத்தை அவர்கள் செய்வதில் பிசகுவார்களானால், தங்கள் கடமையில் தவறினவர்களாவார்கள். அப்படி பிசகாமல் கறாராகவும், கண்டிப்பாகவும் அனாவசியமான ஆபாசங்களை ஒவ்வொரு படத்தினின்றும் அகற்றுவதில் அவர்கள் கண்ணும் கருத்துமாக விருக்கவேண்டும். அப்போது அவர்கள் நிலையைக் கவனித்துப் பார்ப்போமாகில், சென்ஸார் போர்டை ஒரு சுமைதாங்கிக்கு ஒப்பாகக் கூறலாம்.

அதாவது, ஒரு படத்தைப் பரிசீலனை செய்கையில், அதில் ஒரு காக்ஷி பொதுஜன அபிவிருத்திக்கும், உயர்வுக்கும் ஹானி விளைவிக்கக் கூடுமென அதை அகற்றிவிட உத்தரவு பிறப்பித்தால், உடனே அவர்கள் பட முதலாளிகளின் சீற்றத்துக்கு ஆளாகிறார்கள். அதற்காகவா சென்ஸார்கள் பயப்பட வேண்டும்? "மிஸ் ஸுகுணா" வென்ற படத்தை அடியோடு தொலைத்துவிடவில்லையா? சில பட முதலாளிகள் தாங்கள் ஆயிரம் ஆயிரமாக செலவழித்து மிகப் பிரயாசையுடன் எடுத்த—அதுவும் கீழ்த்தர உணர்ச்சியுடன் கூடிய—ஒரு ஸீனை ஒரு நிமிடத்தில் சென்ஸார் கத்தரித்துவிட்டால் மிகவும் ஆத்திரப்படுவார்கள். தவிர, பொது ஜனங்கள் ஆபாஸத்தையே விரும்புவதாக எண்ணி இவர்கள் எடுத்த ஸீனை நீக்கிவிட்டவுடன், பெரிய ஏமாற்றமடைகிறார்கள்; அதனாலேயே படத்திற்கு வருவாய் குறைந்து விடுமென்றுகூட எண்ணுவதற்கு அவர்கள் தயங்குவதில்லை.

உண்மையில் பொது ஜனங்கள் அவ்வளவு மூடத்தனமாகவா இருக்கிறார்கள்? உயர்ந்த நீதிகளுடனும், அல்லது சம்பவங்களுடனோ கூடிய கதையை நன்கு நடித்துப் பார்க்கவே மக்கள் எதிர் பார்க்கிறார்கள். ஆகையால்தான் பரிசீலனையின்போது சில ஸீன்களை (முதலாளிகளுக்காகவோ அல்லது அபிப்பிராய பேதத்தினாலோ) கத்திரிக்காமல் விட்டுவிட்டாலோ, உடனே சென்

ஸார்கள் இரு பாணங்களால் தாக்கப்படுகிறார்கள். அதாவது ஒன்று பத்திரிகைகளின் பேரொலி, மற்றொன்று பொதுஜன வசை மூட்டை. முதலாளியின் சீற்றத்துக்கு ஆளாவதே மேல்; பத்திரிகைகளின் தாக்கலுக்கும், மக்களின் ஏமாற்றத்துக்கும் ஆளாவது கூடாது. இப்படிச் செய்தால்தான் நல்ல படங்களை ஜனங்களுக்குக் காண்பித்து, முக்கியமாக படிக்கத் தெரியாதவர்களுக்கு, நல்ல அறிவையும், உயர் நோக்கங்களையும் உண்டாக்க முடியும்.

சமீபத்தில் வெளியான இரண்டு தமிழ்ப் படங்களில் சில ஆபாஸக் காக்ஷிகளை எப்படி சென்ஸார்கள் கத்திரிக்காமல் ஜனங்களுக்குக் காட்ட அனுமதித்தார்கள் எனப் பெரிய கூக்குரல் கிளம்பியதுபற்றி நாம் ஒரு வார்த்தை கூற விரும்புகிறோம். அதாவது ஒரு படத்தை சென்ஸார் போர்டின் எல்லா அங்கத்தினர்களும் பார்த்துப் பரிசீலனை செய்து வெளியிட உத்தரவு கொடுப்பதில்லை. இரண்டு அல்லது மூன்று அங்கத்தினரே பார்த்துத் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கிறார்கள். அங்ஙனம் செய்வதில் அந்த ஒரு போர்ட்டுக்குள்ளேயே எல்லா அங்கத்தினர்களின் அபிப்பிராயங்களும் விவாதிக்கப்பட்டு ஒரு தனித்த பொது கொள்கையோ, திட்டமோ வைத்துக்கொள்ள சௌகரியமுமில்லாது போகிறது. அதனால் வெளிவரும் படங்களெல்லாவற்றிலும் ஒரே கொள்கையோ, மேன்மையோ காணப்படுவதில்லை. ஒரு படம் பூராவும் நன்றாக விருக்கிறது. ஒரு படம் சுமாரா யிருப்பினும் அதில் வரும் ஆபாஸங்களினால் மோசமாகத் தென்படுகிறது. இம்மாதிரியான நிலையை அகற்ற வேண்டுமானால், ஒவ்வொரு படத்தையும் எல்லா அங்கத்தினர்களும் பரிசீலனை செய்து மெஜாரிடி அபிப்பிராயத்தை ஏற்று, ஒரு திட்டமான கொள்கையுடன் உயர் ரகமாகவே படத்தை வெளியிட முயற்சி செய்யவேண்டும்.

பட முதலாளிகளும் தங்கள் கடமைகளை உணரவேண்டும். பொது ஜனங்களின் அவாவின்படி உயர்ந்த படங்களையும், செய்தித் துணுக்குகளையும் தயாரித்து, சென்ஸார்களின் கத்திரிக்கோலுக்கு வேலையைக் குறைத்து, சுமைதாங்கிக்குக் கௌரவத்தை யளிப்பதுடன், இந்திய ஸினிமாப் பட கலையின் அபிவிருத்திக்கும் தொண்டாற்றுவார்களென எதிர்பார்ப்போமாக.

# வெளி நாட்டுச் செய்திகள்

## பிரிட்டிஷ் மந்திரி சபையில் பிளவு

வெளிநாட்டு மந்திரி ஸ்ரீ. ஈடனுக்கும் பிரதம மந்திரி ஸ்ரீ. சேம்பர்லேனுக்கும் இத்தாலி சம்பந்தமாக தீவிரமான அபிப்பிராய பேதம் ஏற்பட்டுவிட்டதால், ஸ்ரீ. ஈடனும், அவரது உதவி மந்திரியும் ராஜிநாமா செய்துவிட்டார்கள். இதன் பலனாக பலமான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

ஸ்ரீ. ஈடன் ராஜிநாமா சம்பந்தமாக ஏற்பட்ட நெருக்கடியினால் இப்பொழுதுள்ள மந்திரி சபையிடம் நம்பிக்கையில்லை யென்று எதிர்க்கக்ஷியினர் கொண்டுவந்த தீர்மானம் பலத்த விவாதத்திற்கப்புறம் தோற்றது, சாதகமாக 168 வோட்டுகளும் எதிராக 330 வோட்டுகளும் கிடைத்தன.

சேம்பர்லேனின் செய்கையை இத்தாலி வரவேற்கிறது. அதன் பலனாக பிரிடனுக்கு விரோதமான செய்திகளைப் பரப்புவதை நிறுத்தியிருக்கிறது. ஜர்மனி இந்தக் கொள்கையை ஆதரிக்கிறது. ஆனால், பிரான்ஸில் ஏமாற்றமும், அமெரிக்காவில் சஞ்சலமும் ஏற்பட்டிருக்கின்றன.

## ஆஸ்ட்ரியா—ஜெர்மனி ஒப்பந்தம்

உடன்படிக்கையின் முக்கியமான பகுதிகளாவன:—ஆஸ்ட்ரியாவில் உள்நாட்டில் சாந்தி நிலவுவதற்காக விரிவான சமரஸ ஏற்பாடுகளை ஆஸ்ட்ரிய முதல் மந்திரி செய்வார். 1936 ஜுலை ஒப்பந்தம் நீடிக்குமென்று ஜெர்மனி உத்தரவாதமளித்தது. ஆஸ்ட்ரியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற உத்தரவாதத்தையும் ஜெர்மனி மீண்டும் ஊர்ஜிதம் செய்தது.

ஆஸ்ட்ரிய முதல் மந்திரி எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளாவன:— 1. 15-2-38க்கு முன் ராஜீயக் குற்றங்கள் இழைத்தவர்களெல்லோரும் விடுவிக்கப்படுவார்கள். ஆனால் அவர்கள் ஆஸ்ட்ரியாவிலேயே இருக்க வேண்டும். 2. புதிய மந்திரி சபையில் ஸெஸ்-இன்குவார்ட் ஒருவர்தான் புதிய நாஜி பிரதிநிதி; ஜெனரல் ஷ்மிட் ஏற்கெனவே இருந்த நாஜி. 3. பென்ஷனை இழந்த சர்க்கார் உத்யோகஸ்தர்களின் விஷயம் புனராலோசனை செய்யப்படும். 4. தேச பக்தர்களின் ஐக்கியத்திற்குட்பட்டு நாஜிகள் ராஜீய வேலைகளை நடத்த அனுமதிக்கப்படுவார்கள்.

1934 அரசியல் அப்படியே இருக்கும். ஜெர்மன் நாஜிக் கட்சி அதிகாரிகள் ஆஸ்ட்ரிய விவகாரங்களில் குறுக்கிடுவதைத் தடை செய்யும் நடவடிக்கைகளை ஜெர்மெனி இனி எடுத்துக் கொள்ளுமென்று தெரிகிறது.

## ஜப்பானிய தளபதி மாறுதல்

ராஜ தந்திர பேரங்களை நடத்துவதில் சமர்த்தரான ஜெனரல் ஹாடா சீனாவில் சண்டை ஆரம்ப முதல் தளபதியாக இருந்த ஜெனரல் மாட்ஸிக்குப் பதிலாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## ஸ்பெயின்

டெருலுக்கு அருகில் இரண்டு முக்கியமான இடங்களைக் கலகக் காரத் துருப்புகள் பிடித்துவிட்டன.

## சைனாவில் ஜப்பான் ஆக்ரமிப்பின் விஸ்தீரணம்

வட சீனாவில் ஜப்பான் இதுவரை கைப்பற்றி யிருக்கும் நிலப் பரப்பின் விஸ்தீரணம் 2,60,000 சதுரமைல். இது ஜப்பானின் விஸ்தீரணத்தை விடக் கொஞ்சந்தான் குறைவாம்.

மத்திய சைனாவில் 27,000 சதுர மைல் ஜப்பானின் ஸ்வாதீனத்தின் கீழ் வந்துவிட்டதாம்.

## ஹிட்லரின் பிரசங்க சாரம்

ஜப்பான் தோற்றால் ரஷியாவுக்கு அநுகூலமா யிருப்பதுடன் அதனால் ஏற்படும் ஆபத்து அதிகரிக்கும்...மஞ்சுகோவை ஜர்மனி அங்கீகரிக்கும். இத்தாலியுடனும் ஜப்பானுடனும் இருந்துவரும் உறவு தீவிரமாக்கப்பட வேண்டும்......ஸ்பெயினில் சர்க்கார் பக்கம் ஜெயித்தால் போல்ஷிவிஷம் பரவுமாதலால் கலகக்காரர் வெற்றியடையவேண்டும். ப்ரான்ஸ் சம்பந்தப் பட்டவரை ஸார் தேசம் திரும்பி வந்துவிட்டதால் யாதொருவித தகராறும் கிடையாது. ஜெர்மன் தொழில்களின் நிலைமை போதிய இட வசதியில்லாம லிருப்பதால் மிகவும் கடினமா யிருக்கிறது; ஆகையால் காலனி வேண்டு மென்கிற கூச்சல் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டேவரும். ஜர்மனி யைப்போலவே ஆஸ்டிரியாவுக்கும் சுய நிர்ணய உரிமை கோருவதை அலட் சியம் செய்யமுடியாது...நாஜிக் கட்சிக்கும் துருப்புகளுக்கும் தகராறு எதுவுமில்லை...1933ல் முதன் மந்திரியாக வந்தது முதல் வட்டி விகிதங்கள் குறைந்துவிட்டன. தேசீய வருமானம் உயர்ந்தது. ஏற்றுமதியும், பண்டங்களின் உற்பத்தியும் பெருகின. இந்த வருஷம் உருக்கு உற்பத்தி அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இருக்கும். 1932-ல் ஜர்மன் கப்பல் தொழிற்சாலைகளுக்குக் கிடைத்த ஆர்டர் 22,000 டன்கள். இந்த வருஷம் வர்த்தகக் கப்பல்கள் மட்டும் 11,20,000 டன் அளவுக்குக் கட்டப்பட்டிருக் கின்றன. அவசிய மேற்படுமாகில் எப்படித் தாக்குவதென்பது ஜெர்மன் ராணுவத்துக்குத் தெரியும் என்பதை வெளிநாட்டினருக்கு உத்தரவாதத் துடன் கூறமுடியும். நான் சமாதானத்தையே மிகவும் விரும்புகிறேன். எனினும் சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு மிகச் சிறந்த சாதனமாகிய ராணுவம் பலவீனப்படுவதை நான் அநுமதிக்கமாட்டேன்.

## ருமேனியாவுக்குப் புது அரசியல்

பிரஜைகளின் உரிமைகளையும் கடமைகளையும் விளக்கும் புது அரசியல் பிரகடனமா யிருக்கிறது. சர்க்காரின் அதிகாரத்தையும் சுதந் திரத்தையும் அது பலப்படுத்துகிறது. பார்லிமெண்ட் மெம்பர்களின் எண்ணிக்கை குறைகிறது. கிருஷிகர்களின் நிலவுரிமை உத்தரவாத மாகிறது. நெடு நாட்களாக ருமேனியாவில் இருந்துவரும் சிறுபான்மை யோருக்கும் சம உரிமை உண்டென்ற உத்தரவாதமும் கிடைக்கிறது.

# உள் நாட்டுச் செய்திகள்

## திருவாங்கூரில் மோட்டார் அதிகமாவதேன்?

'திருவாங்கூரின் பூப்பிரதேச அமைப்பு ரயில்பாதைக்கு ஏற்றதாக இல்லையாதலால், சமஸ்தான மோட்டார் சர்விஸ் ஆரம்பமாகிறது' என்று திவான் கூறுகிறார்.

## தந்தையும் தனயனும் ஒரே வகுப்பில்

பம்பாய் பிரதம மந்திரி ஸ்ரீ. பி. ஜி. கேர் ஹிந்தி வகுப்பில் தமது 10-வயது மகனுடன் சேர்ந்து உட்கார்ந்து படித்து, மூன்று பரீக்ஷைகளுக்கு ஆஜராகி முதன்மையாகத் தேறினாராம்.

## அஸ்ஸாம் மந்திரி சபைக்குக் கண்டம்

இந்தச் சபையின்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கை யில்லாத தீர்மானம் ஒரே வோட்டால் தோற்றது.

## பர்மாவில் இந்திய சர்க்கார் ஏஜண்டு

பர்மாவிலுள்ள இந்திய தொழிலாளரின் க்ஷேமாபிவிருத்தியைப் பாதுகாக்க ஸ்ரீ. சத்யநாதன், ஐ. ஸி. எஸ். இந்திய சர்க்கார் ஏஜண்டாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## எல்லைப்புறத்தினருக்கு தேசீயக்கொடியும், மோட்டாரும் பரிசு

ராஷ்டிரபதி ஸ்ரீ. சுபாஷ் சந்திரபோஸ் எல்லைப்புற மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ. கான்குலாம் மகம்மது கானுக்கு ஒலி பரப்பும் கருவி வைக்கப்பட்டதொரு மோட்டார் வான் பிரசாரம் செய்வதற்காகவும், தேசீயக் கொடி யொன்றும் அளித்துப்பேசுகையில்,

"வடமேற்கு எல்லைதான் இந்தியாவின் வாசற் கதவு, இதோ இந்த ஸ்வதந்திரக்கொடியை நாம் இன்று அங்குள்ள நமது சகோதரர்களுக்கு நமது மதிப்பையும் நன்றியையும் அவர்கள் செய்த தியாகம், சேவை ஆகியவைகளைப் பாராட்டியும் அனுப்புகிறோம்."

நம் தாய்நாட்டின் வாயிற் கதவான அம்மாகாணத்தில், 'காற்றில் பட்டொளி வீசப் பறக்கும். அங்கே அது பறப்பது சுதந்திரமடைய "நாம் பேசி நின்ற பெரும் பிரதிக்கினையை" அது உலகத்திற்கு எடுத்துக்காட்டும். மோட்டார்வான் எல்லைப்புற மாகாண கிராமங்களில் பிரசாரம் செய்ய மிக்க உதவியாக விருக்குமென நம்புகிறேன். இதனால் காங்கிரஸ் பலம் இன்னும் பெருகும்.

## தென்னுப்பிரிக்காவிற்கு இந்திய ஏஜண்டு

தற்போது லண்டனில் டெபுடி கமிஷனராக இருக்கும் **ஸ்ரீ. பி. ராம ராவ் ஐ. ஸி. எஸ்.** தென்னுப்பிரிக்கா ஏஜண்டு ஜெனரலாக நியமிக்கப் பட்டிருக்கிருர்.

## புதுக் காரியக் கமிட்டி

1. சுபாஷ் சந்திரபோஸ், 2. ஜவஹர்லால் நேரு, 3. சர்தார் பட்டேல், 4. அப்துல்கலாம் ஆஸாத், 5. ராஜேந்திர பிரஸாத், 6. அப்துல் கபார்கான், 7. ஸ்ரீமதி சரோஜினி நாயுடு, 8. புலாபாய் தேசாய், 9. டாக்டர் பட்டாபி சீதாராமய்யா, 10. சரத் சந்திர போஸ், 11. ஜெயராம்தாஸ் தௌலத்ராம், 12. ஜம்னுலால் பஜாஜ் (பொக்கிஷதார்) 13. ஆசாரிய கிருபாலினி (பொதுக் காரியதரிசி) 14. ஹரிகிருஷ்ண மெஹதாப்.

## மனைவி புருஷனை வென்ருள் !

ஹரிபுரம் காங்கிரஸில் நடந்த நூல் நூற்கும் போட்டியில் **ஸ்ரீமதி கிரிஜாபாய்** 4 மணி நேரத்தில் 25-ம் நம்பர் நூல் 2,640 கஜம் நூற்று முதல் பரிசு பெற்ருள். அவளது கணவன் **ஸ்ரீ. ஜெயராமுக்கு** இரண்டாவது பரிசு கிடைத்தது.

சிறுமிகள் போட்டியில் 6 வயதுள்ள பெண் பார்வதி 2 மணியில் 370 கஜம் நூற்று முதற் பரிசு பெற்ருள்.

## பிறப்பு, மணம், இறப்பு

விட்டல் நகரில் அரசியல் விஷயங்கள் ஒரு புறமிருக்க, லௌகீக விஷயமும் நடந்தது. மன்மதன் அவன் கணையைத் தொடுத்தான். நால்வர் உள்ளத்திலே பலத்த காயம்! ஓர் இன்ப முடிவு. இரண்டு கல்யாணங்கள் நடந்தன. இவனுக்கு நாம் சளைப்பதா என சிருஷ்டிகர்த்தா பிரும்மா நினைத்தார். அவ்வளவுதான்; காங்கிரஸுக்கு வந்த ஒரு கர்ப்பவதி அருமையான பெண் மகவு ஈன்ருள். தாயும் அடங்கா ஆனந்தங் கொண்டாள். ஆனல் துர்ப்பாக்யம் பாருங்கள்! யமன் பொருமை கொண்டான். தன் பங்கு சொத்தையாவெனக் கருதினன். பாவம்! ஒரு காங்கிரஸ் தொண்டர் தபதி நதியிலே மூழ்கி மாண்டார். கடுங் குளிர் தாங்காது இன்னெரு தொண்டர் ஜன்னி கண்டு மரித்தார்!

## காங்கிரஸ் நகர் தந்தியாபீஸில் விசேஷ அம்சங்கள்

காங்கிரஸின்போது இங்குள்ள தந்தியாபீஸ் மூலமாக 35 லக்ஷ வார்த்தைகள் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டன. தவிர, 2000 சாதாரண தந்திகளும் அனுப்பப்பட்டன. ட்ரங்க் டெலிபோனுக்கு 36 பேர் சந்தா செலுத்தியிருந்தார்கள். 1,200 தடவை டெலிபோனில் பேசினர்கள். விட்டல் நகரை இந்தியாவின் இதர பாகங்களோடு சேர்க்க 260 மைல் நீளமுள்ள செப்புக் கம்பிகள் வேண்டியிருந்தது.

# நூதன குறள்

இம்மைப் பயனுடையார் தவஞ் செய்யார்
எம்மைக் கிவருதவு வார். 1

காமம் மறையக் கருதுவான் எஞ்ஞான்றும்
ஏமம் அடைதல் இலன். 2

வேடம் பிறரை வெருவச் செயலன்றித்
தோடந் தராதோரீ சோல். 3

நெருப்பில் எரிக்கும் நெகிழ்பொன் போல்மாசும்
எரிப்பின் பொறித்தூய்மை இங்கு. 4

ஆக்கம் வருங்கால் அறிவும் முயற்சியும்
கேட்காமல் தானே வரும். 5

—திரு. ராகவாசாரியர்.

---


## ம ந் த ா கி னி

அல்லது

## கி ர ா ம த் தொ ண் டு

ஸ்ரீமான் எம். ஸி. ஸ்ரீநிவாஸன் எம். ஏ., பி. எல்.
எழுதிய அருமையான சமூக நாவல்

விலை அணு 8. தபாற் செலவு அணு 1—3 பை

முன் பணமனுப்பவும். வி. பி. கிடையாது.

காலஞ் சென்ற பண்டித திரு. ராகவாசாரியார்
இயற்றிய நூல்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| துருவ வெண்பா | 0 | 8 | திருமால் வெண்பா | 0 | 4 |
| சம்பு ராமாயணம் | 0 | 10 | சிவபிரான் துதி | 0 | 3 |
| நீதி மஞ்சரி | 0 | 5 | ராஜ ராஜேச்வரி | 0 | 2 |

ரூ. 1—8 முன்பணமனுப்புவோருக்கு 6 புத்தகங்களும் தபாற் செலவின்றி அனுப்பப்படும்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

# 51-வது காங்கிரஸ்

---

## வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ. தர்பார் கோபால்தாஸ்

நாங்கள் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட போர் வீரர்கள். எங்களுடைய தலைவரான சர்தார் வல்லபாய் பட்டேலின் உத்தரவுகளை நிறைவேற்றி வைக்கத் தயாரா யிருக்கிறோம்.

1921-ம் வருஷத்திய வேலைத் திட்டத்தில் எனக்கிருக்கும் நம்பிக்கை யாவருமறிந்ததே. இடையே அந்த வேலைத் திட்டத்தில் சில விவரங்கள் மாறுதலடைந்திருக்கின்றன. இருந்தாலும், அந்தத் திட்டத்தின் மூலம்தான் கடைசியில் நாம் சுதந்தரமடையப் போகிறோமென்பது என் நம்பிக்கை. அந்தத் திட்டததின் முக்கிய அம்சங்களான அஹிம்ஸை, சத்தியம், நிர்மாண வேலை ஆகியவைகள் நமது போராட்டத்தின் ஆரம்ப காலத்திற்கு அத்தியாவசியமானவைகளென்றால், இடைக்காலங்களைத் தாண்டி வந்திருக்கும் நமக்கு இப்போது அவை முன்பிருந்ததைவிட அதிக அவசியமானவை ஆண்டவனருளினால், நமது பிரயாணத்தின் கடைசிப்படிக்கு வந்துவிட்டோம். இப்போது அத்திட்டம் மிக அவசியம்.

இந்த அடிப்படையான கொள்கைகளில் உறுதியான நம்பிக்கை கொண்டவன் என்ற ஹோதாவிலும், ஒரு எளிய ஊழியன் என்ற ஹோதாவிலும், உங்களை இந்தத் தபதிநதிக்கரைக்கு வரவேற்கிறேன்.

## ராஷ்டிரபதி போஸ் செய்த பிரசங்கத்தின் சாராம்சம்

அடுத்த வருஷத்துக்கு இந்திய தேசீயக் காங்கிரஸின் தலைவனாக என்னை நீங்கள் தேர்ந்தெடுத்தது, இந்நாட்டின் இளைஞர்களுக்கு அளிக்கப் பட்ட கௌரவமாகவே நான் மதிக்கின்றேன். இதுவரை நம் பாரத தேவியின் அருந்தவப் புதல்வர்களும், புதல்விகளும் அலங்கரித்த இந்தப் பீடத்தில் அச்சத்துடனும், தயக்கத்துடனுந்தான் அமருகின்றேன். அதை நீங்கள் அளிக்கும் அநுதாபம், ஆதரவு முதலியவற்றுடன் ஓரளவுக்காவது செய்துவைக்க முடியுமென நினைக்கிறேன்.

ஸ்ரீமதி ஸ்வரூபராணி நேரு, ஸர் ஜகதீச சந்திர போஸ், டாக்டர் சரத் சந்திர சாட்டர்ஜி இவர்கள் மரணத்தைக் குறித்து நமது ஆழ்ந்த விசனத்தைத் தெரிவித்துக் கொள்வோமாக.

### பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வீழ்ந்துவிடும்

வானத்தில் பறந்து செல்லும் பக்ஷியின் திருஷ்டியுடன் மனித சமூகத்தின் சரித்திரத்தை ஆதி முதல் நாம் நோக்கினால், ஏகாதிபத்தியங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்தான் முதன் முதல் கண்ணில்படும். பண்டைக்கால ரோம் ஏகாதிபத்தியமும், தற்கால துருக்கி, ஆஸ்திரிய, ஹங்கேரி ஏகாதிபத்தியங்களும் இந்த நியதியை ரூபிக்கும் பிரகாசமான உதாரணங்களாகும். இந்தியாவில் தோன்றிய மௌரிய, குப்த, முகலாய ஏகாதிபத்தியங்களும் இந்த ரீதிக்கு மாறுபடவில்லை. அனுபவ பூர்வமான இச்சரித்திர உண்மைகளைக் கவனித்தால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் விதி வேறு

விதமாக இருக்கும் என்று நிர்த்தாரணம் செய்யத் துணிந்தவர் யார்? 1917-ல் ரஷிய ஜார் அரசன் ஏகாதிபத்தியம் வீழ்ந்தது. அப்போதேற் பட்ட கலகங்களினின்றும் ஸோவியத் ஸோஷலிஸ்டு குடியரசு ஐக்கியம் பிறந்தது. அதன் படிப்பினையைக் கற்க, பிரிட்டனுக்கு இன்னும் அவகாச மிருக்கிறது. பிரிட்டன் அப்படிச் செய்யுமா?

பல விடங்களில் இப்போது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குத் தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஏகாதிபத்யத்திற்குள்ளேயே மேலக் கோடியில் அயர்லாந்தும் கீழ்க்கோடியில் இந்தியாவும் உள்ளன. மத்தியில் பாலஸ்தீனமும், அதையடுத்து எகிப்தும், ஈராக்கும் இருக்கின்றன. ஏகாதி பத்யத்துக்கு வெளியே மத்தியதரைக் கடலில் இத்தாலியும், கீழ்க்கோடி யில் ஜப்பானும் நெருக்குகின்றன. இந்த இரு நாடுகளும் ராணுவ வெறியும், ஆக்ரமிப்புக் கருத்துமுள்ள ஏகாதிபத்ய நாடுகள். இத்தனை நிர்ப்பந்தங்களும் தொல்லைகளும சேர்ந்து அமுக்கினால் அந்த நெருக்கடி யைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் எத்தனை காலம் தாங்கமுடியும்?

## போய்க்கால்மீது ஏகாதிபத்தியம்

தொலை தூரங்கள் அற்பமாய்விட்டன. விமானப்படை யெடுப்பைச் சமாளிக்கும் தற்காப்பு ஏற்பாடுகள் எல்லாமிருந்தும் ஏதாவது ஐரோப்பிய நாட்டிலிருந்து வரக்கூடிய வெடி விமானப் படையொன்று லண்டனை என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

ஒரு பிரம்மாண்டமான ஏகாதிபத்தியம் களிமண்ணாலான பொய்க் காலின்மீது இருப்பதுபோல், பலஹீனமாய் நிற்பது முன்னெப்பொழு தையும்விடத் தெளிவாக, வெட்ட வெளிச்சமாகப் புலப்படுகிறது.

உலக சக்திகளின் பின்னலாட்டங்களிடையே இதற்கு முன் எப் பொழுதுமிருந்ததைவிட அதிகமான பலத்துடன் இந்தியா மிளிர்கின்றது. நம் நாடு 35 கோடி மக்கள் வாழும் பிரம்மாண்டமான தேசம். இந்த விரி வான நிலப்பரப்பும் பெருத்த ஜன சங்கியையும் இதுவரை நமக்குப் பலஹீன மாயிருந்து வந்திருக்கின்றன. நாம் ஒன்றுபட்டு நம்மை ஆளுகின்றவரைத் தைரியத்துடன் சமாளிக்கக் கூடுமானால், இன்று அது பெரிய சக்தி சாதன மாய்விடும். இந்தியாவைப் பிரிட்டிஷ் இந்தியாவென்றும் இந்திய சமஸ் தானங்களென்றும் பிரித்து வைத்திருப்பது முற்றிலும் ஒரு செயற்கைப் பிரிவினைதான் என்பதை முதலில் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். இந்தியா ஒரே ஐக்கியமாகும்.

## மைனாரிடிகள்

இந்தியாவிலுள்ள இதர வகுப்பினருக்குக் கிடைக்கும் அதே நன் மைகள் மைனாரிடிகளுக்கும் கிடைக்கும். மேலும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு தேசீய புனருத்தாரண வேலை அபேதவாத முறையில் நடத்தப்பட்டால் (அப்படித்தான் நடக்குமென்று நான் நம்புகிறேன்.) இல் லாதவர்கள் தான் நன்மையடைவார்கள்.

ஆகவே இந்தியா விடுதலை பெற்றால், முஸ்லீம்கள் பயப்படுவதற்கு ஏதுவுமில்லை; அதற்கு மாறாக அதன் மூலம் அவர்களுக்கு லாபம்தான்.

## சத்தியாக்கிரஹம்

சத்தியாக்ரஹம் என்பது சாத்வீக எதிர்ப்பு மட்டுமல்ல. தீவிரமாகவும் எதிர்க்கவேண்டும். ஆனால் அவ்வெதிர்ப்பு அஹிம்சைத் தன்மை பெற்றதாய் இருக்கவேண்டும். இதுதான் சத்தியாக்ரஹமென்று என் அபிப்பிராயம். மீண்டும் சத்தியாக்ரஹம் அல்லது சாத்வீக ஒத்துழையாமையை மேற்கொள்ளவேண்டியிருக்குமென்பதை நமது நாட்டினருக்கு ஞாபகப்படுத்தவேண்டியது அவசியம்.

பரீக்ஷார்த்தமாக மாகாணங்களில் பதவி ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இதனால், நம்முடைய எதிர்கால நடவடிக்கைகள் முற்றிலும் சட்ட வரம்புக்குட்பட்டதாகவே இருக்குமென்று அர்த்தமில்லை. பெடரேஷனை பலாத்காரமாக அமுலுக்குக் கொண்டுவந்தால், அதைத் தடுப்பதற்கு நாம் மீண்டும் பெரிய சட்டமறுப்பு இயக்கம் ஒன்றில் ஈடுபடவேண்டியிருக்கலாம்.

நமக்கும், கிரேட் பிரிட்டனுக்குமிடையே எதிர்கால உறவு எப்படி இருக்கும், அல்லது இருக்கவேண்டும் என்பதை இப்போதே சொல்லமுடியாது. அது பெரும்பாலும் பிரிட்டிஷாரின் மனப்பான்மையையே பொறுத்திருக்கும்.

## டிவாலரா உதாரணம்

இந்த விஷயத்தில் அயர்லாந்து குடியரசின் தலைவரான டிவாலராவின் மனப்பான்மை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. பிரிட்டிஷ் ஜனங்களிடம் தங்களுக்கு விரோதமில்லை யென்று டிவாலரா சொன்னார். அதையேதான் நானும் சொல்லுகிறேன். நமக்குச் சுய நிர்ணய சக்தி ஏற்பட்டுவிட்டால், பிறகு பிரிட்டிஷ் ஜனங்களுடன் நாம் சமாதானமாக இருக்கலாம்.

எந்தக் கட்சி இந்தியாவின் சுதந்திரத்தை அடைகிறதோ அதே கட்சிதான் இயக்கத்திற்குப் பின்னர் இந்தத் தேசத்தின் நிர்மாண வேலை சம்பந்தமான அதனுடைய சகல திட்டங்களையும் நிறைவேற்றி வைக்க வேண்டும். யார் அதிகாரத்தைப் போராடி அடைந்தார்களோ, அவர்களுக்குத்தான் இதனைச் சரியாக நிர்வகிக்கத் தெரியும். இந்த அதிகாரத்தைப் பெறக் கொஞ்சம்கூடப் போரில் பங்கெடுத்துக்கொள்ளாதவர்களை இதில் தூக்கி வைத்தால், புரட்சிகரமான புனர் நிர்மாண வேலைகளைச் செய்ய இன்றியமையாததான உன்னத லக்ஷிய நோக்கும், பலமும், நம்பிக்கையும் இவர்களுக்கு இருக்கவே இருக்காது.

## சுதந்திரத்திற்குப்பின் காங்கிரஸ் கட்சியின் வேலை

அரசியல் சுதந்திரம் பெற்ற பின்னர், காங்கிரஸ் கட்சி மறைந்துவிடுமென்ற சம்பவமே நிகழப் போவதில்லை.

ஜனநாயக முறையில் காங்கிரஸ் கட்சி இருப்பது வருங்கால இந்திய சர்க்கார் ஆட்சி, சர்வாதிகார நாஜி ஆட்சியாக மாறுவதைத் தடை செய்யும். இதுவுமின்றி, காங்கிரஸ் கட்சி ஜனநாயக முறையில் அமைந்

திருக்குமாதலால் தலைவர் மேலிருந்து திணிக்கப்படமாட்டார்கள். கீழிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

## சோஷலிஸம்

புனர் நிர்மாண வேலையின் விரிவான திட்டங்கள் என்ன? வறுமைப் பிணியைத் தொலைப்பது, கல்வியின்மை, நோய் முதலியவைகளை அகற்றுவது, சாஸ்திரீக முறையில் உற்பத்தி, விநியோகம் இருக்கும்படி செய்வது ஆகியவை சம்பந்தமான நமது முக்யமான தேசிய பிரச்னைகளைப் பலனளிக்கத்தக்க வகையில் சோஷலிஸ்டு முறையில்தான் நாம் சமாளிக்க முடியுமென்பதில் சந்தேகமில்லை.

## பொது பாஷை

தேசிய ஒற்றுமையை நாம் வளர்க்கவேண்டுமானால் நம் தேசத்திற்கு ஒரு பொது பாஷை வேண்டும். ஒரு பொது எழுத்தும் வேண்டும்.

பொதுவான தேசிய பாஷை சம்பந்தப்பட்டவரையில் ஹிந்திக்கும், உருதுக்கும் இருக்கும் வித்தியாசம் செயற்கையால் ஏற்பட்ட வித்தியாசமாகும். இந்தப் பொது பாஷையை நாகரி, அல்லது உருது எழுத்தில் எழுதலாம்.

## ஜனத்தொகை பெருக்கு

சுதந்திர இந்தியாவின் நீண்டகால திட்டம் சம்பந்தமாக நாம் கவனிக்கவேண்டிய முதல் பிரச்னை பெருகிவரும் நமது ஜனத்தொகையே. நமக்குப் போஷிக்கும் சக்தி வரும்வரையில் நமது ஜனத்தொகையை ஒரு தடைக்குட்படுத்துவது பெரிதும் விரும்பத்தக்கது. என்ன முறையில் இப்படிச் செய்வது என்பதைப்பற்றித் தற்சமயம் கூறவேண்டிய அவசியமில்லை.

## ஜமீன்தாரித்துவம் போகவேண்டும்

புனர் நிர்மாண வேலை சம்பந்தமாக நமது முக்கிய வேலை தேசத்தை விட்டு வறுமையை ஓட்டுவதே. அது ஜமீன்தாரி முறை ஒழிப்பதுள்பட நமது நில முறையில் ஒரு தீவிரமான மாறுதல் செய்யவேண்டியிருக்கும். விவசாயக் கடன்களைப் போக்கிவிட்டும் கிராமவாசிகளுக்குச் சௌகர்யமான வகையில் கடன் வசதி கிடைக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். வாங்குபவர்கள் தயாரிப்பவர்கள் நன்மையை உத்தேசித்துக் கூட்டுறவு இயக்கத்தை விரிவுபடுத்தவேண்டும். நிலத்திலிருந்து விளைச்சல் அதிகமாகக் கிடைப்பதற்காக விவசாயத திட்டம் சாஸ்திரீக முறையில் அமைக்கப்படவேண்டும்.

தொழிற்சாலைகளின் போட்டி யிருந்தபோதிலும் பிழைத்து நிற்கக் கூடிய குடிசைக் கைத்தொழில்களை உயிர்ப்பிக்கும் விஷயத்திலும் நாம் முனையவேண்டும். குடிசைத் தொழில்கள் அபிவிருத்தியடைய விசேஷமாக கையினால் நூற்பது, கைத்தறி நெசவு ஆகியவைகளுள்பட்ட விவசாய

சம்பந்தப்பட்ட தொழில்கள் அபிவிருத்தியடைய தாராளமாக இடமிருக்கிறது.

## மந்திரிப் பதவி

11 மாகாணங்களுள் 7 மாகாணங்களில் காங்கிரஸ் கட்சி மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இப்போது நாம் செய்யக்கூடியது என்னவெனில், அந்த மந்திரிப் பதவிகளைப் பயன்படுத்தி, காங்கிரஸின் சக்தியையும் பலத்தையும் ஸ்திரப்படுத்திக் கொள்வதுதான்.

நமது மந்திரிகள், சர்க்காரை நடத்தும்போது காங்கிரஸ் இதற்குமுன் சாதித்த வெற்றிகளைக் காப்பாற்றிச் சக்தியைப் பெருக்குவதற்கு என்ன செய்யவேண்டும்.

முதன் முதலாக, அதிகார வர்க்க கோஷ்டியின் அமைப்பையும் தன்மையையும் மாற்றவேண்டும். இதை நாம் செய்யவில்லையாயின், காங்கிரஸ் கட்சிக்கு அனர்த்தம் ஏற்படக்கூடும்.

## மந்திரிகள் செய்யவேண்டியவை

இரண்டாவதாக மாகாணங்களிலுள்ள காங்கிரஸ் மந்திரிகள் தாங்கள் பதவியிலிருக்கும் காலத்தில் கல்வி, சுகாதாரம், மதுவிலக்கு, ஜெயில், நீர்ப்பாசனம், கைத்தொழில், நிலவரி, தொழிலாளர்கள் க்ஷேமம் முதலிய துறைகளில் புதிய திட்டங்களைக் கொண்டுவரவேண்டும். இந்த விஷயத்தில் சாத்தியமானவரையில் இந்தியா பூராவுக்கும் ஒரேமாதிரியான கொள்கையை வகுப்பதற்கு முயற்சிகளெடுத்துக் கொள்ளவேண்டும்.

மாகாண சர்க்கார்களின் முன்பு வரக்கூடிய பிரச்னைகளைப்பற்றிக் காரியக் கமிட்டி மெம்பர்களுக்கு விவரங்கள் தெரிந்திருக்கவேண்டும்.

சுதந்திரப் போராட்ட சேனைக்கு வழிகாட்டும் மூளை காரியக் கமிட்டி என்பதே என் அபிப்பிராயம்.

டிவாலராவின் குடியரசு சர்க்காரும் இப்படித்தான் வேலை செய்து கொண்டிருந்தது. எகிப்தில் வபத் கக்ஷி அதிகாரத்திற்கு வருமுன் அதன் நிர்வாக சபை இந்த வேலையைத்தான் செய்து வந்தது.

'சுதந்தர இந்தியாவைப் பார்ப்போம்; நம்முடைய ஆயுட்காலத்திற்குள்ளாகவே சுதந்தரம் பெற்ற இந்தியாவைக் காணுவோம்' என்று நினைப்பவர்களில் நானும் ஒருவன்.

## சமஷ்டியை எதிர்ப்பது ஏன்?

சமஷ்டி திட்டத்தில் இருக்கும் மிகவும் ஆட்சேபகரமான அம்சங்களில் ஒன்று, வர்த்தக நிதி சம்பந்தமான பாதுகாப்புக்களைப்பற்றியது. பாதுகாப்பு விஷயங்கள், அந்நிய நாட்டுக் கொள்கை இவற்றில் இனியும் பொது மக்களுக்கு அதிகாரம் அளிக்கப்படாமல் இருப்பது மட்டிலுமல்லாமல், நிர்வாகச் செலவில் பெரும்பான்மையான பாகமும் அவர்கள் அதிகாரத்திற்கு மீறியதாகவே இருந்துவரும்,

சமஷ்டி திட்டத்தை நாம் எவ்வளவு வெற்றிகரமாக எதிர்க்கிறோமோ அதைப் பொறுத்தே நமது வருங்கால அரசியல் வாழ்வும் இருக்கிறது.

சட்ட பூர்வமான அமைதியான முறைகள் எல்லாவற்றையும் கையாண்டு—அரசியலமைப்பு விதிக்குட்பட்டது—மட்டுமல்ல; சமஷ்டியை எதிர்த்துப் போராடுவோம்.

இறுதியில் நம் கையிலிருக்கும் கடைசி இயந்திரமான சத்தியாக்ரஹ முறையை ஒருவேளை கையாளவேண்டியுமிருக்கலாம்.

இப்படிப்பட்ட போர் தொடுக்கவேண்டிய சந்தர்ப்பம் வருங்காலத்தில் ஏற்பட்டால், இயக்கம் பிரிட்டிஷ் இந்திய எல்லைக்குள் மட்டிலும் நடைபெறாது, சமஸ்தானங்களிலும் பரவும் என்பதில் சந்தேகமே இல்லை.

## தொண்டர்படை அவசியம்

சமீபத்தில் பலனுள்ள ஒரு போராட்டத்தை நடத்திச் செல்ல நமது சொந்த வீட்டை ஒழுங்காக வைத்துக்கொள்வது மிகவும் அவசியமாகும்.

பயிற்சி பெற்ற உத்தியோகஸ்தர்களால் நிர்வகிக்கப்படும் ஒரு கட்டுப்பாடும் ஒழுங்குமுள்ள தொண்டர்படை மிகவும் அவசியமானது. மேலும் நமது அரசியல் ஊழியர்களுக்கு கல்வியும், பயிற்சியும் அளிக்கப்பட வேண்டும. அப்போதுதான் வருங்காலத்தில் நாம் நல்ல தலைவர்களை உற்பத்தி செய்யமுடியும்.

காங்கிரஸ் ஊழியர்கள் ஏராளமாக தொழிற் சங்கங்கள், கிருஷிகர் ஸ்தாபனங்கள் இவைகளில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும்.

தங்கள் தேசத்தின் அரசியல் விடுதலைக்காகப் போராடும் எல்லோருக்கும் காங்கிரஸ் ஒரு பொது மேடை என்பதை உணர்ந்து, அதன்படியே காங்கிரஸை நடத்தினால், காங்கிரஸுக்கும், மேற்படி இரண்டு ஸ்தாபனங்களுக்கும் இடையில் ஒத்துழைப்பு ஏற்படுவது மிகவும் சுலபமாக விருக்கும்.

## அபேதவாதக் கட்சி

காங்கிரஸிற்குள்ளேயே காங்கிரஸ் அபேதவாதக் கட்சி யிருக்கிறது. நான் அதில் மெம்பருமல்ல. ஆனபோதிலும் ஆரம்பகாலத்திலிருந்தே அதன் பொதுக் கொள்கைகள், போக்கு முதலியவைகள் எனக்குப் பிடித்தமாயிருந்து வந்திருக்கின்றன. முதலாவதாக, தீவிரவாதிகள் ஒன்றுதிரண்டு ஒரு கட்சியாக இருப்பது விரும்பத்தக்கதே. இரண்டாவதாக, தீவிர வாதிகள் கோஷ்டி என்று ஒன்று இருக்கவேண்டுமானால், அது கட்டாயம் அபேதவாதக் கொள்கைகளுடையதாய்த் தானிருக்கவேண்டும்.

அபேதவாதம் நம் முன்புள்ள அவசரமான பிரச்னையல்ல; ஆனபோதிலும் அரசியல் விடுதலையைப் பெறும்போது அபேதவாதத்திற்குத் தேசத்தைத் தயார்படுத்த அபேதவாதப் பிரசாரம் அவசியமாகும்.

## வெளிநாடுகளும் இந்தியரும்

வரப்போகும் வருஷங்களில் சர்வதேச அபிவிருத்திகள் இந்தியாவில் நமது போராட்டத்திற்குச் சகாயமாக இருக்கும். ஆனால், உலகநிலை ஒவ்

வொரு நிமிஷமும் எப்படி யிருக்கிறது என்பதை நாம் சரியாய் உணர்ந்து அதை எப்படி பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். எகிப்தின் பாடம் நம்முன் உதாரணமாக நிற்கிறது. ஒவ்வொரு தேசத்திலும் இந்தியாவிடம் அநுதாபங் காட்டுபவர்களும் வசீகரணம் கொண்ட ஆண்களையும் பெண்களையும் கொண்ட ஒரு கோஷ்டியை அபிவிருத்தி செய்வதையே நாம் லட்சியமாகக்கொண்டு வேலை செய்யவேண்டும்.

## சினிமாவும் தேசீயமும்

இம்மாதிரி ஒரு வசீகரண கோஷ்டியைச் சிருஷ்டித்து அதை அபிவிருத்தி செய்வதற்கு அந்நியப் பத்திரிகைகள் மூலம் பிரசாரம் நடத்துவது இந்தியாவில் தயாரித்த சினிமாப் படக்காட்சிகள் மூலமும் கலைப் பொருட் காட்சிகள் மூலமும் வேலை செய்வது முதலியவை பெரிதும் உதவியாக இருக்கும். இந்த வேலையில் வெளிநாடுகளில் இருக்கும் இந்திய மாணவர்கள் உதவி செய்யலாம். ஆனால், அவர்களின் தேவைகளையும் இதர சௌகரியங்களையும் இந்தியாவிலுள்ள நாம் நன்றாய்க் கவனித்துக் கொள்ளவேண்டும். வெளிநாடுகளிலிருக்கும் இந்திய மாணவர்களுக்கும் தாய்நாட்டிலுள்ள இந்தியத் தேசியக் காங்கிரசிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டும். ஒவ்வொரு சர்வதேசக் காங்கிரஸ் அல்லது மகாநாட்டிற்கும் இந்தியர்கள் போய் வருவது என்று நிச்சயம் செய்துகொள்ள வேண்டும். இத்தகைய மகாநாடுகளில் பங்கெடுத்துக்கொள்வது இந்தியாவுக்கு நல்ல பிரசாரம் செய்வதாக இருப்பதுமன்றி மிகவும் உபயோகமுள்ளதாகவுமிருக்கும்.

## உலக அபிப்பிராயத்தின் அவசியம்

இந்தியாவுக்கு எதிராக இப்போது செய்யப்படும் பிரசாரம் என்ன? இந்தியா ஒரு நாகரீக மற்ற தேசம். ஆதலின் நம்மை நாகரீகப்படுத்த, பிரிட்டிஷ் மக்கள் அவசியம் என்று பிரசாரம் செய்யப்படுகிறது. இதற்குப் பதிலாக நம்மைப்பற்றியும் நாகரீகத்தைப்பற்றியும் உலகத்திற்கு நாம் தெரியச் செய்யவேண்டும். அப்போது இந்தியாவின் கோரிக்கை ஏகோபித்த உலக அபிப்பிராயததின் முன்பு அசைக்க முடியாததாகிவிடும்.

ஆசியா, ஆப்பிரிக்கா இவைகளின் பல்வேறு பகுதிகளிலும் குறிப்பாக ஜான்ஸிபார், கென்யா, தென் ஆப்பிரிக்கா, மலேயா, இலங்கை முதலிய இடங்களிலும் நமது நாட்டு மக்கள் முன்புள்ள கஷ்டங்களையும் சோதனைகளையும் பிரச்னைகளையும் பற்றி மறக்க முடியுமா? இவர்கள் விவகாரங்களில் காங்கிரஸ் எப்போதும் கூரிய சிரத்தையெடுத்து வந்திருக்கிறது— இனியும் அவ்வாறே எடுத்துவரும். அவர்களுக்காக நாம் இன்னும் அதிகம் செய்யமுடியவில்லை; ஏனென்றால் தாய்நாட்டில் நாம் இன்னும் அடிமைகளாயிருப்பதே காரணம்.

## அரசியல் கைதிகள்

இன்றையதினம் தேசத்தில் முக்கியமான பிரச்னை இதுதான். எனது பிரசங்கத்தை முடிக்குமுன் இதைச் சொல்லிவிடுகிறேன். இதுதான்

பந்தோபஸ்துக் கைதிகளையும் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யும் விஷயம். சமீபத்தில் நடந்த உண்ணாவிரதங்கள் இந்தப் பிரச்னையை முன்னணிக்குக்கொண்டு வந்துவிட்டதுடன், பொது ஜனங்களின் பூரா கவனத்தையும் இதன்மீது இழுத்திருக்கின்றன. இனிவரும் நாட்களில் இவ்விஷயத்தைப் பொறுத்தமட்டில் காங்கிரஸ் மந்திரி சபைகளைப்பற்றிப் பொது ஜனங்கள் புகார் செய்ய எதும் இடமில்லாமல் விஷயங்கள் நடக்குமென்றே நான் உறுதியாக நம்புகின்றேன்.

## நோயும் பட்டினியும்தான் வெகுமதிகள்

சிறையிலும் காவலிலும் வாடும் கைதிகள், பந்தோபஸ்துக் கைதிகள் இவர்களின் கதை மட்டும் பரிதாபமானதல்ல. ஆனால, சில சமயங்களில் விடுதலையடைந்தோர்களின் நிலைமையும் பரிதாபமானதுதான். அவர்கள் உடல் நிலை சிதறி, க்ஷயம், காசம், இவைகளுடன் வீடு திரும்புகின்றனர். கடும் பட்டினிதான் அவர்களைப் பயமுறுத்துகிறது. அவர்களது அருமைத் தாய், மனைவி, குழந்தைகள் இவர்களின் புன்சிரிப்பு அவர்களை வரவேற்பதில்லை. கண்ணீர்தான் வரவேற்கிறது; தங்கள் தேசத்தின் ஊழியத்தில் தங்களிடமுள்ளனவெல்லாம் கொடுத்து, திரும்பவும் வறுமையையும், துன்பத்தையும் பெறுபவர்களிடம், நமக்குக் கடமை யில்லையா?

ஆதலின் தங்கள் தேசத்தை நேசித்த குற்றத்திற்காகக் கஷ்டப்பட்டவர்களுக்காக நமது ஹிருதய பூர்வமான அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்கள் துன்பத்தைத் தணிக்க நம்மாலான உதவியையும் அவர்களுக்குச் செய்வோமாக.

## காங்கிரஸ் பொதுமேடை

பாமர மக்களது போராட்டத்தின் மகத்தான ஸ்தாபனமே காங்கிரஸ். அதில், தீவிரவாதிகளும் இருக்கலாம்; மற்றவர்களும் இருக்கலாம். இந்திய விடுதலைக்காகப் போராடும் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்பு ஸ்தாபனங்களுக்கும் அதுதான் பொது மேடை.

தீவிர வாதிகள் தங்கள் சக்தி யெல்லாவற்றையும் செல்வாக்கையும் உபயோகித்து, காங்கிரஸை ஜனநாயகத்துவம் வாய்ந்ததாக்கவேண்டும்.

முடிவாக, இன்னும் பல்லாண்டுகளுக்கு மஹாத்மாஜீ நம்மிடையிலிருந்து சேவை செய்யும்படி கடவுள் அனுக்ரஹிப்பார் என்ற எனது திடமான நம்பிக்கையை உங்கள் சார்பாக நான் இங்கு அறிவிக்கிறேன்.

மனக்கசப்பு, அசூயை, துவேஷம் இவைகளினின்று நமது போராட்டத்தைப் பிரித்து, அதைப் புனிதப்படுத்த, அவர் நமக்கு வேண்டும். இந்தியா சுதந்திர மடையவேண்டின் அவர் நமக்கு வேண்டும்; மனித வர்க்கம் உய்ய அவர் நமக்கு வேண்டும்.

நமது போராட்டம் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை மட்டும் எதிர்ப்பதல்ல—உலக ஏகாதிபத்யத்தையே எதிர்ப்பதாகும். அதற்கு, முன்னால் குறிப்பிட்டதுதான் திறவுகோல். ஆதலின் நாம் இந்தியாவுக்காக மாத்திரம் போராடவில்லை. மனித ஜாதிக்காகவும் போராடி வருகிறோம். இந்தியா விடுதலை யடைந்ததென்றால் மனித வர்க்கமும் காப்பாற்றப்பட்டதென்றுதான் அர்த்தம்.

# ஹரிபுரா காங்கிரஸ் துணுக்குகள்

—:(o):—

## இடத்தின் விசேஷம்

காங்கிரஸ் நகரின் நீளம் இரண்டரை முதல் 3 மைல் வரையிலுமிருக்கும். அகலம் 6 அல்லது 7 பர்லாங்கு. மொத்த விஸ்தீரணம் 450 ஏக்கரா. எல்லாம் கிராமாந்திர மயமாயிருக்கிறது.

காங்கிரஸ் மகாசபை கூடுவதற்குப் 'பந்தல்' கிடையாது. அகண்ட திறந்த வெளிதான்.

பார்க்க வருவோர் அமர, காலரிகள் கட்டும் சிரமத்தை இயற்கையன்னை பெரிதும் குறைத்து விட்டாள். எதிரெதிரே மேட்டிலிருந்து சரிந்து வருகிறது பூமி. இரு சரிவுக்கும் நடுவிலுள்ள பள்ளத்திலேதான் அக்கிராசன மேடை கட்டப்பட்டிருக்கிறது.

## சாரதியின் தியாகம்

ரதத்தை ஓட்டியவர் ஓர் மகா தியாகி. சிதாபாய் பிக்காபாய் என்ற அவர், சென்ற சட்ட மறுப்பிலே ஏராளமான சொத்தை யிழந்து, "இனி இந்தப் பிரிட்டிஷ் ராஜ்யத்திலே காலடி வையேன்" என்று சபதம் செய்து, பரோடாவில் போய்க் குடியேறியவர். ஸ்ரீ. சுபாஷின் ரதத்தை ஓட்ட வேண்டுமென்று மகாத்மாஜீ அவரை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்; சர்தார் படேல் நேரே போய் அவரை அழைத்தார். இந்த வேண்டுகோள்களுக்கிணங்கியே அவர் வந்தார்.

## 51-க்கு வந்த அதிர்ஷ்டம்

காங்கிரஸ் மகாசபை கூடுமிடத்துக்கு 51 வாசல்கள் அமைத்துள்ளர். ராஷ்டிரபதியின் ஊர்வல ரதத்தை 51 காளைகள் இழுத்தன. ஊர்வலத்தின்போது 51 பாட்டுகள் பாடப்பட்டன. இது 51-வது காங்கிரஸ் கூட்டமல்லவா? அதற்காக 51-க்கு ஒரு மரியாதை.

## ரேடியோவின் ஒத்துழையாமை

காங்கிரஸ் நிகழ்ச்சிகளையும் பிரசங்கங்களையும் ரேடியோ மூலம் பரப்ப, அகில இந்திய ரேடியோக் கம்பெனியார் ஒப்புக் கொண்டிருந்தார்களல்லவா? அதை இப்போது முடியாதென்று மறுத்து விட்டார்களாம்.

கவர்னர்கள்தான் மந்திரிகளோடு மாறுபட்டனர். ரேடியோக் கம்பெனிக்கு என்ன வந்தது?

காங்கிரஸ் சரித்திரத்திலேயே இந்த வருஷத்திய வரவேற்புக் கமிட்டித் தலைவரின் பிரசங்கமே மிகவும் சுருக்கமானது.

* * * *

கிருஷிகர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் காங்கிரஸ் பிரவேசக் கட்டண விஷயத்தில் சலுகை அளிக்கப்பட்டது.

* * * *

இதற்குமுன் குஜராத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மகா சபைகளுக்கு அக்கிராசனராயிருந்தவர்களும், பாரத நாட்டின் சுதந்தரத்துக்காகக் கஷ்ட மனுபவிக்கும் மாகாணங்களில் முதன்மை ஸ்தானம் வகிக்கும் வங்காளத்தைச் சேர்ந்தவர்களே.

## அடுத்த காங்கிரஸ் மகா கோசலத்தில்

அடுத்த காங்கிரஸை தங்களது மாகாணத்திற்கு அழைத்த தமிழ்நாடு, மகாகோசலம் இவற்றிற்கு முறையே 52, 110 வோட்டுகள் கிடைத்ததால், மகாகோசலத்தில் அடுத்த காங்கிரஸ் கூடுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## கிஸான் சபைகள்

"கிஸான் சபைகள் அமைத்துக்கொள்வதற்கு கிஸான்களுக்கு உரிமையுண்டென்பதைக் காங்கிரஸ் அங்கீகரிக்கிறது. ஆனால், காங்கிரஸின் அடிப்படையான கொள்கைகளுக்கு முரணான எந்தக் காரியங்களிலும் காங்கிரஸ் சம்பந்தப்படமுடியாது."

## சுதந்திரப் போராட்டத்தின் மூன்று பிரிவுகள்

"இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று, காங்கிரஸ் தோன்று முன் இருந்த காலம். இரண்டாவது காங்கிரஸுக்குப் பின். மூன்றாவது மிக முக்கியமான காலம் இதுதான்; காந்திஜி காங்கிரஸுக்கு வந்ததற்கு அப்புறம்.

காந்திஜி காங்கிரஸுக்கு வந்ததும் கொள்கைகள் திருத்தி யமைக்கப்பட்டன. விவசாயிகள், தொழிலாளர்கள், மத்திய வகுப்பினர், பணக்காரர்கள் ஆகிய யாவரும் அடங்கியது காங்கிரஸ் ஸ்தாபனமாகும். நமது சுதந்திர போராட்டத்திலே நாம் ஒரு நிச்சயமான நிலைமையை இன்று அடைந்து விட்டோம்." —ஸ்ரீ. அப்துல்கலாம் அஸாத்.

## தேசீயக் கொடியின் கீழ் பிரதிக்ஞை

"இந்தப் புனிதமான சமயத்தில், "நமது லட்சியத்தை அடையு மட்டும் நாம் போராடுவோமாக; அது வரையில் ஓய்வென்பதில்லை" என நம் வாக்குறுதியை மீண்டும் புதுப்பிப்போமாக. இந்தத் தெய்வீக ஸ்தலத்தில், மாசு மருவின்றி நிர்மலமாகப் பிரகாசிக்கும் நீல வானத்தை நோக்கிப் பறந்து கொண்டிருக்கும் சின்னமான மகத்தான மூவர்ணக் கொடியின் கீழ் குழுமியுள்ள இந்தப் பிரம்மாண்டமான கூட்டத்தின் முன்பு

பூரண சுதந்திர மடைவதென்றும், வெற்றி நமதாகும் வரையில் வழியில் தயங்குவதில்லை யென்றும், ஒரு நிமிஷம்கூட நமது போராட்டத்தை நிறுத்துவதில்லை யென்றும் மீண்டும் ஒருதரம் பிரதிக்ஞை செய்வோமாக.

இந்தப் பிரதிக்ஞையின் ஞாபகார்த்தமாக நமது சுதந்திர இயக்கத்தின் இந்தச் சின்னத்தை என்றும் நம்மனதில் இருத்திக்கொள்வோமாக. கொடியின் மானத்தைக் காக்க நாம் ஏகோபித்த குரலில் கர்ஜிப்போமாக. சுதந்திரமடைவதென்று நாம் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டாகி விட்டது. அந்தப் பிரதிக்ஞையை நாம் காப்பாற்றுவோமாக. நமது கொடிக்கு நாம் வெற்றி கூறுவோமாக" —ராஷ்டிரபதி.

## சமஸ்தானங்களைப்பற்றிய தீர்மானம்

"சமஸ்தானங்களில் காங்கிரஸ் கமிட்டிகள் காரியக் கமிட்டி ஆதிக்கத்திற்குட்பட்டும் கட்டளைப்படியும் நடக்க வேண்டுமென்றும், இவைகள் காங்கிரஸின் பெயரில் சட்டசபை விவகாரம், சமஸ்தானத்திற்குள் சட்ட மறுப்பு இயக்கங்களை மேற்கொள்ளக்கூடாது என்றும் காங்கிரஸ் மகா சபை கட்டளையிடுகிறது."

## சமஸ்தானங்களும், மாகாணங்களும்

சைன்யம் எல்லோருடனும் முன்னேறிப் போக வேண்டும். ஓநாய் சாப்பிட ஏதுவாக குழந்தையையும் மனைவியையும் விட்டு விட்டு, கணவன் மட்டும் முன்னேறிச் செல்லலாமா?

பிரிட்டிஷ் மாகாணங்கள்மீது குண்டு வீச இந்த 501 சமஸ்தானங்களும் பீரங்கி மேடைகள் என்பதை நீங்கள் அறிந்தீர்களா? இன்று அயர்லாந்தில் அல்ஸ்டரில் நடப்பதென்ன? இங்கே ஒரு புறம் அக்னி; இன்னொருபுறம் அல்ஸ்டரா?

பின்னர் ஒரு காலத்தில் உங்கள் நிலைக்குச் சமஸ்தானங்கள் ஒரு ஜால வித்தையினால் கொண்டு வந்து விடலாமென்பது உங்கள் யூகமா? இந்த சுவர்க்க லோகத்தில் இருக்காதீர்கள். ஏனெனில் இதில் புத்திசாலிகளில்லை." —டாக்டர் பட்டாபி.

## தேசீயக் கல்வியே அடிமையைப் போக்கும்

"தேசத்தில் இன்று ஆங்கிலம் சக்ராதிபத்யம் செலுத்துவது வருந்தத்தக்கது. நமது தாய்ப் பாஷைப் பண்டிதர்கள் அவர்களுக்குரிய கௌரவத்தை அடைவதில்லை. ஏனெனில் அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது. இதுதான் நமது அடிமையின் முத்திரை. இந்தியாவின் பாஷைகளில் ஒன்றின் மூலமாகவே கல்வி போதிக்கப்பட வேண்டுமென்பது பெரிதும் வற்புறுத்தப்படவேண்டிய விஷயமாகும்." —ஸ்ரீ. டாண்டன்

# ஆசிரியரும் அன்னையும்

—(o)—

தினம் ஒரு சினிமாப் படம் தயாராவதுபோல் தினம் ஒரு ஸினிமாப் பத்திரிகையும் உதயமாகிக் கொண்டே இருக்கிறது. பத்திரிகைகளின் விருத்தியிலிருந்து பொதுமக்கள் அவைகளை நன்கு ஆதரிப்பது விளங்குகின்றது. அங்ஙனம் ஆதரிக்காவிடின் ஒன்றிரண்டு மாதங்கள் கூட பத்திரிகை நடை பெற முடியாது. பொதுமக்கள் பத்திரிகைகளிடம் இத்தனை ஆர்வம் காட்டுவதிலிருந்து அவர்களுடைய விசாலமான புத்தியில் சினிமாப் படக் கலையின் ஒவ்வொரு அம்சத்தையும் பத்திரிகையின் வாயிலாக நன்கு தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அவாவும், இனியாவது வெளிவரும் படங்கள் உயர்ந்த முறையில் வரவேண்டுமென்ற பேராவலும் நிறைந்திருப்பதை விளக்குகிறது.

பொது மக்களின் உயர்ந்த கருத்துள்ள இந்த ஆவலை நம் நாட்டுச் சினிமாப் பத்திரிகைகள்தான் முன் நின்று பூர்த்தி செய்வதோடு, நல்ல படங்களையே முதலாளிகள், தற்காலத்தில் மக்களுக்குப் பயன்படும்படியான முறையில் கொண்டுவரும்படி, தகுந்த கட்டுரைகளின் மூலம் போதிக்கவேண்டும். கணக்கற்ற படங்கள் தினம் ஒன்று வெளிவருவதில் ஒன்றும் பிரயோஜனமில்லை; படத்தினால் பலன் உண்டா வென்பதுதான் முக்கிய கொள்கையா யிருக்கவேண்டும்.

பிரபல நாடக, சினிமா நடிகரான மிஸ்டர் எம். கே. ராதா 'ஆடல் பாடல்' மூன்றும் ஆண்டு மலரில், 'எத்தனை உயர்ந்த நடிகராயினும் கதையும் வசனமும் சுவையில்லையேல் நடிகரின் பெயருக்கே ஹானியாகிற' தென்கிற கருத்துடன் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அம்மாதிரி எழுதியிருப்பது அவசியமேயாகும். அவர் கூறியுள்ள ஆதாரங்கள் ஒவ்வொரு முதலாளியும், டைரக்டரும் கவனிக்கத் தக்கவை. கதைப் போக்கின் முக்கியத்தைப் பற்றியும், அதற்குகந்த நடிகர்களை யமைக்க வேண்டியதைப் பற்றியும் நக்ஷத்திர நடிகர் மிஸ்டர் கே. பி. கேசவன், 'மூவி ஹெரால்ட்' பொங்கல் மலரில் குறிப்பிட்டுள்ளதும் கவனிக்கத் தக்கதாகும்.

கதை எழுதும் ஆசிரியரின் உள்ளத்தின் உணர்ச்சி வேகமும், அதன் சுவையும் ஓர் தனி ஸ்தானம் பெற்றதாகும். அப்படிப் பட்ட முறையில் எழுதியுள்ள கதையை அந்த உணர்ச்சியின் ஜீவ தாது குறையாமல் கூடியவரையில் படமெடுத்தால்தான் படமும், கதையும், நடிப்பும் சோபிக்கும். அந்த ஒரு சிறு விஷயத்தைக் கவனிக்காமல், கதையை மனம்போன போக்கில் மாற்றி படமெடுத்தால் எப்படி சுவைக்க முடியும்?

புத்தகத்திலுள்ளபடி எல்லாம் படமெடுக்க முடியாதென்பது உண்மையே. அதைச் சாத்தியமானவரையில் ஸாரங்குன்றாது அவசியமான இடங்களில் மாறுதல் செய்யவேண்டியது முக்கியம். அவ்வாறு செய்வது பொருத்தமாயும் பட நுணுக்கங்களுக்கு வேண்டிய அழகுடனும் பிரகாசிக்கும். நவரசமுங் கொண்ட கதையைக் குட்டிச் சுவர் செய்து ஒரே ஹாஸ்யமாயும், ஆபாஸமாயும், அல்லது முழுதும் சிருங்காரமாயும் சிற்றின்பமாயும் எடுத்து விட்டால், எவ்விதம் ருசியுண்டாகும்? முதல் தரமான நடிகர் நடிகைகள், டெக்னீஷியன்கள், டைரக்டர் முதலியோர் அமைந் திருப்பினும் கதைதான் படத்தின் ஜீவநாடி என்பதை முதலாளிகள் அடியோடு மறந்து விடுகிறார்கள்.

எத்தனை உயர்ந்த பண்டங்களைச் சேர்த்துப் பலகாரம் செய்தாலும், அப்பலகாரம் தயாராவதற்கு நெருப்புதான் பிரதானம். அந்த நெருப்பு பலகாரத்திற்கு வேண்டிய அளவு எரிந்தால்தான் பலகாரம் பதமாகச் செய்ய முடியும். நெருப்பை அலக்ஷியம் செய்து அதிகத் தீயைப் போட்டு விட்டால் பலகாரம் காந்திப் போய் குட்டிச் சுவராகின்றது. தீயே இல்லாது செய்தாலோ அதிக நேரமாவதோடு பதமும் சரியாக ஆகாது பாழாகிறது. இதுபோலத்தான் சினிமாக்கலைக்கு கதை மிகவும் அவசியமானது. புராணக் கதையோ, சரித்திரமோ, அல்லது சமூகக் கதையோ, எதுவாயினும் சரி: அந்தந்த கதைதான் அந்தப் படத்திற்கு ஜீவன். சரியான கதைப் போக்கில்லாமல் எதை நடிப்பது, அல்லது டைரக்ட் செய்வது எனின், ஒன்றுமில்லையென்றுதான் பதிலளிக்க வேண்டும். ஆகையால் கதைகளின் ஜீவநாடி குறையாமல் நடிகர் களின் திறமைக்குத் தக்கவாறு பாத்திரம் கொடுத்து, கதையை ஒழுங்காக எடுத்தால்தான் படம் உருப்படியாவதோடு பொது ஜனங்களின் ஆவலையும் பூர்த்தி செய்வதாகும்.

சென்ற வாரம் காரைக்குடியில் வெளியான "ராஜமோஹன்" படத்தைப் பார்த்துவிட்டு எங்களுக்குப் பல அன்பர்கள் கடிதமெழுதியிருக்கிறார்கள். 'ராஜமோஹன்' புத்தகமாக நம் "ஜகன் மோகினி"யில் வெளியாகி சுமார் ஒன்றரை வருடமாகப்போகிறது. ஆயிரக் கணக்கில் அதைப் படித்திருப்பார்கள். ஒரு நல்ல கதையை அதன் முக்கியமான ஜீவ நாடியிருக்கும் பாகங்களை மாற்றிப் படம் பிடித்திருப்பதாக நமக்கு வந்துள்ள கடிதங்களில் கண்டிருக்கிறது. அதைப் படிக்கும்போது ஒரு பெண்ணைப்பெற்ற அன்னையின் கதியும், ஒரு கதையினுடைய ஆசிரியரின் கதியும் ஒன்று என்று தோன்றியதோடு, கண்ணீரும் என்னையறியாமல் வழிந்தது. காரணம்?........

ஒரு தாயார் தான் பெற்ற பெண்ணை எத்தனையோ அருமையாய் வளர்த்து, சகலவித செல்வத்துடனும் பாராட்டிப் பின் மணம் செய்து ஒருவனிடம் ஒப்பித்துவிடுகிருள். கொடுக்கும் போது, "என் குழந்தையின் அருமை தெரிந்து நடத்துங்கள். குழந்தையின் மனசு வருந்தாது காப்பாற்றுங்கள்" என்று தாயார் கூறி, அவ்விதமே நடத்துவார்களென ஆவலுடன் எதிர் பார்க்கிருள். ஆனல், அப் பெண்ணைப் புக்ககத்தில் சரியாக நடத்த வில்லை யென்றும், சிறுமைப்படுத்தி உருக்குலைத்து விட்டார் களென்றும் கேட்ட தாயின் குடல் எப்படிப் பதறும்? எவ்வளவு சங்கடப்படுவாள்? படுத்தாதேயென்று சொல்லி முறையிடுவாள். பிறகு துயரமே வடிவாகிக் கல்லாய்ச் சமைந்து விடுவதோடு மற்ற பெண்களைக் கட்டிக் கொடுக்கும் இடமாவது நல்லதாகவிருக்க வேண்டுமே யென்ற ஏக்கமும் உண்டாகிவிடுகிறது.

அதேபோலத்தான் ஆசிரியரின் கதியும் என்பதில் சந்தேகமேயில்லை. "ராஜமோஹன்" விஷயத்தில் நான் அடைந்த பலன் பெண்ணைப் பெற்ற தாயின் கதியேயாயிற்று! இன்னும் நான் படத்தைப் பார்க்கவில்லை. பார்த்த பிறகு தான் என் அபிப் ராயத்தை முற்றிலும் கூற முடியும்.

நேயர்களே! நான் ஓர் கதாசிரியை என்றதால்தான் இப்படி கதையை உயர்வுபடுத்தி எழுதுகிறேன் எனச் சிலர் நினைக்கலாம். இது சுத்த தப்பான அபிப்பிராயமாகும். எந்த ஒரு கதையாவது வைத்துத்தான் படமெடுக்க வேண்டுமேயன்றி, வெறும் கையை முழம்போட முடியாது. அவ்வகையில் எந்தக் கதையை எடுத் தாலும் கதையின் ஜீவ களை குன்ருது, அதன் முக்கிய ரஸபாவத் திற்குப் பங்கம் நேராது எடுக்கப்பட வேண்டியது என்பது தான் எல்லோருடைய எண்ணமாகும். அதையே நான் எனது அனு பவமுங்கூட விருப்பதால் தைரியமாகச் சொல்வேன்.

"உங்களுடைய இரண்டாவது கதையாகிய 'அனாதைப் பெண்' எந்த கதியிலிருக்கிறது?" என்று என்னை இப்போதே பலர் கேட் கிருர்கள். அதையும் திரையில் பார்த்து நீங்களே சொல்லுங்க ளென்று நான் கூறுகிறேன். கூடுமானவரை புத்தகத்திலுள்ள காக்ஷிகள் படத்திலும் வருமென நானும் நம்பி எதிர்பார்க்கிறேன். நானும் உங்களைப்போல, படம் பார்ப்பவர்களில் ஒருத்திதானே?

—வை. மு. கோ.

# ஸ்டுடியோச் செய்திகள்

## பக்தமீரா

### சிற்றின்பத்துக்கும் பேரின்பத்துக்கும் போராட்டம்

சென்ற வாரம் எடுத்த வெளிக்காட்சியின் விஷயமாவது:—

"மீராவும் ராணுவும் அரண்மனைத் தோட்டத்தில் சந்தித்தார்கள். அவளை இல்லற வாழ்க்கையில் ஈடுபடச் செய்த முயற்சிகளெல்லாம் வீணானதால், ராணு, புருஷன் சொற்படி அவள் நடக்க வேண்டுமென்று நீதிகள் கூறிக் கட்டாயப்படுத்துகிறான். ஆனால், 'மீரா' தத்வ ஞானியாகப் பேசிச் சிற்றின்பத்தைவிடப் பேரின்பமே மேலானது என்று உபதேசித்ததை அவன் தன்னை அலக்ஷியம் செய்ததாகத் தப்பாக நினைத்ததுடன், அவளுடைய வார்த்தைகளையும் அக்பருடைய உருவத்தையும் சம்பந்தப்படுத்திச் சந்தேகப்படுகிறான். இந்த சந்தேகப் பிசாசு அவனைப் பிடித்தாட்டி எதிர்பாராத நிலைமைக்குக் கொண்டுபோய் விடுகிறது.

## அனாதைப் பெண்

### பேசும் படமெடுப்பதைப் பார்த்திராதவர்கட்கு!

நீங்கள் பல படங்களைக் கண்டு களித்திருக்கலாம். ஆனால், பலர் படமெடுக்கையில் பார்த்திருக்கமாட்டீர்கள். ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு முதலிய விஷயங்கள் பெரிய புதிராக இருக்கலாம். ஆனால், "அனாதைப் பெண்" படத்தில் படம் எப்படி எடுக்கப் படுகிறதென்பதை நீங்கள் நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். ஒளிப்பதிவு செய்பவரைப் பார்த்தவுடனே நீங்கள் விலாப்புடைக்க நகைப்பீர்கள். பின்னர்........

* * * * *

சென்னை ஹார்பர்; துரைராஜா கப்பலில் சீமைக்குப் போகும் போது அவனது சினேகிதர்களும் இந்திராணியும் வழியனுப்பும் காக்ஷி எல்லாம் தத்ரூபம். அங்கு டைரெக்டர் பிரகாஷ் பல அற்புதமான ஸீன்களை எடுத்திருக்கிறார்.

* * * * *

சோர நட்பின் பலன்!.....தாயே தனயனைப் பாறையில் நசுக்கிக் கொலை செய்ய உடந்தையாயிருக்கும் காக்ஷி.

* * * * *

"அனாதைப் பெண்" அநேகமாக முடிந்து விட்டது. தமிழ் நாட்டுச் சலனப் படங்களுக்குள் முதன்மை ஸ்தானம் வகிக்கத் தக்க பெருமையுடன் சீக்கிரத்தில் வெளிவரப் போகும் இந்த சமூகக் கதையை வரவேற்கத் தயாராகவிருங்கள்.

# மதிப்புரை

## நீதி விநோதக் கதைகள்

[ஸ்ரீமான் பண்டித டி. கே. ராமபத்ர சர்மா எழுதியது. பிரசுரிப்பவர்கள் : கபீர் பிரிண்டிங் ஒர்க்ஸ் 195, ஹைரோடு, திருவல்லிக்கேணி, சென்னை. விலை அணா 6. "ஜகன்மோகினி" ஆபீஸிலும் கிடைக்கும்; ஏழணா ஸ்டாம்பு அனுப்பவும்.]

சாதாரண ஜனங்களுக்கு அரிய பெரிய நீதிகளை மிகவும் சுலபமான நடையில் ஹாஸ்ய ரஸத்துடன் போதிக்கக்கூடிய 104 கதைகள் (பல வியாசங்களாகத் தோன்றுகின்றன.) 155 பக்கங்களில் அடங்கிய இப்புத்தகம் ஆறணாவுக்குக் கிடைக்கச் செய்திருப்பது போற்றக் கூடியது. இந்நூலாசிரியர் ஸம்ஸ்கிருதத்துடன் தென்னிந்திய பாஷைகள் பலவற்றிலும் அநுபவமுள்ளவரென்று தெரிகின்றது. பல பாஷைகளிலுள்ள நீதிகளைத் தமிழர் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது இது ; முக்கியமாக சிறுவர்களும் ஸ்திரீகளும் அவசியம் வாங்கி வாசிக்கத் தக்கதாகும் இந்நூல்.

## பகவான் அரவிந்தர்

### பத்னியாருக்கு எழுதிய கடிதங்கள்

[லோகோபகாரி காரியாலயம், சிந்தாதிரிப்பேட்டை. இந்நூல் வேண்டுவோர் இரண்டரை அணா தபால் முத்திரை அனுப்பவும்.]

தற்போது புதுச்சேரியில் மௌன விருதம் பூண்டு பேரின்பத்தில் மூழ்கியிருக்கும் பகவான் அரவிந்தர் 27 வருடங்களுக்கு முன் தமது பத்னியார் மிருணாலினி தேவிக்கு எழுதிய 3 கடிதங்களும் அடங்கியுள்ள இப் புத்தகத்தின் இரண்டாம் பதிப்பு எமது பார்வைக்கு வந்துள்ளது. இச் சிறிய அருமையான புத்தகத்தைத் தமிழர் யாவரும் தமது பொக்கிஷமாக வைத்துக் கொண்டு, அதனுள் பதிந்து கிடக்கும் விஷயங்களை மனத்தில் பதிந்து கொள்வது கடமையாகும்.

## இந்திய ஊறுகாய்கள்

ஸ்ரீ. ஆர். ராஜாங்கம் ஐயங்கார், 1/2 சோலையப்ப முதலித் தெரு, மைலாப்பூர்; அனுப்பிய பல வகையான காய்கறி ஊறுகாய்களின் மாதிரி டப்பிகள் வரப்பெற்றோம்.

அவைகள் மிகவும் ருசியாகவும் மணத்தோடும் கூடியனவையாய் இருக்கின்றன.

## 23

எந்தக் காலத்திலும் மக்கள், தங்களுக்கோர் நெருக்கடியான சமயமோ, ஆபத்தோ நேர்ந்துவிட்டபோதுதான் கடவுளைப் பஜிக்கவும், துதிக்கவும் வேண்டவும் அதிகமாக முனைகிறார்கள். கடவுளைக் கனவிலும் திட்டும் நாஸ்திகர்கள்கூட அம்மாதிரியான சமயங்களில் தம்மை மீறி, மனித சுபாவத்திற்குள்ள இயற்கையான பக்தி வெளிப்பட்டுப் பிரார்த்தனைகள் செய்துகொள்கிறார்கள் என்றால், ஆஸ்திகர்களைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா?

வேணியின் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொள்கிறது. "நம் வீட்டில் இந்தப் பெண் வந்திருக்கையில் என்ன விபரீதம் நேரிட்டுவிடுமோ வென்ற பயமும், திகிலும் தலைதூக்கிவிட்டன. கிழவனின் சந்தேக எண்ணத்தின் விபரீதம் எம்மட்டும் கொண்டு போகுமோ? இச்சமயம் நம் கணவரும் வந்துவிட்டால், அவருக்கு என்ன தோன்றுமோ? பகவானே! ஒருவிதமான விகாரமும், விபரீதமுமின்றிக் காக்கவேண்டும் என்னப்பனே!" என்று வேண்டியவாறு மைதிலியைத் தன்மீது சாற்றிக்கொண்டாள்.

அங்கு நிற்கும் வேணுசாமிக்கு மனத்தில் செய்யும் வேதனைக்கு ஓர் எல்லையே இல்லை. "மைதிலியைப் பார்க்கிறான். வயிறு பற்றி எரிகிறது. கிழவரை நோக்க ஆத்திரம் மீறிக்கொண்டு வருகிறது. கிழவரின் மண்டையை உடைத்துவிடலாமாவென்ற கோபம் கட்டுமீறி எழும்புகிறது. உடனே தன்னையே தான் சமாளித்துக்கொண்டு கிழவரின் முகத்திலடித்ததுபோல், தடா ரென்று அவரைப் பிரதக்ஷணம் வந்து, கீழே விழுந்து சேவித்துக் கைகட்டியவாறு, "தர்ம ப்ரபுவே! ஓங்களைப்போல மகா உத்தம ஆத்மாக்கள் உலகத்திலே இருக்கிறதனாலேதான் ராமராஜ்ய காலம் போல் தேசத்தில் சுபிக்ஷம் பொங்குகிறது. எங்கே பார்த்தாலும் தர்ம தேவதை தாண்டவம் செய்கிறது. நீங்க செய்த-செய்யவந்த-செய்யப்போற காரியத்தினால் உலகமே கூடிய சீக்கிரம் பிரளயத்திலே முழுகாமலிருக்கணமே! ஐயோ!....சென்றது போக

இன்னும் நூறு வருஷம் நன்னு இரும்" என்று அடக்கமாட்டாத ஆவேசத்துடன் கூறிவிட்டு, "அம்மா! உன்விதி என்னல் இன்னும் பலப்படவேண்டாம். நான் போய் வறேன்" என்று கூறிக் கொண்டே கிழவர் வியக்கும்படி சடக்கென்று வெளியே போய் விட்டான்.

கிழவருக்கு ஒன்றுமே தோன்றவில்லே. கோபம் மட்டும் தலைக்கேறிவிட்டது. "ஆமாண்டா! அல்பாயுசே! நான் நூறு வருஷமில்லே. ஏரநூறு வருஷம் இருக்கப்போரேண்டா! நீ இப்பவே செத்துப்போ! போடா! போ! போ....சின்ன பொண்கள் மேலெல்லாம் கண் வேட்டை யாடும் கட்டதடியா....வாயெப்பாரு வாயே!" என்று அவன் சென்ற திக்கைப்பார்த்துக் குதிக்கிருர். கையைச் சுடுக்கிச் சுடுக்கி திட்டுகிருர். பிறகு கயிற்றுக்கட்டிலில் உட்கார்ந்தார்.

கிழவரின் தாண்டவம் வேணியை நடுங்கச் செய்துவிட்ட தால், வேணி, மைதிலியை மெல்ல அழைத்துக்கொண்டு கிழவர் எதிர்பார்க்காதபடியே அவள் வீட்டிற்குப் போய்விட்டாள். கிழவர் முதுகை வாசற்படி பக்கமாகத் திருப்பிக்கொண்டு உட்கார்ந்திருந்ததால், இவர்கள் சென்றதைக் கவனிக்காது தன் போக்காக முணுமுணுவென்று ஏதோ மந்திரம் போல ஜபித்துக் கொண்டிருந்தார்.

அப்போது வாஸந்தியும் ராஜூவும் பலகை புத்தகத்துடன் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தார்கள். வாசற்படியருகில் வரும் போதே கிழவர் அங்கு உட்கார்ந்திருப்பதை யறிந்ததும் வாஸந் திக்கு இங்கு நடந்த ஒரு செய்தியும் தெரியாதாகையினல், தன் இயற்கையான விளையாட்டுப் புத்தியுடன் மெல்ல சந்தடி செய் யாமல் ஒரு கயிற்றை எடுத்து கிழவரின் பின்புறம் தொங்கும் கால் வேஷ்டியில் முடிபோட்டு, அதைக் கதவு வளையத்தில் கட்டி விட்டு, ஒரு துரும்பை எடுத்துக் கிழவரின் பின்புறமாகவே காதில் குடுகுடுவென்று குடைந்தாள்.

கிழவர், 'ஏதோ என்னவோ' என்று தலையை மாடுபோல் உதறிக்கொண்டே, "ஏய்! அடீ! மைதிலீ! வீட்டுக்குப் போ!

இன்னும் இங்கே என்ன பண்றே? திருட்டுத்தனமா அவனெ இங்கே வரச் சொல்லிப்புட்டு நீயும் இங்கு தளுக்கா வந்தது யாருக்குத் தெரியாதுன்னு பார்த்தே. உம். போ. வீட்டுக்குப் போ" என்று திரும்பிப் பார்க்காமலேயே கூறினர்.

வாஸந்தி கடகடவென்று சிரித்துக்கொண்டே கிழவரின் எதிரே வந்து வீதிப்பக்கமுள்ள ஜன்னலைக் காட்டி, "தாதா! நீங்க பாக்காமலெயே பேசறங்களே! அதோ பாருங்கோ யாரு போரான்னு...." என்று கிழவரைக் கூப்பிட்டாள். கிழவர் எழுந்து வந்தால் வேஷ்டி இழுத்து விழுந்து விடுவார்; வேடிக்கைப் பார்க்கலாம்; என்ற குறும்புத்தனத்தினலேயே அப்படிக் கூப்பிட்டாள்.

கிழவர் வெகு சுறுசுறுப்பாக எழுந்து வரும்போது வேஷ்டியில் கட்டியுள்ள கயிறு பின்னல் இழுத்ததால் தடுக்கி தடாரென்று விழுந்துவிட்டார். ராஜு தாங்கமாட்டாது கடகடவென்று கையையும் கொட்டிக்கொண்டு சிரித்தபடியே, "தாதா! தாதா!" என்று எதிரில் நின்று குதிக்கவாரம்பித்தான். வாஸந்தி ஒன்றும் அறியாதவளைப் போல் "ஐயோ! தாதா! கீழேயா விழுந்துட்டேள். அடி கிடி பட்டதா? தாதா!" என்று கூறிக்கொண்டே வந்து வேஷ்டியிலிருந்த முடியை அவிழ்த்துவிட்டு, அவரைக் கையைப் பிடித்து இழுத்தாள்.

கிழவருக்கு ஏற்கெனவே பொங்கும் ஆத்திரத்துடன் இதுவும் சேர்ந்ததால், முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த கோபம் வந்துவிட்டது. மைதிலியின் எதிரில் தாம் விழுந்துவிட்டதாக எண்ணியே அவருக்கு அவமானமும் ஆவேசமும் உண்டாகி விட்டன. வாஸந்தியும் ராஜுவும் சிரிப்பதும் அவர் வேதனையைப் பின்னும் தூண்டுவதுபோலாயிற்று. ஆனல், குழந்தைகளை வையவும் அஞ்சியவராய்ச் சுருட்டி கட்டிக்கொண்டு அசட்டுச் சிரிப்பு சிரித்தவாறு எழுந்து நாற்புறமும் பார்த்தார். அங்கு வேணி, மைதிலி இருவரையும் காணுததால், தலையைத் தடவிக்கொண்டே, "எம்மா வாஸந்தி! அம்மா எங்கே?" என்ருர்.

வாஸந்தி கிழவரின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய், "தாதா! அதோ பாருங்கோ! யார் போரு பாத்தங்

களா!" என்று ஜன்னலால் காட்டினாள். வீதியில் வேணியும் மைதிலியும் தெருக் கோடியில் போவதையும், அவர்களுக்குச் சற்றுப் பின்னால் வேணுசாமி செல்வதையும் கிழவர் பார்த்து விட்டார். அவருடைய இதயம் படபடவென்று அதிவேகமாக அடித்துக்கொள்ள வாரம்பித்தது.

"வாஸந்தி! இரு. இரு. இதோ நான் போய் ஒரு நிமிஷத்தில் வந்துட்ரேன்" என்று கூறிக்கொண்டே அங்கிருந்து வேகமாக வீதியை நோக்கி நடக்கவாரம்பித்தார். வாசற்படியின் நினைவு அவருக்கு அப்போதும் மறக்கவில்லை யாதலால், வேகமாகப் போகும்போதும் பாதி முதுகு வளையும்படியே குனிந்து ஓடினார். அவர் தொந்தி குலுங்கக் குலுங்க ஓடும் வேடிக்கை குழந்தைகளைச் சிரிக்கச் செய்துவிட்டதால், "தாதா....தாதா!" என்று பெரிதாகச் சத்தமிட்டுச் சிரித்துக்கொண்டே கிழவரைப் பார்த்தார்கள்.

## 24

ஆத்திரம் பொங்கினாலும், சந்தோஷம் பொங்கினாலும் மனிதர்களின் நிலை கலங்கச் செய்து சிறிது தடுமாற்றத்தையே அளித்துவிடும். இவ்விரண்டுடன் சந்தேகப் பிசாசும் ஒரு மனிதனைப் பிடித்துக் கொண்டால், ஆட்டத்திற்குக் கேட்க வேண்டுமா! மந்திரம் தந்திரம், உடுக்கை, வேப்பிலை, பிரம்படி, தூபம் முதலிய சகலமும் போடாமலேயே பேயாட்டமாடித் திருப்பாட்டு பாட வாரம்பித்து விடும்.

அந்த முறையில் சற்றும் பின்வாங்காத, சளைக்காத முதல் நம்பர் தாம்பூலம் பெற்ற கிழவரின் நிலைமையைக் கூறவேண்டுமா! வீதியில் ஓடுகிறோமா, நடக்கிறோமா என்பதையும் மறந்து வேகமாயும், தாறுமாறாயும் கண்ணை மூடிக்கொண்டு அம்மூவரையும் துரத்தியவாறு சென்றார்.

முன்னே சென்ற மூவரும் திரும்பிக்கூட பார்க்கவில்லை. மைதிலியையும், வேணுசாமியையும் கூப்பிடவேண்டுமென்ற ஆத்திரம் அவரை வாயெடுக்கச் செய்கிறது. எனினும் நடு வீதியாயிற்றே என்று சிறிது யோசனையுடன் நடந்தார்.

அச்சமயம் எதிர்வீட்டுக் கிழவர் ஒரு செம்பில் நெய் வாங்கிக்கொண்டு எதிரில் வேகமாக வந்தார். இவர் போகும் ஜோரில் அவர்மீது முட்டியடித்துக் கையிலிருந்த நெய் மேலே கொட்டி வேதாசலத்திற்கு அபிஷேகமாய்விட்டது. இமை கொட்டும் நேரத்தில் நடந்த இச்செய்கையில் ஒருவரை யொருவர் பிறகே அறிய நேர்ந்தது. "எண்டா வேதாசலம்! நீ நாசமாப் போக! எதிரே வரது கண் தெரியலையா? ஒரு வீசெ நெய்யும் பாழாப்போச்சேடா! என் பொண்ணுத்துக்கு வாங்கிண்டு போற நெய்யாச்சே! என்னடா ஓட்டமிது? எங்கே குபேர பட்டணம் கொள்ளை போயிடுத்து?" என்று கேட்டார்.

கிழவர் நெய் அபிஷேகத்தையும் லக்ஷ்யம் செய்யாமல், "அப்பாடா! நீதானா! பொழச்சேன். குபேர பட்டணம் மட்டுமா கொள்ளை போறதுன்னு பாத்தே. குடும்பப் பட்டணமே கொள்ளை போகப்போறதய்யா! அப்ரம் சொல்றேன். கழுகு கமலத்தெ அடிச்சிண்டு போகப் பார்க்கிறது. இரு! இரு!!" என்று கூறிக்கொண்டே மீண்டும் அதே நெய் அபிஷேகத்துடன் ஓடத் தொடங்கினார்.

எதிர்வீட்டுக் கிழவருக்கு ஒன்றும் புரியவில்லை. சற்று நின்று திரும்பிப் பார்த்தார்; பிறகு போய்விட்டார். வேதாசலம் தொடர்ந்து போவதற்குள், மைதிலியும் வேணியும் வீட்டுக்குள் போய்விட்டார்கள். வேணுசாமி பின்னால் போய்க்கொண்டிருந்தான். கிழவர் ஆத்திரமாக தடதடவென்று படி ஏறி வாசக் கதவைத் தாளிட்டுக்கொண்டு, "வரட்டும்! வரட்டும்; அந்தப் பயலை வாசல்லெயே நிக்க வெச்சு மானத்தை வாங்கறேன்" என்று உருமிக்கொண்டே கதவுக்குப் பின்னால் நின்றார். கதவை வேணுசாமி இடிப்பான் என்பதே அவர் நோக்கம்.

நிமிஷம் ஒன்று, இரண்டு ஐந்தாகிவிட்டது. கதவை யாரும் இடிக்கவில்லை. கோபத்துடன் வீதிக் கதவைத் தானே திறந்து

183019

தலையை நீட்டி எட்டிப் பார்த்தார். வேணுசாமியை வீதியிலேயே காணவில்லை. பின்னும் குறட்டுப் பக்கம் வந்து நிற்கும்போது மெத்தை பால்கனி வராந்தாவில் பேசுங் குரல் கேட்டுத் திடுக்கிட்டவராய் அதை நிமிர்ந்து பார்த்துக் கவனித்தார்.

வேணுசாமியும் முத்துசாமியும் பேசிக்கொண்டு நிற்பதைக் கண்டதும், "நாம் எப்படி ஏமாந்தோம்? எப்படி யவன் உள்ளே வந்திருப்பான்?" என்ற சந்தேகமும் அவமானமும் உண்டாகி விட்டன. எனினும் அவர்கள் சம்பாஷணே இவருடைய கவனத்தை இழுத்தது.

முத்து :—ஆமாம் மாமா! எனக்குக்கூட ரொம்ப கஷ்டமாயிருக்கு. எங்க பாட்டியும், அப்பாவும் சேந்து சித்தியைக் கொண்ணுப்புட்டான்னே சொல்லலாம். சித்தி எத்தனை நாள் ராத்திரி பட்டினி தெரியுமா? நான் பாதி ராத்திரியிலே எப்பொ எந்து பாத்தாலும் சித்தி அழுதுண்டே படுத்திருக்கா! இல்லாட்டா ஏதாவது படிக்கிறு! அதுவும் தப்பினு வெளி மெத்தெலே போயி தனியா பிசாசுபோலெ ஒலாத்தரா! ஆகாசத்தைப் பாக்கரா! வெளியிலேயே படுத்துப் புலம்பரா! நான் சின்னவனுனுக்கூட அவ அழறது எனக்குத் தாங்கலே. என்ன செய்றது.

வேணு :—ஒங்கப்பாவெ போல புத்திகெட்ட கெழங்களை எல்லாம் புடிச்சு தண்டிக்க ஒரு சட்டங் கொண்டு வந்து தண்டிச்சுப் புட்டா வயித்தெரிச்சல் தீரும். ஐயோ பாவம்! மைதிலியைப் பாத்தா துக்கம் தாங்கல்லெ........அவ மகா புத்திசாலி. மகா உத்தமி. வெகு பொறுமைசாலி.

இந்த வார்த்தைகள் கிழவரின் காதில் விழுந்ததும் தீயே அவர் காதின் வழியாய் உள்ளே சென்றதுபோலாகிவிட்டது. "ஆஹ்ஹா! படவாப் பயல். என்னெ கண்டிக்க இந்த கழுதெ சட்டம் கொண்டுவரப் போறதா! இருக்கட்டும். இப்போ யாருக்கு மொதல் தண்டனெ கெடைக்கிறது பார்க்கிறேன்" என்று கூறிக் கொண்டே, தட தட வென்று உள்ளே சென்று மாடிப் படியில் ஏறினர்.

மேலே ஆத்திரத்துடன் சென்று பால்கனியில் பார்க்கையில், அங்கு யாருமில்லாது ஏமாற்றத்துடன் வீதியை நோக்கினர்.

மாடியிலிருந்து வீதியிலேயே இறங்கும் மாடிப்படிக் கதவைத் திறந்துகொண்டு, முத்துசாமியும் வேணுசாமியும் கையில் ஒருவன் படுக்கையையும், ஒருவன் பெட்டியையும் எடுத்துக்கொண்டு வீதியில் செல்வதையும், அடுத்த நிமிஷமே ஒரு ரிக்ஷா வண்டியில் வேணுசாமி படுக்கை, பெட்டி இரண்டையும் வைத்துக்கொண்டு தானும் ஏறிக்கொண்டு போவதையும், முத்துசாமி மாமனை வழியனுப்பிவிட்டு, மனக்கலக்கத்துடன் திரும்பி வருவதையும் பார்த்தார்.

கிழவர் வந்த வேகத்தில், பால்கனியிலிருந்து வேணுசாமியை அப்படியே தூக்கி வீதியில் உருட்டி அவனைக் கொன்று விடவேண்டும் என்று வந்ததற்கு ஏமாற்றமடைந்தும் அவன்போய் விட்டதானது சிறிது ஆறுதலையுங் கொடுத்தது. தன் தலையைத் தடவிக்கொண்டு, “வரட்டும் கழுதை. இனிமே இந்த படி ஏற முடியுமா பார்க்கிறேன். பிச்சி பிச்சி எறியமாட்டேனு! சோதாப் பயல்!” என்று முணுமுணுத்துக் கொண்டே இருக்கையில் வேணி உள்ளே இருக்கும் க்யாபகம் வந்தது. அவளைப் பார்க்கும் விகார எண்ணம் தலை தூக்கி விட்டதால், அங்கிருந்து வருவதற்கு நினைப்பதற்குள், வேணி தன் வீட்டை நோக்கிச் செல்வதைப் பால்கனியிலிருந்து பார்த்து, “இதுவும் ஏமாற்றமா! ஐயோ ராகவா!” என்று கூறி முணுமுணுத்துக் கொண்டே மறைந்தார்.

## 25

இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்தை அறியாதோர் கிடையாது. அவர் மகா உத்தமரும் தயாள குணமும் பரோபகார சிந்தையும் பொது மக்களுக்கு என்றும் தான் நன்மை செய்யக் கடமைப்பட்டிருப்பதாகவே தன்னை நினைத்து உழைக்கும் விசால குணமும் பொருந்திய மகா வீரர். அவர் செய்துள்ள உண்மையான

தியாகங்கள் அனேகம் இருக்கின்றன. தான் வகித்துள்ள உத்தியோகம் மிகவும் அபாயகரமான போலீஸ் இலாகாவாயிற்றே! எந்தநேரம் எந்தத் திருடனால், கொலைக்காரனால், பகையாளிகளால் தனக்கு விபத்து நேருமோ என்ற எண்ணம் அவர் மனத்தில் ஒரு சிறிது இருப்பினும், அதைவிடச் சிறந்ததும், தலை தூக்கி நிற்பதுமான தயாள குணத்திற்கும் பொது மக்கள் சேவைக்குமே அவர் அதிகம் ஈடுபடத் தயாராயிருந்தார்.

[இவருடைய மகிமையை ஒரு சிறிது விளக்கியுள்ள * "ராஜமோஹன்" என்ற புத்தகத்தைப் படித்தால் தெரியும். இவருடைய வீரமும், தியாகமும் தனியே எடுத்துக் காட்டும் சந்தர்ப்பம் வாய்க்கும்போது அதை வெளியிடுவோம்.]

அத்தகைய ஏகாம்பரம் ஆபீஸ் ரூமில் உட்கார்ந்திருக்கையில், எதிரே சப் இன்ஸ்பெக்டரும், ஜவான்களும் நின்றிருந்தார்கள்.

ஏகாம்பரம் :—இன்னும் ஒன்றும் விளங்கவில்லையே; அந்த மாதிரி நூதன முறையில் கொள்ளை நடப்பது வேடிக்கையாகவே இருக்கு. இந்த ஒரு வாரத்துக்குள்ளே எத்தனே எடத்துலெ நடந்திருக்கிறதாகச் செய்தி வந்திருக்கு?

சப் இன்:—சுமார் பத்து வீட்டிலெ நடந்திருக்கிறதாகத் தகவல் வந்திருக்கு. எப்படி எப்படி பார்த்தாலும் ஒன்னும் புலன் கிடைக்கல்லெ. அச் சமயம் டெலிபோன் மணி யடித்தது. ஏகாம்பரம் ரிஸீவரை எடுத்து, "ஹல்லோ! யார் பேசறது. என்ன வேதாசலம் வீடா? கொள்ளையா?! அவர்கள் இருக்கிறார்களா? போய்விட்டார்களா; 5 ஆயிரம் ரூபாய் மதிக்கிற சொத்தா! சரி: இதோ வந்துட்டேன்" என்று கூறிவிட்டு, உடனே தன் ரிவால்வருடன் ஜவான்களை அழைத்துக் கொண்டு கிளம்பி காரில் ஏறி, நேரே வேதாசலத்தின் வீட்டிற்கு வந்து இறங்கினார்.

உள்ளே சென்றபோது கருப்பன்தான் முன்னால் நின்று, "வாங்க எசமான்! அநியாயக்கொள்ளை எசமான்! யாரோ ரெண்டு

---

* "ராஜமோஹன்" என்ற அற்புதமான டாக்கீ நாவலை வாங்கிப் படித்து மகிழுங்கள். இரண்டாம் பதிப்பு வெளி வந்துவிட்டது. விலை ரூபாய் 1—4 தான்.

பொம்பளெங்க ரொம்ப அழகா இந்தக் காலத்துக்கு ஏத்தாப்பேலே சிங்காரிச்சிகினு கையிலெ அத்தரு, பன்னீரு, சென்டுங்க, தைலங்க, குங்குமம் அல்லாம் எடுத்திகினு வந்தாங்க. எங்கம்மா அந்தத் தைலத்தே வாணும் போங்கோன்னுங்க. அந்தப் பாவிங்க கேக்கலெ. வாசேனெ பாரேன். ரொம்ப ஒஸ்தி தைலம் இன்னுங்க. அம்மா தம் கொயந்தெக்கு வாங்கலாமுண்ணு அதை மோந்து பாத்தாங்க. அப்பவே என்னெயும் பாக்கச் சொன்னுங்க. ரெண்டு பேரும் பாத்தோங்க. அப்படியே மழக்கமா உயுந்துட்டேங்க. அம்மாளும் படுத்துட்டாங்க.

கண்ணெ தொறந்து பாக்கச்செ வெள்ளி சாமாங்க பணங்க அல்லாம் பூட்டுதுங்க. ஒடனே டெலிபோனு செய்யச் சொன்னேங்க. எங்கம்மாளுக்கு இன்னும் தெளியலெங்க. இதோ படுத்துகெடக்கிறுங்க. எசமான்! டாக்டருக்கும் டெலிபோன் செஞ்சாச்சுங்க" என்று கண்ணீர் பெருகக் கூறினன்.

கருப்பனின் சம்சாரம் மைதிலிக்கு ஜலத்தைத் தெளித்து விசிறிக் கொண்டிருந்தாள். அழகு தேவதையே சயனித்திருப்பதுபோல் கிடக்கும் மைதிலிக்கு மயக்கம் தெளியவே இல்லை. இன்ஸ்பெக்டர் அந்த வாசனை எப்படி இருந்தது என்று அடையாளம் பார்க்கத் தேடியும் ஒரு சின்னமும் அகப்படவில்லை. மைதிலியின் தேகத்திலிருந்த நகைகள் கழட்டப்பட்டிருந்தன. இன்ஸ்பெக்டர் எல்லாவற்றையும் குறித்துக் கொண்டு எழுதிக் கொண்டார்.

இதற்குள் டாக்டர் ராமநாதன் வந்தார். மைதிலிக்குத் தக்கபடி சிகிச்சை செய்தவாறே, "இதென்ன இன்ஸ்பெக்டர்வாள்! இந்த மாதிரி மாயக் கொள்ளை அதிகமாயிப் போச்சே! அடிக்கடி இந்த மாதிரி மயக்கம் போட்ட பேஷண்டை நான் பாத்து வரேன். இந்த மயக்க மருந்து ஏதோ கொடிய விஷங் கலந்ததாகவே நான் எண்ணுகிறேன். ஏன்னு, இதை அதிகமாக மோந்து விட்டா பிராணனும் போயிடும். அப்படியும் ஒரு கேஸ் முன்னே நடந்தது. இதுக்கு நீங்க தீர யோசனை பண்ணி முயற்சி எடுக்கலையா?" என்று

ஏகாம் :—இதுக்காக ஏகப்பட்ட ஏற்பாடுகள் செய்திருக்கோம் சார்! இன்னும் ஒன்னும் கண்டு பிடிக்க முடியல்லெ. போன வாரங்கூட வாஸனை விற்கும் ஒருவனை மடக்கி மிரட்டி அவனிடம் உள்ள பொருளை பரீக்ஷித்துப் பார்த்ததில் அதில் கொஞ்சமும் தோஷமே இல்லை. விட்டுட்டோம். ரகஸ்ய போலீஸார் ஆங்காங்கே கவனிச்சுண்டுதான் இருக்கா.

அச்சமயம் மைதிலி மெல்ல கண்ணைத் திறந்தாள். போலீஸாரும், டாக்டரும் தன்னைச் சுற்றியிருப்பதறிந்து மிக்க கலவரத்துடன் சுற்று முற்றும் பார்த்தாள். எதற்காக இப்படி நிற்கிறார்கள் என்பதை யறியும்பொருட்டு அவள் ஆவல் கொள்கிறாள் என்பதை வைத்தியர் உணர்ந்து, "எம்மா! வாசனை எப்படி. ரொம்ப ரொம்ப பரிமளமோ?....ஒங்க ஒடம்பு நகைகள் எங்கே பாருங்கோ? தாதா எங்கே போயிருக்கார்?" என்று அடுக்கடுக்காய்க் கேட்டார்.

மைதிலி :—(தன் உடம்பைப் பார்த்தாள். ஒரு நகையும் காணவில்லை; தூக்கி வாரிப் போட்டது.) வாஸனைக்காரிகள் எங்கே? கருப்பா; என்னடா சமாச்சாரம்? ஒன் எஜமானர் இன்னும் வல்லையா?

கருப்ப :—யம்மா! அந்த வாசனை சுத்த மோசம்மா! அவுங்க கொள்ளைக்காரங்கம்மா. கொள்ளையடிச்சிக்கிணு பூட்டாங்க. நானு டெலிபோன் பண்ணைச் சொல்லி இவங்களே வரவயிச் சேனுங்க. இந்த மாதிரி திருடு ஊரெல்லாம் நடக்குதுங்க.

அப்போதுதான் கிழவர் வந்து இங்கிருக்கும் அமர்க்களத்தைப் பார்த்து, தீயை மிதித்தவர்போல் துள்ளிக் குதித்து, "ஐயையோ! இதென்ன போலீஸ் கூட்டம்? என்ன சமாச்சாரம்?" என்று கூறியபடியே, பயத்தால் கையிலிருந்த மன்மதபாண சஞ்சீவி நழுவி விட்டதும் தெரியாது ஓடிவந்தார். டாக்டர் குறும்பாக நகைத்துக்கொண்டே, அந்த மருந்தைக் கையில் எடுத்துக்கொண்டு அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார்.

இதைக் கவனித்த கிழவருக்கு அவமானம் தாங்காமல், கையையும் முகத்தையும் கோணக் கோண வலித்துக் கொண்டே,

"டாக்டர்! இப்படி குடுங்கோ" என்று டாக்டர் கையிலிருந்து அதைப் பிடுங்கிக் கொண்ட பிறகே அங்கு நடக்கும் சங்கதிகளைத் தெரிந்து கொண்டார். இடி இடித்தாற்போல் அலறியபடியே, "ஐயையோ! குடி முழுகிப்போச்சே! நகைகள், சாமான்கள் எல்லாம் 5 ஆயிரம் ரூபாயாச்சே! ஸ்வாமீ! என்று அடித்துக் கொண்டார்.

ஏகாம் :—சார்! கத்தினல் உபயோகம் என்ன? பேசாமெ இரும். எங்களால் ஆனதைச் செய்து இதைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்ரோம். மைதிலியை நோக்கி, "அம்மா! வந்த பெண்கள் எப்படி இருந்தார்கள்? ஏதாவது அடையாளம் சொல்ல முடியுமா?

மைதிலி :—' சாதாரண உயரமும், வசீகரமான முகத்தோற்றமும், நாஸூக்கான அலங்காரத்தோடும் இருந்தார்கள். வேறே ஒண்ணும் தெரியல்லெ'....இன்ஸ்பெக்டர் இவைகளைக் குறித்துக் கொண்டு கருப்பனின் வாக்குமூலத்தையும் எழுதிக்கொண்டு போய்விட்டார்.

கிழவரின் முகத்தில் மட்டும் நம்பிக்கை இழந்த ஓர் கள்ள புத்தியின் ஜோதியே ஜ்வலித்ததை மைதிலி அறியாமலில்லை. அதற்கேற்றாப்போல் அதே சமயம் கிழவர் ஒருமாதிரியான விரைப்புப் பார்வை பார்த்தபடியே, "ஏண்டீ! இந்த கதை எல்லாம் நிச்சயமா நடந்ததுன்னு எனக்குத் தோணவே இல்லெ. கரப்பன்தான் ஒங் கையாளாச்சே. இன்னிக்கி காத்தாலேகூட அந்த அயோக்யப் பயல் வேணுசாமி இந்தத் தெருவுலே போனன்; நான் பாத்தேன். அந்த நாய்க்கு இங்கே என்ன வேலேன்றேன். நீ ஏதோ சொல்லி சங்கேதம் பண்ணிதான் அவன் வந்திருப்பான். அவனுக்கு இதெல்லாம் கழட்டி குடுத்துட்டு இப்படி ஒருவிதமாக கதை கட்டி புட்டியோன்னுதான் சந்தேகம்" என்று அழுத்தமான குரலில் சொன்னர்.

மைதிலியின் காதில் இச்சொற்கள் கேட்கும்போது அவளை அப்படியே முள் புதரில் போட்டுப் புரட்டுவதுபோல் சகிக்கமாட்டாத வேதனை செய்தது. "ஹா....ராம....ராமா!" என்று காதைப் பொத்திக்கொண்டு உள்ளே போய்விட்டாள்.

கருப்பனுக்கும் தாங்கமுடியாத ஆத்திரம் உண்டாகிவிட்டது. அவன் தேகம் படபடக்க "எஜமான்! இந்த கயிதை மேலெ இப்படில்லாம் சொல்லாதீங்க. தர்ம தேவதென்னு அம்மாளுக்குத்தான் தகும். அவங்களெ பாத்து அக்குறும்பா அநீதமா சொன்னீங்கன்னு கண்ணவிஞ்சிப்பூடுங்க. இந்த நாயெ வேலெக்கு வாணும்னுட்டாக்கா ஓடிப்போவுது. இதுக்காவ இப்பிடியா சாமி சொல்றது" என்று தன்னை மீறிக் கூறிவிட்டான்.

கிழவர் தத்திக் குதித்து தாண்டவமாடிக் கொண்டே, "ஏண்டா! என் கண்ணுடா அவிஞ்சிபூடும்! இத்தனை தைரியமாடா ஒனக்கு வந்துட்டது?" என்று ஆவேசத்துடன் அவனை அடிக்கக் கையை ஓங்கிக்கொண்டு வந்தார். அச்சமயம் வீதி நடையில் "முத்து! முத்து!" என்ற குரல் கேட்டது. அது வேணுசாமியின் குரல்போல் கேட்டதால், கிழவரின் ஆவேசம் கருப்பனை விட்டு நடையில் தாவியது. "ஆ ஹா! வந்தயாடா! சோதாப்பயலே! முத்துவா, முத்து! முத்து, பவழம் எல்லாம் இருக்கு வாடா; வா" என்று தன் கைப்பிரம்பை எடுத்துக் கொண்டு விசையாக நடந்து, நடையில் வந்து பார்த்தார். அப்படியே திடுக்கிட்டு நின்றார்.

அவர் அவ்வூரில் நன்றாகப் படித்து சாஸ்திரோக்தமாய் விஷயமறிந்த பண்டிதர். அவர் முத்துவின் பள்ளிக்கூடத்துத் தமிழ்ப் பண்டிதர் என்றதை யறிந்ததும் கிழவரின் முகம் படும் பாட்டைக் கேட்கவேண்டுமா? தடியைக் கீழே போட்டுவிட்டு தன் சவுக்கத்தை இழுத்து கட்டிக்கொண்டு, தொந்தி பூமியில் பதிய சாஷ்டாங்கமாய்க் கீழே விழுந்து நமஸ்கரித்து எழுந்து, "மன்னிக்கணும்....எங்க ஒறவுக்காரப் பையன் ஒத்தன் ரொம்ப சோதாவாயும், திருடனும் இருக்கான். அவன் வந்துட்டான்னு பார்த்தேன்" என்று மழ மழ, கொழ கொழ வென்று இழுத்தார்.

வந்த வாத்தியார் சற்று உரத்த குரலில், "என்னய்யா! தினம் தினம் உம்முடைய வீட்டிற்கு நடந்து நடந்து காலும் தேஞ்சு போய்விட்டது. நீர் பாக்கி பணத்தைக் குடுக்கப்போறீரா என்ன சொல்றீர்?" என்று கேட்டார்.

கிழவர் :—ஐயோ! உமக்குன்னு வெச்சிருந்த பணந்தான் இன்னிக்கி கொள்ளை பூட்டுதே. 5 ஆயிரம் ரூபாய்க்கு மேலே சொத்து போயிடுத்து ஐயா! நான் அடுத்த மாதம் கட்டாயம் குடுத்துட்ரேன். மன்னிக்கணும்—என்று சமாதானம் செய்து அனுப்பிவிட்டு, "அப்பாடா! இம்முறையும் தப்பித்துக்கொண்டேன். சனியன் தொலைஞ்சுது" என்று தலையைத் தடவினர்.

பார்வைக்குப் பெரிய மனிதர்களாயிருக்கும் எத்தனையோ பேர்களிடம் உள்ளுக்குள் எலும்புருக்கி நோயின் கிருமிகளைப் போல் கடன் பொத்தல்கள் துளைத்துக்கொண்டே இருக்கின்றன. அவர்களுடைய கடன் வெளிக்குத் தெரிவதில்லை. ஏன்? பெரிய மனிதன் என்கிற ஹோதாவும், மோட்டார், பங்களா, வயிரசெட்டு நகைகள் முதலியவைகள் பார்ப்பவர்களைப் பிரமிக்கச் செய்கின்றன. அதனுல் கடன் தொல்லைகள் அதிகமிருப்பவர்களையும் இல்லாதவர்கள் போலவே பிறர் நினைக்க இடமேற்படுகிறது. யாராவது இருப்பதாகச் சொன்னாலும் அதை நம்பமுடியாது வாதிக்கவும் ஜனங்கள் தயங்குவதில்லை. "இத்தனை பணக்காரர்களுக்குக் கடன் இருப்பதாவது, இதெல்லாம் வயிற்றெரிச்சலால் சொல்லும் வார்த்தையாகும். ஒரு வைர அட்டிகையின் விலை காணுது மற்றவர்களின் செல்வம்" என்று பொது மக்கள் கூறுவார்கள்.

அந்த வைர அட்டிகைக்கும், நெக்லேஸுக்கும், மோட்டாருக்குந்தான் சிலர் கடன் வாங்கிச் செய்திருக்கிறுர்கள் என்பது அந்த பொது மக்களுக்கு எப்படித் தெரியும்? இம்மாதிரி தடபுடல் செய்து வாழும் பெரிய மனிதர்களின் வாழ்க்கை சோடா புட்டியின் (காஸ்) காற்றுப்போல் ஒரு நிமிடம் பொங்கி அடங்கி விடுகிறது. பிறகு பெரிய மனுஷத்தராவெல்லாம் வெறும் பேச்சாக முடிகிறது.

பின்னும் சிலரோ, தம்மிடம் நிறைய பணமிருப்பினும் அதை வெளிக்கும் காட்டிக் கொள்ளாமல் அமுக்கமாக விருப்பதும், தனக்கு மிகவும் ஆப்தமானவர்களுக்குக்கூட தன்னிடம் இல்லாத சமயத்திலும் பிறரிடமாவது கடனை வாங்கிக் கொடுத்து

உதவி செய்த பெருமையை அடையும் பொருட்டு வாங்கிக் கொடுப்பதும், பிறகு தான் தவிப்பதுமாக நடப்பதும் உண்டு. இதில் இவர்கள் பார்க்கும் பெருமையைவிட நஷ்டம்தான் அதிக மென்பது பின்பல்லவோ தெரியும்.

இந்த இரண்டாவது கோஷ்டியில் சேர்ந்தவர் நமது தாதா. அவர் தன்னுடைய ஆப்த சினேகிதரான எதிர் வீட்டு தாதாவுக்கு மூன்றாங் கல்யாணத்தின் செலவுக்காக 500 ரூபாய் அந்த வாத்தியாரிடம் தானே முன்னின்று வாங்கிக் கொடுத்தார். அம்மாதிரி கொடுத்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று, தான் சிறு பெண்ணை மணந்ததுபோல் அவரும் மணந்து கொண்டு விட்டால், ஊரார் தன்னை மட்டும் ஏசாமல் கூட அவரையும் சேர்த்துக் கொள்வார்கள். அதில் ஒரு சந்தோஷம். மற்றொன்று, கடன் வாங்கியாவது தான் உபகாரம் செய்த பெருமையை யடைவது, தனது தாராளத்தைக் காட்டுவதற்கு இதொரு வழி. இவ்விரண்டும் சேர்ந்து கொடுத்து விட்டார்.

சொத்திற்காக ஆசைப்பட்டே மைதிலியை இவர் காலில் அத்தை மகா பாவி கட்டி விட்டாள். எதிர் வீட்டுக் கிழவருக்கோ அடியோடு ஒரு வேளைச் சோற்றுக்கும் விதியற்ற ஓர் ஏழை குடும்பம் பூராவும் பிழைக்கும் நோக்கத்தில் தங்கள் இளஞ் சிறுமியைக் கிழவருக்குக் கட்டிக் கொடுத்துவிட்டு, சுமார் ஒரு டஜன் பேர்வழிகள் வீட்டோடு 'காம்ப்' போட்டு விட்டார்கள்.

இளம் மனைவிக்கு ஆசைப்பட்ட கிழவருக்கு சிறிசு, பெரிசு, கிழம்கட்டு, குழந்தை, குஞ்சான், எல்லாமாக வீடு சம்பூர்ணமாகி விட்டதால், எத்தனை விளைவில் வந்தாலும், சம்பாதித்தாலும் ஓட்டைப் பாத்திரத்தில் வைத்த ஜலம்போல் போய் விடுவதால், பணத்தைக் கொடுக்க அடியோடு வழியில்லாது போய்விட்டது.

வட்டியோடு அசல் அதிகமாகி விட்டதால், வாங்கிக் கொடுத்த கிழவருக்கும் தன் கை விட்டுக்கொடுக்க மனம் வரவில்லை. அந்தக் கிழவரைப் பகைத்துக் கொள்ளவும் இஷ்டமில்லை. ஆகையால், அவருடன் கூடவிருந்தே பணத்தை வாங்கும்

உழைக்கும் ஏகாம்பரம், தான் எப்படியாவது கஷ்டப்பட்டு இந்த மாயக் கொள்ளையைக் கண்டுபிடித்துப் பொது மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று எண்ணினாரே யன்றி, இதனால் தனக்கு அபாரமான புகழும், பட்டங்களும், அரசாங்கத்தாரால் நன் மதிப்பும் உண்டாகிவிடுமென்ற நப்பாசையையோ அல்லது ஐம் பத்தையோ அவர் ஒரு சிறிதும் எதிர்பார்க்கவே இல்லை.

இரண்டாவது கோஷ்டியில் சார்ந்துள்ள சப் இன்ஸ் பெக்டரும் ஹெட்கான்ஸ்டேபிளும் இதை எப்படியாவது கண்டு பிடித்துத் தாங்கள் இன்னும் உயர்ந்த பதவிக்கு உடனே மாற வேண்டும் என்ற நோக்கத்தை மனப்பூர்வமாகக் கொண்டுவிட்ட தனால்தான், அவர்களில் சிலர் முன் தெரிவித்ததுபோல் பல தொழி லாளிகளை இம்சை செய்தார்கள். ஒன்றிற்கும் பலனே இல்லை.

இந்த வைபவத்தில் கிழவர் நகைகளும், பொருளும் திருடு போய் விட்ட பெரும் துக்கத்தையும் லக்ஷியம் செய்யாமல், அந்த மகா உத்தமியான வேணியின்மீது கொண்ட துர் எண்ணத் தின்மீதே கண்ணாக இருந்தார். அவர்களை எப்படியாவது தம் வீட்டோடு கொண்டு வைத்துக்கொண்டு மூர்த்திக்கு உத்தியோகம் கொடுப்பதாகச் சொல்லி, அவர்களை ஏமாற்றித் தன் எண்ணத்தை முடித்துக்கொள்ள எண்ணினார்.

ஒருதினம் ஏதோ வார்த்தையின் பேரில் மூர்த்தி, தனக்கு அடியோடு வருவாயே இல்லாததால், தன் தாயாரைப் பார்க்கப் போக முடியாதிருக்கிறதென்று சொல்லிவிட்டதை ஓர் சாக்காகக் கொண்ட கிழவர், "மூர்த்தி! இதென்ன பிரமாதம்? சமயத்துக்கு மனுஷாளுக்கு மனுஷாள் உதவக்கூடாதா என்ன? இதோ பத்து ரூபாய் வாங்கிக்கோம். ஒங்க தாயாரைப் பாத்துட்டு வாரும். இதை நீர் நிதானமா திருப்பித் தரலாம்" என்றார்.

மூர்த்தி ஒருபோதும் ஒருவரிடமும் கடனே வாங்கத்துணி யாதவன், தாயாரின் மீதுள்ள அளவு கடந்த அன்பால் பார்க்க வேண்டுமென்ற வேட்கையினால் வேணிக்கும் தெரியாமல் அதற்கு இசைந்து கையை நீட்டி ரூபாயை வாங்கிவிட்டான். கிழவர் சந் தோஷத்துடன் போய்விட்டார். பிறகு மூர்த்தி, வேணியிடம்

வந்து, "வேணி! எனக்கு இரவு பகலாக என் அம்மாவின் ஞாபக மாகவே இருக்கிறது. நான் இன்னிக்கு ராத்திரியே புறப்பட்டுப் போய் நாளை மறுநாள் வந்துட்றேன். நீ குழந்தைகளோடே ஜாக்கிரதையா யிரு" என்றான்.

வேணி:—நானும் அம்மாவே பாத்து எத்தனேயோ நாளாச்சே! நானும் வறேனே!

மூர்த்தி:—இல்லே வேணீ! குழந்தைகளை யாரிடம் விட்டு விட்டுப் போறது? ராஜூ அழுவான். அடுத்த தரம் குழந்தை களையும் அழைச்சிண்டுபோய் அம்மாவுக்குக் காட்டிட்டு வரலாம். அம்மாவும் குழந்தைகளைப் பார்க்கணும்னு சொன்ன. சரி, நான் போய் பழங்கள் வாங்கிக்கொண்டு வறேன். நீ சாப்பாடு தயார் பண்ணு" என்று கூறிவிட்டுக் கடைக்குச் சென்றான்.

## 27

காமக் கள்வர்களுக்குக் கபட புத்தி அதிகமேயன்றித் துல்லிய எண்ணங்களைத் தரும் தூய புத்தி உதயமே ஆகாதல்லவா? அவர்கள் பார்ப்பதெல்லாம் விகாரப் பார்வை. செய்வதெல்லாம் விபரீதச் செய்கை. எண்ணுவதெல்லாம் விஷம் நிறைந்த கொடிய எண்ணங்கள். அவர்கள் ஸ்வாசிக்கும் ஒவ்வொரு மூச்சும் உயிரைக் கொள்ளை கொள்ளும் சர்ப்பத்தின் 'உஸ்' என்ற சீற்றத்திற்கு ஒப்பான, மங்கையரின் உயிரினுமினிய கற்பை உரிஞ்ச வரும் சீற்றக் காற்றாகவே இருக்கும்.

இத்தகைய விசேஷாம்சங்கள் நிறைந்த மகிமை கிழவரை மட்டும் விட்டு அகலுமா? மூர்த்தி கையை நீட்டிப் பணத்தை வாங்கிக்கொண்டதுமே தனது காரியத்திற்கு அபாரமான வெற்றி நிச்சயமாகக் கிடைத்துவிட்டது என்றே தீர்மானித்துப் பின்னும் பன்மடங்கு அதிகரித்த சந்தோஷத்தையடைந்து விட்டார்.

மூர்த்தி ஊருக்குப் போகும் நேரத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அவன் போய்விட்டதையறிந்த உடனே மெல்ல பல்லை இளித்துக்கொண்டு, மூக்கை நோண்டியபடியே உள்ளே வந்து பரம சாதுவைப்போல, "எம்மா! மூர்த்தி ஊருக்குப் போயிட்டாரா! ஐயோ! ஒரு பெலாப் பழத்தைக் குடுத்தனுப்பலாம்னு பாத்தேன். அதுக்குள்ளே போயிட்டாரே" என்று கூறிக் கொண்டே கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்தார்.

கிழவரின் துர் எண்ணம் பூராவும் வேணிக்குத் தெரிந்துவிட்டதாகையால், அங்கு அவர் வந்து உட்கார்ந்ததும் அவள் தேகமே கிடு கிடு என்று நடுங்கியது. தனக்கு ஒருவித கெட்ட பெயரும் இல்லாது, ஆபத்தில்லாது கடவுள் காப்பாற்றவேண்டுமே என்ற பயம் அவளை வதைக்கிறது. ஆயினும் இந்த முட்டாள் கிழவன் ஒரு இளங் குழந்தையைக் கொலை செய்துவிட்டதற் கொப்பாக வீட்டில் துடிக்க வைத்த பரிபவம் போதாமல், அயல் பெண்களின் பேரிலும் கண் வைத்து மானங்கெட்டு வந்திருக்கும் ஈன புத்திக்கு ஓர் பாடம் கற்பிக்கவேண்டும்; அதை எந்த முறையில் செய்யலாம் என்றே அவள் யோசனை செய்துகொண்டிருந்தாள். அவள் மனத்தில் ஒரு யோசனை தோன்றியது. அதை நிறைவேற்றவே அவள் சமயம் பார்த்துக்கொண்டிருந்தாள். ஆதலால், கிழவரைப் பார்த்ததும் மிகுந்த தைரியசாலிபோல் முகத்தில் சிரிப்பையும், துணிகரத்தையும் வருவித்துக்கொண்டு, "தாதா! வாங்கோ! வாங்கோ!" என்று ஒருநாளும் இல்லாமல் திருநாளைப்போல வரவேற்றாள்.

கிழவர்:—(முகத்தைச் சுளித்துக்கொண்டபடியே) என்ன வேணி! நீ கூட தாதான்னு கூப்பிட்றயே. நான் தாதாவா? என்னெ பாக்கர கிழங்களெல்லாம் என்னடா நீ ரொம்ப சின்ன பிள்ளையாட்டமா இருக்கயேன்னு வயித்தெரிச்சப்பட்ரா. நீ என்னமோ இப்பிடி கூப்பட்ரே. இனுமே அப்படி கூப்படாதே. ஏதோ கூப்பட்ர மாதிரி இல்லையா? அப்படி கூப்டேன்....ஹி! ஹி! ஹி! நீ மகா புத்திசாலி. என் மனசெ நன்னா தெரிஞ்சிண்டிருப்பேன்னு நினைக்கிறேன். என்ன வேணீ! அது சரிதானா?

வேணி :—ஹி! ஹி! ரொம்ப சரின்னு! அவருக்கு எப்படி பணம் கெடைக்கும் எப்போ ஊருக்குப் போவார்னுதான் எதிர் பாத்தேன்.

கிழவர் :—ஹாஹ்ஹஹா !.... அப்படியா! அந்த ரகஸியத்தை தெரிஞ்சுண்டுதான் நானே பணங் கொடுத்து அவரே ஊருக்கு அனுப்பிட்டேன். இது ஒனக்குத் தெரியாதா!

வேணி :—(அடங்காத ஆச்சரியத்துடன்) அப்படியா! எனக்குத் தெரியாதே. ரொம்ப சந்தோஷம். அப்படீன்னு அவர் வர வரைக்கும் நீங்க இங்கேயே இருக்கலாம். வீட்டுக்கே போக வாண்டாம்.

கிழவர் :—(அபாரமான சந்தோஷத்துடன்) அடாடாடா! கரும்பு தின்னக் கூலியா கேப்பா? நானும் அப்படிதான் நெனச்சிண்டிருக்கேன். ரொம்ப சந்தோஷம்.—என்று கயிற்றுக் கட்டிலில் சாய்ந்துகொண்டார்.

வேணி :—அது சரிதான் தாதா! என்ன இருந்தாலும் அசல் புருஷா ஆத்தோடே இருந்தா பாக்கரவாளுக்கு சந்தேகமாயிடும். அதோடு குழந்தைகளும் புத்தி தெரிஞ்ச கொழந்தைகள். அதுக்கு என்ன தெரியும்? அந்த தாதா தினம் ஆத்திலேயே இருந்தார்னு அவா அப்பா வந்ததும் சொல்லிட்டாக்கா என்னெவிட ஒங்களுக்குதான் அவமானம் அதிகம்.

கிழவர் :—ஆமாம். வேணீ! அதுக்கு என்ன உபாயம் செய்யலாம்?

வேணி :—ஒங்க மனஸு திருப்தியாகணும்னுக்க ஒரு சின்ன காரியத்தைச் செய்துதான் ஆகணும். அதாவது,--நீங்க ஆத்துக்குப் போனதும் ஏதோ அவசர ஜோலியா கிராமத்துக்குப் போகணும்னு மூட்டெ கட்டிண்டு வண்டியிலேறி பகிரங்கமா ஸ்டேஷனுக்குப் போயிடுங்கோ. மூட்டெலே ஒரு நல்ல புடவை, நகைகள் எல்லாம் கட்டிக்கங்கோ. எங்காவது மறைவான எடத்துலே போயி ஒரு பெரிய சுமங்கலிபோல் முகத்துலே நெறைய மஞ்சளே பூசிண்டு பெரிய குங்குமப் பொட்டு வெச்சுக்கங்கோ! பொடவெயே சாதாரணமா முன் கொசான் வெச்சு கட்டிக்கங்கோ! காதுதான்

பெரிசாவே வளர்ந்திருக்கு. கம்மல் போட்டுக்கங்கோ! ஸ்ப்ரிங்கு மூக்குத்தி வாங்கி ரெண்டு மூக்குக்கும் போட்டுண்டு மூக்குக் கம்பி —பழய நாளேய நகை—அதையும் எட மூக்குலே மாட்டிக்கங்கோ. காதுலே கத்திரிபாவிலி போட்டுடுங்க. கையிலே காப்பு, வளையல், கால்லே காப்பு, கொலுசு, மெட்டி, கழுத்துலே சங்கிலி முதலிய நகைகள். தெரியாதா! இதெல்லாம் போட்டுண்டு கண்ணுக்கும் மை இட்டுண்டாக்கா ஆளே அடயாளம் தெரியாது.

தாதா! என்ன யோசனே? அப்படி செய்துண்டு நீங்க ஊரிலேந்து வராப்பலே ஒரு ஒத்தெ மாட்டு வண்டிலே இங்கே வந்து ஜம்முனு எறங்குங்கோ! எங்க அத்தெ வடக்கே இருக்கா. அவ வரப்போரான்னு நான் பசங்களுக்குச் சொல்லிப்புட்ரேன். எங்க வீட்டுக்கு யாராவது வந்துண்டே இருப்பா! அதுனலே அவாளுக்கும் எங்க அத்தேன்னு சொல்லிப்புட்ரேன். தெரிஞ்சுதா! நீங்க அசல் பெரிய சுமங்கலியா ஸ்ரீமகா லக்ஷ்மிபோல சேர்வை தரணும். அப்பறம் சேந்தாப்பலெ பத்து நாளெக்கி என்னெ விட்டு போகவே வாண்டாம்.

இதைக் கேட்கக் கேட்க கிழவருக்கு மூளேயே கலங்கி விட்டது. தன்னுசை நிறைவேறும் பொருட்டு வேஷம் போட்டுக் கொள்ள ஆசை தூண்டுகிறது. ஆனல் எப்படி பெண் வேஷம் போடுவது என்று சற்று தயங்குகிறது. இவ்விரண்டு போராட்டத்தில் முதல் யோசனேயே ஜெயித்தது. முகத்தில் தெம்பும் சிரிப்பும் பொங்கியது. “சரி. வேணி! தலேக்கி என்ன செய்யறது?” என்ருர்.

வேணி :—ஆ! அது சொல்ல மறந்துவிட்டேனே. தலேயே நன்ருகவே மொட்டை யடித்துவிடுங்கள். நீங்கள் ரெயிலிலிருந்து தனியாக வரவேண்டாம். திருப்பதி ப்ரார்த்தனேக்குப் போய் மொட்டையடித்துக்கொண்டு எத்தனே கோவிந்தா கோஷ்டி வருகிருர்கள் பாருங்கள்.....ஆ....நெனவு வரது. எங்காத்து வேலேக்காரி திருப்பதிக்குப் போயிருக்கா. நாளெ காத்தாலே அவா ஊர் சுற்றி கோவிந்தா போட்டுவிட்டு, சமாராதனே செய்யப்போரு! நீங்க சமயம் பாத்திருந்து அந்த மொட்டெகளோடே கலந்துகொண்டு

இந்த தெருவில் மட்டும் கூடவந்து எங்க வீட்டுலே நொழஞ்சுடுங்க. இதுதான் சரியான யோசனை. ஒருவருக்கும் சந்தேகமிராது. என்ன தாதா?

கிழவர் :—தாதா தாதான்னு கூப்படாதே. சரியான யோசனை தான். அப்படியே செய்துபுட்ரேன். நான் போயி இப்பவே வேண்டிய ஏற்பாடு செய்றேன். நீ என்னானாலும் கெட்டிக் காரியில்லையா! சரி நான் வரேன்—என்று கூறிக்கொண்டே கையை நீட்டி வேணியைத் தொடப்போனார். வேணி நகர்ந்து கொண்டு, "என்ன தாதா! கணத்து ஜலத்தை வெள்ளமா கொண்டு போறது. போய் வாருங்க" என்றாள். கிழவரும் மான அவமானங்கூடத் தெரியாமல் எழுந்து போய்விட்டார். வேணி கையைக் கொட்டிக் கலகலவென்று நகைத்தாள். அதுவரையில் மூலையில் பாயுடன் சுருட்டிக்கொண்டு ஒட்டுக் கேட்டிருந்த வாஸந்தியும் கிடுகிடுவென்று எழுந்து வந்து, "அம்மா! பேஷ்!" என்று கையைத் தட்டியும் சுற்றிச் சுற்றிக் குதித்தும் பெரிதாக நகைத்தாள்.

## 28

மைதிலி, * "அனாதைப் பெண்" என்ற கதையைப் படித்துக் கொண்டிருந்தாள். அதில் லீலாவதியம்மாள் இந்திராணியை (அனாதைப் பெண்ணை) ஓர் கிழவனை மணக்கும்படிக் கூறும் கட்டத்தை வாசிக்கும்போது, மைதிலியின் மனத்தில் தான் படிப்பது கதை என்பதே மறந்து போயிற்று. தாங்க முடியாத உணர்ச்சி மேலீட்டால், "ஐயையோ! இந்திராணீ! வேண்டாம்; கிழவனை மணக்காதே. அதெ விட கணத்துலே விழுந்து செத்துப் போ.

* "அனாதைப் பெண்" என்ற அதி அற்புதமான டாக்கீ நாவலை வாங்கிப் படியுங்கள். விலை ரூபாய் 1—4 தான்.

மகா பாவியான எனக்கு அந்த வருத்தம் தெரியும்" என்று வாய் விட்டுக் கத்திவிட்டாள்.

எதிரிலிருந்த கருப்பனுக்கு மளமளவென்று கண்ணீர் வந்து விட்டது. அதைத் துடைத்துக்கொண்டு, "அம்மா! கதைப் புத்தகம் படிக்கச்செ என்னம்மா நெசம்போல பேசரீங்க?" என்றான். அந்த வார்த்தை காதில் கேட்ட பிறகே தான் படிப்பது கதை; உண்மையல்லவென்பது நினைவிற்கு வந்தது. தன் கையி லுள்ள புத்தகத்தையும் கருப்பனையும் மாறி மாறிப் பார்த்தாள். வாய் திறந்து பேசவில்லை; மௌனமாகச் சாய்ந்தாள்.

கருப்பன் :—அம்மா! ஐயா எங்கேயோ ஊருக்குப் போராங் களாமே. எந்த ஊருக்கும்மா?

மைதிலி :—கருப்பா! எங்கே போனா எனக்கென்ன? எந்த ஊருக்காவது போகட்டும். என்னோடெ அதெல்லாம் சொல்லாதே. ஒன் வேலெயெப் பாரு.

கிழவர் :—(கையில் ஒரு மூட்டையுடன் அங்குப் பிரசன்ன மாகி ஒய்யார நடை நடந்தவாறு) டேய்! வண்டி கட்டினயாடா!

கருப்பன் :—கட்டிபுட்டேஞ் சாமி, வாசல்லெ தயாராக் கீதுங்க.

கிழவர் :—அடீ மைதிலீ! நான் ஊருக்குப் போய் வறேன். எப்ப வருவேன்னு எனக்கே தெரியாது. ஜாக்கிரதையா வீட்டெ பாத்துக்கோ. அந்தப் போக்கிரிப் பயல் இந்தப் பக்கம் வந்தான்னு தெரிஞ்சுதோ ஒங்க ரெண்டு பேரையும் சேத்துக் கொண்ணுபுடு வேன். தெரியுமா?—என்று முறைத்துப் பார்த்தார்.

'தான் திருடன்; பிறத்தியானை நம்பமாட்டான்' என்பது பழமொழி. அது இந்தக் கிழவனிடம் சரியாகிவிட்டது. மைதிலி பதிலும் பேசவில்லை. தலையை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. கிழவரும் முடுக்காகப் போய்விட்டார். வண்டியில் ஏறியதும் வண்டி மானாகப் பறந்தது.

## 29

சோமக்கலம், திருச்சின்னம், சங்கு, தாதன் பாடிக் கொண்டே தட்டும் ஓசை முதலிய சப்தத்துடன், "கோவிந்தா! கோவிந்தா! கோவிந்தா! கோவிந்தா!" என்று பெரிய கோஷம் வீதியில் கேட்டது. தம்பதிகள் மஞ்சள் உடையுடன் கழுத்தில் தாவடமும் மொட்டைத் தலையுமாக திருப்பதி பிரார்த்தனை செலுத்திவிட்டு ஊர்வலம் வரும் காக்ஷி பிரம்மானந்தமா யிருந்தது.

ஊர்வலத்தில் அனேக ஆண்களும் பெண்களும் மொட்டையடித்தவர்கள், அடிக்காதவர்கள் எல்லாம் கலந்திருந்தார்கள். அத்தனை கும்பலின் மத்தியில், சாக்ஷாத் சர்வலோக சரண்யன் மோகனுவதாரம் செய்ததுபோல் வேதாசலம் மகாலக்ஷ்மி ரூபங் கொண்டு வேதவல்லியம்மாளாகப் பிரகாசிக்கும்காக்ஷி, வேணிக்குத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. வேணி சொல்லிய அலங்காரங்களில் ஒரு சிறிதும் குறைவின்றித் தாராளமாகச் செய்திருப்பதோடு புல்லாக்கும் அணிந்திருந்ததால், உண்மையில் அவர் அடையாளம் அடியோடு மாறிப் போய்விட்டது.

இடையிடையே அவரும், "கோவிந்தா! கோவிந்தா!" என்று பகவன்னுமாவைச் சொல்லி கபட சன்யாசிபோல் வேஷம் போட்டுக்கொண்டே வருகிறார். காதிலும் மூக்கிலும் உள்ள நகைகளின் வேதனையொருபுறம் சகிக்க முடியவில்லை. காலில் இறுத்தும் காப்பு கொலுசு நடக்கத் தெரியாத வேதனை செய்கிறது. இந்த அழகுடன் குனிந்த தலை நிமிராமல் மாமியார் வீட்டுப் புது மாட்டுப் பெண்ணைப்போல் நடந்து வருகிறார்.

காசு போடுகிறவர்களும், கோவிந்தனே பிரத்தியக்ஷமாகியது போல் எண்ணிய சில பக்தர்கள் நமஸ்கரிப்பதும் "கோவிந்தா! கோவிந்தா"வென்று கூறிச் செல்வதுமாக விருக்கிறார்கள்.

வேணியும் வாஸந்தியும் இதை வீதியிலிருந்து பார்த்ததும் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள். பிறர் இதைப் பார்த்துவிடப் போகிறார்களே என்ற பயம் ஒருபுறம். அதையடக்கிக்கொண்டு பார்க்கையில், ஊர்வலம் வீட்டு வாசலில் வந்துவிட்டது.

வேதவல்லியம்மாள் மெல்ல இந்தத் திண்ணையின் பக்கம் வந்தாள். உடனே வேணி நிதியைக் கண்டவள்போல் நடித்து, "அத்தே! இதென்ன ஆச்சரியமா இருக்கே. எப்போ வந்தே! திருப்பதி போய்வறயா" என்றாள். வாஸந்தி ஒரு துள்ளு துள்ளிக் குதித்து வேதம்மாளின் கைகளைப் பிடித்துக்கொண்டு, "அத்தே பாட்டீ! அத்தே பாட்டீ! வா! வா! எங்களுக்கு என்ன கொண்டு வந்தே? எங்கம்மா நேத்துபுடிச்சு நீ வரப்போரேன்னு சொல்லி குதிக்கரா; உள்ளே வா அத்தே பாட்டீ!" என்று பெரியதோர் நகைப்புடன் கிழவரின் கையைப் பிடித்திழுத்தும் அவரைக் கட்டிக் கொண்டும் குதிக்கிறாள்.

கிழவர் :—வேணீ! சவுக்யமாடியம்மா! எத்தனையோ வருஷ மாச்சு ஒங்களெல்லாம் பாத்து. கல்னோ பூத்துப் போச்சு. இது ஒம் பொண்ணுடியம்மா! உள்ளே வாடா கண்ணே நெறய பலகாரம் கொண்டு வந்திருக்கேன்—என்று கூறிக்கொண்டே அசட்டுப் பார்வையுடன் வாஸந்தியை அழைத்துக்கொண்டு உள்ளே போய்விட்டார்.

உள்ளே சென்ற பிறகே கிழவருக்குச் சற்று உயிர் வந்தது எனலாம். அவர் மாறு வேஷத்தில் வரும்போதும் இந்த வாசற் படியின் பயம் விட்டுப்போகுமா! முதுகு வரையில் வளைந்து குனிந்து செல்வதைக் கண்ட வாஸந்தி கொல்லென்று சிரித்துவிட்டு, "ஏன் அத்தே பாட்டீ! இந்த வாசப்படி குட்டேன்னு ஒனக்கு எப்படி தெரியும்? இங்கே ஒரு தாதா வருவா. அவருக்கு இந்த வாசப் படியே பாத்தாலே பயம். இப்படிதான் குனிஞ்சுண்டு வருவா! அதுமாதிரி நீயும் பண்றேயே! ஏன் அத்தே பாட்டீ! சாமிக்கு வேண்டிண்டு மொட்டெ அடிச்சுட்டயா?" என்றாள்.

கிழவருக்கு இதைக் கேட்டதும் உயிரே போவதுபோலிருக் கிறது. அசட்டுச் சிரிப்பு சிரித்துகொண்டே, "ஆமாண்டி கண்ணு! சாமிக்கு வேண்டிண்டு முடி குடுத்துட்டேன்" என்று கூறிக் கொண்டே தான் கொண்டு வந்திருந்த மூட்டையை அவிழ்த்து அதனுள்ளிருந்து வெற்றிலே பாக்கு, மஞ்சள், புஷ்பம். ரவிக்கைத் துண்டு, பாவாடை முதலிய எல்லாவற்றையும் ஒரு தட்டில்

வைத்துவிட்டு, அதோடு 10 ரூபாய் நோட்டு இரண்டையும் வைத்தார்.

வேணியின் வீட்டிற்குப் பெரிய சுமங்கலியா ஒரு அம்மா அதிசயமா வந்திருப்பதால், வீட்டிலிருப்பவர் இரண்டொருவர் உள்ளே எட்டிப் பார்த்து, "என்ன வேணீ! ஒங்க அத்தேயா? பாத்தாலும் பாவம் போகும். மகாலக்ஷ்மியாட்டும் தொங்கத் தொங்க இருக்கா....எம் பாட்டீ! திருப்பதியிலே இப்ப ரொம்ப குளிரோ? மரப்பாச்சி, மரச் சொம்பு, ஒழக்கு ஒன்னும் வாங்கிண்டு வரல்லேயா?" என்றார்கள்.

கிழவருக்குப் பிராணன் போகிறது. தான் என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. இவரது சங்கடமான நிலைமையை அறிந்த வேணி, "அதை ஏன் கேக்கரங்கோ! ரேணுகொண்டாவில் வண்டி மாறும்போது அந்தச் சாமானிருந்த மூட்டை திருடு போயிடுத்தாம். கோவிந்தார்ப்பணம்னு வந்துட்டாளாம்" என்றாள். இதைக் கேட்ட கிழவரின் உள்ளம் பூரித்தது. சந்தோஷத்துடன் வேணியைப் பார்த்தார். வேணியினிடத்தில் அவருக்கு அதிக நம்பிக்கை யுண்டாகியது.

வேணியின் வீட்டில் வருபவர்களில் சில பெண்டுகள், "எம் பாட்டீ! வடக்கே ஒங்க தேசத்திலே என்னென்ன அதிசயம் சொல்லுங்கோ! ஒரு வேளெ எங்களே மாத்திருக்கா நாங்களும் போகணுமோல்லியோ! திருப்பதியிலே என்ன அதிசயம்?" என்று கேட்டுக்கொண்டே உட்கார்ந்துவிட்டார்கள். கடன் வாங்கியும் பட்டினி. ராமேச்வரம் போயும் சனீச்வரன் விடவில்லை என்பது போல் கிழவர் பாடு திண்டாட்டமாகி விட்டது. வேணிக்கும் வாஸந்திக்கும் சிரிப்பு தாங்கமுடியவில்லை.

அச்சமயம் மைதிலி அங்கு வந்தாள். அவளை வேணி அன்போடு வரவேற்றாள். மைதிலியைப் பார்த்த உடனே கிழவருக்குத் தான் உட்கார்ந்திருந்த இடமே வெடித்து, பூகம்பத்தில் ஆடுவது போலாய்விட்டது. திருகத் திருக விழிக்கிறார். அசட்டுக் களை சொல்லமுடியாமல் சொட்டுகிறது. தர்ம சங்கடப்படுகிறார்.

மைதிலியோ கிழவர் உட்கார்ந்திருக்கும் பக்கமே சமீபத்தில் உட்கார்ந்து வியப்புடன் கிழவரையே பார்த்து, "இது யாரு வேணி?" என்று நமட்டுச் சிரிப்புடன் கேட்டாள்.

வேணி :—நான்தான் நேத்திக்கே எங்க அத்தெ வரப்போருன்னு சொல்லல்லே. அவதான் இவள். திருப்பதிக்குப் போயி பிரார்த்தனை செலுத்திட்டு வந்திருக்கா!

மைதிலி :—அடாடா! சாக்ஷாத் ஸ்ரீ மகாலக்ஷ்மி போல் இருக்கிருர். பாத்தாலும் பாவம் போகும். இந்தக் காலத்திலேகூட இந்தமாதிரி பழ நாள் நகைகள் போட்டுக்கராளோ! இந்தமாதிரி செட்டு எல்லாம் ஒன்னு எங்காத்துலேகூட தாதா பெட்டியிலெ வச்சிருக்கார். எங்க மூத்தாளுதாம்.

இச்சமயம் கிழவரின் மார்பில் கூரிய வாள் பாய்வதுபோல் வேதனை செய்கிறது. 'இந்தச் சனியன் இப்போ எங்கே வந்தது?' என்று திட்டுகிருர். தன் குட்டு வெளியாகிப் போய்விடுமோ என்ற நடுக்கம் அதிகரித்து வாட்டுகிறது. கிழவரின் வேதனை உச்சஸ்தாயியை எட்டிக்கொண்டிருப்பதை வேணி நன்ருக அறிந்துகொண்டாள். வேணி இச்செய்கையை ஏற்கெனவே மைதிலிக்குத் தெரிவித்துவிட்டாளாகையால், அவளும் நன்கறிந்துகொண்டாள். வாஸந்தியோ, தாதாவின் மடியை விட்டு இறங்கவே இல்லை. ராஜு மட்டும் தாதாவின் பின்புறம் கழுத்தைக் கட்டிக்கொண்டு முதுகில் சாய்ந்து ஆடிக்கொண்டிருக்கிருன்.

மைதிலி :—எம் பாட்டீ! ஒங்க வடக்கு தேசத்துலே கூட சின்ன பெண்களெ கிழக்கட்டைகளாகிய பூதங்கள் கல்யாணமென்று பேரை வெச்சு கொலே பண்ர வழக்கமுண்டா?

கிழவரின் மார்பு 'டக் டக்' என்று அடிக்கும் வேகமும் பெருமூச்சின் வேகமும் போட்டியிட்டு சண்டை செய்கிறது. சித்திரவதை இதைவிட வேறு ஒன்றுமே இல்லே. வெயர்வை வெள்ளம் 'குபீர் குபீர்' என்று பொங்கி வெந்நீர்போல் பொங்கி வருகிறது. இந்த நிலைமையில் அவர் என்ன பதில் சொல்வதென்று திணறுகிருர். அசட்டுப் பார்வையும், களையும் அவரைக் கப்பிக் கொண்டன. தடமாடியபடியே பேசத் தொடங்கி, "எந்த தேசத்

துலேயும் இந்தமாதிரி நடக்கிறது. எத்தனை பேர்கள் கிழவனைக் கல்யாணம் பண்ணிண்டும் பேரனும் பேத்தியுமா வாழறா !....

**மைதிலி** (இடை மறுத்து) "பாட்டி! எத்தனையோ பேர்கள் மூலேயில் அடைபட்டுச் சாகிறார்கள் என்றதை ஒளிக்காதேங்கோ. கிழவனைக் கல்யாணம் பண்ணிண்டவாளெ கணக்கெடுத்தாக்கா, "அம்மா திரளுவதற்குள்ளே அய்யா உருளுவதுதான் அதிகம் இருக்கும்" இல்லேயா? சொல்லுங்கோ. அப்படிப்பட்ட கிழங்களெ எல்லாம் ஒன்னு சேத்து ஜெயில்லெ அடைச்சி களியுங் கூழுங்கூட அரெ வயித்துக்குப் போட்டு செக்கிழுக்கவும், கல்லு உடைக்கவும் சொல்லி, வதைச்சாக்கா அப்போ தெரியும் தான் பட்ர கஷ்டமும், சின்ன பெண்கள் கிழவாளெ கட்டிண்டு பட்ர அவஸ்தையும், ஒன்னுதான்னு ஒடம்புலெ ஒரைக்கும். புத்தி வரும்.

**பாட்டி!** அந்தமாதிரி கிழங்கள் கல்யாணத்தோடெயா விட்ரதுகள். அதுகள் நாசமாப் போக. நல்ல குடும்பப் பெண்கள் கணவனோடு பாலும் தேனும்போலே இருக்கும் அருமையான பெண்களின்மீதும் துராக்ருதமான எண்ணத்தோடு கெடுக்கத் துணியரதுகள். என்ன அநியாயம் பாருங்கோ! (இந்த வார்த்தை கிழவருடைய இதயத்தில் செம்மட்டியால் அடித்து நெருப்பையும் அள்ளிப் போடுவதுபோல் இருக்கிறது.) மைதிலி, அதோடும் விடாமல் மேலும் "அதுமட்டுமா பாட்டி! அந்தத் திருட்டுக் கிழங்கள் கபட சன்யாசிபோன்ற கிழங்கள், தாம் மணந்த இளம் மனைவி மகா உத்தமியா யிருப்பவளேயும் சந்தேகிச்சு மிரட்டி, உருட்டி, அடிச்சு, ஈவிரக்கமில்லாமெ வதைக்கிறதுகள். அப்படிப்பட்ட கிழங்களுக்குத் தனியான நரகந்தானே பாட்டி கடவுள் சிருஷ்டிப்பார்?" என்றாள்.

இதைக் கூறும்போது கிழவருக்கு மயக்கம் போட்டுவிடும் போல் ஒருபுறம் ஆகிவிட்டதெனினும் மைதிலியைக் கொலே செய்து விடலாமாவென்றும் ஒருபுறம் ஆத்திரம் பொங்குகிறது. அதே சமயம் மைதிலி வெகு துணிகரமாயும், சாதுர்யமாயும், "ஐயையோ! வேணீ! நல்ல பாம்பூடீ! பாட்டீ! எந்திருங்கோ! ஒங்க பொடவைப் பக்கம்தான் போச்சு பாட்டீ!" என்று ஒரு பெருங் குரல் பாய்ச்சிக் கூறிக்கொண்டே சடக்கென எழுந்தாள்.

பாம்பென்றால் படையும் நடுங்குமல்லவா? கிழவர் மட்டும் அந்த விதிக்கு விலக்கானவரா! வாஸந்தி துள்ளிக் குதித்து எழுந்தாள். கிழவர் தன்னை மறந்து பத்து ஆனை பலத்துடன் தத்தளித்து எழுந்து, "ஐயையோ! வேணீ! மைதிலீ! எங்கேடி பாம்பு!" என்று கூறிக்கொண்டே புடவையை உதறியும், தலைப்பை அவிழ்த்தும் நர்த்தனம் செய்கிறார். மைதிலியும் சந்தர்ப்பத்தைக் கைவிடாமல், த்ரௌபதியைத் துச்சாசனன் ஆத்திரத்துடன் துயில் உரிந்ததுபோல், காளிகா தேவிபோன்ற ஆத்திரத்துடன் பாட்டியின் குசவான்கட்டை திரு திரு என்று இழுத்தவாறு, "ஐயோ! அதோ பாம்பு. இதோ பாம்பு!" என்று கூறியபடியே உருகி விட்டாள்.

இந்தக் குதிப்பிலும் ஆட்டத்திலும் மூக்கிலிருந்த நகைகளும், காதிலிருந்த கத்ரிபாவிலியும் கீழே விழுந்து விட்டன. கிழவர் அரை நிஜார், பனியனுடன் சாரண வீரன்போல் நின்றார். மைதிலி அப்போதுதான் கிழவரைப் பார்த்தவள்போல் அபிநயித்து, "ஐயையோ வேணீ! குடி முழுகி விட்டதுடீ! பாட்டியும் இல்லே; பத்தி எரிஞ்சதுமில்லெ! எங்க வீட்டு தாதாதான்டீ! ஐயோ! வெக்கக்கேடே! வயித்தெரிச்சலெ!" என்று கூறிக் கொண்டே தலையிலடித்துக் கொண்டாள்.

"பாட்டீ! தாத்தாவாயிட்டங்களே! பாட்டீ தாதா! பாட்டீ தாதா!" என்று வாஸந்தியும் ராஜுவும் கையைக் கொட்டிக் குதிக்கிறார்கள். வேணி ஆத்திரம் தாங்காமல் பொங்கி வரும் ஆவேசத்துடன், "ஆஹா! கண் அவிந்த குருடனுக்கும் கொடிய குருடனாகிய காமக் கள்வா? கபட சன்யாசி! என்னை மான பங்கம் செய்ய எண்ணியா என் புருஷனெ ஊருக்கு அனுப்பினெ! உன்னையெ மான பங்கம் பண்ணி, உனக்குப் புத்தி போதிக்கவே நான் இப்படிச் செய்தேன். இனிமே இந்தமாதிரி மானங்கெட்ட கொடிய எண்ணம் எண்ணமாட்டியே! அசல் பெண்களை விழுங்கி ஏப்பம் விடும் காமக் கள்ளனாக மாட்டயே! புத்தி வந்ததா! புத்தி வந்ததா!" என்று பல்லைக் கடித்துக்கொண்டே குடத்தோடு தண்ணீரை எடுத்துக் கிழவனின் தலையிலே தடதடவென்று கொட்டி விட்டாள்.



மூளையே கலங்கி விட்டதுபோல் அதுவரையில் தத்தளித்த கிழவரின் ஆத்திரம் உச்சஸ்தாயியைப் பூரணமாக எட்டிவிட்டது. கண்கள் நெருப்புப் பொறி பறந்தவாறு, அங்கிருந்த தடிக்கம்பை எடுத்து ராஜு உள்பட எல்லோரையும் அடித்து நகர்த்திவிட்டு, கொடியிலிருந்த மூர்த்தியின் வேஷ்டியை இழுத்துக் கட்டிக் கொண்டு, குங்குமத்தை அழித்துவிட்டு ஒரே பாய்ச்சலாக அந்த இடத்தைவிட்டு, வாசற்படியில் தலை இடிப்பதுகூடத் தெரியாமல் ஓடி மறைந்தார்.

## 30

புத்திர வாத்ஸல்யம் சாமானியமானதா? அன்னையிடத்துள்ள பக்தியும் அன்பும்தான் கூறத் திறமுள்ளதா? மூர்த்தி தாயாரின் மீதுள்ள அலை மோதும் கரை காணாத அன்பின் வேகத்தால் இழுக்கப்பட்டு அதே நினைவுடன் ஊரை யடைந்தான். தள்ளாத கிழவி ஒரு மூலையில் ஓலைப் பாயில் படுத்துக்கிடந்தாள். அவள் பக்கத்தில் ஒரு தடிக்கம்பும் ஒரு தீர்த்த டம்ப்ளரும் இருந்தன. கிழவி படுத்திருக்கும் மாதிரியைப் பார்த்தால், அவளுக்குக் களைப்பு அதிகமாகி இருப்பதாயும் சரியாகக் கவனிக்காமல் அலக்ஷியம் செய்து தள்ளி இருப்பதுபோலும் தெரிந்தது. மூர்த்தி அணை கடந்த அன்பு வெள்ளத்துடன் ஓடிப்போய், 'அம்மா! அம்மா!' வென்று அழைத்தவாறு படுத்திருப்பவளைச் சேர்த்துக் கட்டிக் கொண்டான்.

மூர்த்தியின் தாயார் தாங்கமாட்டாத அபாரமான சந்தோஷத்தினால் உள்ளம் பூரிக்க ஆநந்த பாஷ்பம் பெருகியவாறு, "அப்பா மூர்த்தி! வாடா! என் சாமி! ஒன் ஒடம்பு என்னடா இப்படி எளச்சுபோச்சே! வேணீ வரல்லயா! பசங்க வரல்லயா! என் கண்மணி ராஜு நன்னா இருக்கானா!" என்று சந்தோஷப்

பெருக்கினல் கேட்டபடியே எழுந்து உட்கார்ந்து மகனை முதுகில் தடவியும், அணைத்துக்கொண்டும் புத்ரவாத்ஸல்யம் ததும்ப நோக்கினள்.

மூர்த்தி :—அம்மா ! எல்லாரும் சவுக்யமாயிருக்கா. அடுத்த தடவை வரச்சே அழைச்சிண்டுவரேன். நீ எப்படி இருக்கே! ஒடம்பு ஏன் இத்தனெ கேவலமா யிருக்கு? ஒன்னெ முன்னெ போலவே சரியா கவனிக்கிருளா! ஒன்னெ பாத்தா பரிதாபமா இருக்கே ! எலும்பும் தோலுமா இருக்கயே அம்மா !

கிழவி :—அப்பா! அதெத்தாண்டா சொல்லணும்னு ஒன் வரவே எதிர்பாத்துண்டே இருந்தேன். இப்ப ஐந்து, ஆறு மாசமா சரியா பணம் நீ அனுப்பரதில்லே யோன்னே ! அதனுலே இந்த கட்டெயெ கவனிக்கிறவாளே கடயாதுடாப்பா! பணத்துக்காக ஏதோ கொஞ்சம் ஆசெ காட்டினளே யொழிய பணம் நின்னுது, அன்பும் வத்திப் போச்சு. ஒரு நாளைக்கெல்லாம் நான் பட்டினி கடந்தாலும் கேக்கரதில்லே. பகல் 12 மணிக்கோ 1 மணிக்கோ இஷ்டமானபோது அரை வயிறு சாப்பாடுதான் வெக்கரா! ராத்திரிலே சில நாளைக்குத் தண்ணிகூட குடுக்கரதில்லே. கேட்டா "ஓம் பிள்ளே அனுப்பறது தட்டுகெட்டு போச்சோ! எட்டுவேளெ கூட சாதம் போடலாம். ஒன்னெ கொண்டு எங்க கால்லே கட்டி எழவெடுக்கரா. எத்தனெ நாளைக்குத்தான் செய்ய முடியும்? அழைச்சிண்டு போரத்துக்கென்ன?" என்று எப்ப பாத்தாலும் சொல்ருடா! (கிழவிக்குத் துக்கம் தாங்காமல் கண்ணீர் பெருகுகிறது. மூர்த்திக்கும் விசனம் தாங்கமாட்டாது கண்ணீர் வழிகிறது.)

மூர்த்தி :—"அம்மா! போரும்; நிறுத்து. தெரிஞ்சுண்டேம்மா! இனுமே நான் ஒன்னெ இங்கே வெக்கமாட்டேன். எந்த பாடானுலும் பட்டு ஒன்னெ அழச்சிண்டு போயிட்ரேம்மா! நீ வருத்தப்படாதே. பெத்த அம்மாவெ காப்பாத்தரத்தெ விட பெரிய காரியம் எனக்கு வேறு என்ன இருக்கு? அம்மா! நானு ஊருக்குப் போயி தகுந்தாப்பலே எடத்தெ பாத்து வெச்சுட்டு ஓடனே வந்து ஒன்னெ அழெச்சிண்டு போரேன். இவா கண்ணுலே

காட்டமாட்டேன். மாத்ரு பரிபாலனத்துக்கும் கைங்கர்யத்துக்கும் நான் குடுத்து வெக்கணுமேம்மா! கண்ணீர் விடாதே! இந்தா! பழத்தெ சாப்புடு "—என்று கூறிக்கொண்டே கண்ணைத் துடைத்துக்கொண்டு பழத்தை உரித்து அவள் வாயிலே போட்டான். கிழவி பசியோடு சாப்பிட்டாள்.

அச்சமயம் அவ்வீட்டுக்காரர் அங்கு வந்தார். "என்னடா! மூர்த்தி எப்ப வந்தே? என்னவோ! பணத்தெக் குடுக்காதெ இந்தப் பஞ்சகாலத்துலே இப்படி பண்ணுக்கா என்ன பண்றது? ரொம்ப கஷ்டமா இருக்கு" என்று முடிப்பதற்குள் மூர்த்தி இடைமறுத்து, "மாமா! இன்னும் 5, 6 நாள் பொறுத்துக்கங்கோ! எங்கம்மாவெ அழைச்சிண்டு போயிட்ரேன். இனுமே இங்கே விடமாட்டேன். இதுவரைக்கும் காப்பாத்தினதற்கு ரொம்ப வந்தனம்; இந்தாரும் 5 ரூபாய்" என்று கூறிவிட்டு, அவரிடம் ஒரு நோட்டைக் கொடுத்தான்.


அவ்வளவுதானே வேண்டும். பணத்தைப் பார்த்ததும் பல்லிளித்துவிட்டது. "ஏம்மா! காத்தாலே என்ன சாப்பிட்டே. அடீ அம்மாளு! பாட்டிக்கி காப்பி குடுத்தயா?" என்று உபசரிக்க வாரம்பித்தார். மூர்த்திக்கு இந்த நாடகத்தின் வேஷம் நன்றாகத் தெரியுமாதலால், லக்ஷ்யமே செய்யாமல், தாயாருக்குத் தேறுதல் கூறிவிட்டுத் தான் அப்போதே புறப்படுவதாகச் சொன்னான். ஆனால், கிழவி இன்னும் ஒரு நாளாவது கூட இருக்க வேணுமென்று ஆசைப்பட்டதால், அப்படியே செய்ய இசைந்தான்.

தாயின் பரிதாபமும், அன்பும் மூர்த்தியின் மனத்தில் நன்றாகப் பதிந்துவிட்டதால், உடனே அவளை அழைத்துச் செல்வதிலேயே நோக்கம் சென்றது. அவள் இஷ்டப்படியே மூர்த்தி ஒருநாள் கூட இருந்துவிட்டுப் பின்னர் ஊருக்குக் கிளம்பினான்.

பெருமை ! கௌரவம் ! புகழ்மாலை !

சலனப் பட உலகில் சிறந்த தெலுங்கு நடிகையென
இந்த வருஷம் முதல் ஸ்தானத்திற்குத் தேர்ந்து
எடுக்கப்பட்ட கௌரவமடைந்த

ஸ்ரீமதி கண்ணாம்பாவை




முன்பெல்லாம் விட இன்னும் சிறப்பாக

ரோஹிணி பிக்சர்ஸாரின்

# கிருஹலக்ஷ்மி

என்னும் படத்தில் கண்டு களியுங்கள்.

ஆந்திர தேசத்தில் எல்லா முக்கிய ஊர்களிலும்,

**சென்னை பிராட்வே டாக்கிஸிலும்**

**1938 ஹு மார்ச் மீ 12 உ ஆரம்பமாகும்.**

---

**ரோஹிணி பிக்சர்ஸ் லிமிடெட்,**

43, ஆசாரப்பன் தெரு, சென்னை.

முதற்பதிப்புக் காபிகள் பெரும்பாகம் செலவழிந்துவிட்டன !

# உளுத்த இதயம்

ஒவ்வோரு வரியிலும் உங்களைப் பரவசமுறச் செய்யும்

சக்தி வாய்ந்த புதிய நாவல்.

இன்றே நான்கணா ஸ்டாம்பு அனுப்பிப்

பெற்றுக்கொள்ளுங்கள்.

---

## இதற்குப் பின்

# மகிழ்ச்சி உதயம்

வெளிவரும் நாளை — —

— — — எதிர்பாருங்கள் !

---

## பிப்ரவரி மீ 20 தேதிக்குள்

சந்தா அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

| பரிசு ந. | ரூ. | சந்தா ந. | |
|---|---|---|---|
| 1 | 15 | எ. 254. | ஸ்ரீ. கே. டி. அஸான் காதர், சோலான். |
| 2 | 10 | ஆர். 273. | ப. ராமமூர்த்தி, நம்டு. |
| 3 | 10 | எஸ். 365. | ஸ்ரீமதி. வி. ஆர். ஸரஸ்வதிபாய் கோயம்புத்தூர். |
| 4 | 5 | கே. 420. | ஸ்ரீ. எஸ். ஆர். கிருஷ்ணசாமி, ஸ்ரீரங்கம். |
| 5 | 5 | என். 150. | ,, எஸ். நாராயணசாமி, கோபாலபுரம். |
| 6 | 5 | எஸ். 379. | ,, ஆர். ஸுப்ரமண்ய அய்யர், மதுங்கா. |

# சென்னை பிலிம் தேர்தல் முடிவுகள்

சென்ற மாதம் நடைபெற்ற மேற்படி தேர்தல் முடிவுகளைக் கீழே வெளியிடுகிறோம். கீழ்க்கண்ட படங்கள், நடிகர்கள் ஆகிய பெயர்கள் வரிசைக் கிரமமாக மிகுதியான ஓட்டுகள் பெற்றுள்ளன.

சென்னை, வெளியூர்கள், பர்மா, சிலோன், எப். எம். எஸ். ஆகிய பல இடங்களிலிருந்து மொத்தம் 6,000 பேர்கள் ஓட்டளித்துள்ளனர்.

## வெளிநாடு

படம் :—"ரோமியோவும் ஜூலியட்டும்," "ஸெய்ன்டாக் கைதி," "நற்பூமி."

நடிகர் :—பால் மூனி, ரொனால்ட் கால்மென், ராபர்ட் டேலர்.

நடிகை :—கிரேட்டா கார்போ, ஷர்லி டெம்பிள், நார்மா ஷியரர்.

## வட இந்தியா

படம் :—"எதிர்பாராதது," "பிரஸிடென்ட்." "துகாராம்.'

நடிகர் :—சைகால், அசோக குமார், மோதிலால்.

நடிகை :—சாந்தா ஆப்தே, தேவிகாராணி, சபிதாதேவி.

## தெலுங்கு

படம் :—"கனகதாரா," "பாலயோகினி," "மோஹினி ருக்மாங்கதா."

நடிகர் :—வேமூரி கக்கய்யா, தொம்மட்டி சூர்யநாராயணா, ஸி. எஸ். ஆர். ஆஞ்சனேயலு

நடிகை :—பஸுபலேடி கண்ணாம்பா, ராமதிலகம், பேபி சரோஜா.

## தமிழ்

படம் :—"சிந்தாமணி," "அம்பிகாபதி," "பாலயோகினி."

நடிகர் :—எம். கே. தியாகராஜ பாகவதர். கே. பி. கேசவன், ஒய். வி. ராவ்.

நடிகை :—கே. அஸ்வத்தம்மா, எஸ். டி. சுப்புலக்ஷ்மி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி (பேபி சரோஜாவுக்கு, 4-வது ஸ்தானம்)

# ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

## எழுதிய நாவல்கள்

### 1925

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1. வைதேகி | 2 | 8 |

### 1926

| | ரூ. | அ. |
|---|---|---|
| 2. பத்மசுந்தரன் | 2 | 8 |

### 1927

| | ரூ. | அ. |
|---|---|---|
| 3. சண்பக விஜயம் | 1 | 12 |
| 4. ராதாமணி | 2 | 8 |

### 1928

| | ரூ. | அ. |
|---|---|---|
| 5. கௌரீமுகுந்தன் | 1 | 12 |
| 6. நவநீத கிருஷ்ணன் | 2 | 0 |

### 1929

| | ரூ. | அ. |
|---|---|---|
| 7. கோபால ரத்னம் | 0 | 14 |
| 8. மாதவமணி | 0 | 6 |
| 9. சாருலோசனா | 2 | 8 |

### 1930

| | ரூ. | அ. |
|---|---|---|
| 10. சுகந்த புஷ்பம் | 1 | 0 |
| 11. வீரவஸந்தா | 0 | 8 |
| 12. சாமளநாதன் | 2 | 0 |
| 13. ருக்மணிகாந்தன் | 2 | 0 |

### 1931

| | ரூ. | அ. |
|---|---|---|
| 14. ஸாரமதி | 1 | 12 |
| 15. நளின சேகரன் | 0 | 8 |

### 1932

| | ரூ. | அ. |
|---|---|---|
| 16. பரிமள கேசவன் | 1 | 4 |
| 17. மூன்று வைரங்கள் | 0 | 8 |
| 18. உத்தமசீலன் | 1 | 4 |
| 19. கதம்பமாலை | 1 | 0 |

### 1933

| | ரூ. | அ. |
|---|---|---|
| 20. காதலின் கனி | 2 | 8 |
| 21. சோதனையின் கொடுமை | 1 | 8 |
| 22. படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 |

### 1934

| | ரூ. | அ. |
|---|---|---|
| 23. தியாகக் கொடி | 2 | 0 |
| 24. ஜெய ஸஞ்சீவி | 0 | 4 |
| 25. பக்ஷமாலிகா | 0 | 6 |
| 26. புத்தியே புதையல் | 0 | 14 |

### 1935

| | ரூ. | அ. |
|---|---|---|
| 27. மங்களபாரதி | 2 | 0 |
| 28. பட்டமோ பட்டம் | 0 | 10 |
| 29. சுகுண பூஷணம் | 0 | 4 |
| 30. பிச்சைக்காரக் குடும்பம் | 0 | 8 |
| 31. ஆனந்தஸாகர் | 0 | 8 |
| 32. அம்ருததாரா | 0 | 4 |

### 1936

| | ரூ. | அ. |
|---|---|---|
| 33. இன்பஜோதி | 1 | 4 |
| 34. ராஜமோஹன் | 1 | 4 |
| 35. அனாதைப் பெண் | 1 | 4 |
| 36. ப்ரேம ப்ரபா | 0 | 8 |

### 1937

| | ரூ. | அ. |
|---|---|---|
| 37. அன்பின் சிகரம் | 0 | 4 |
| 38. சாந்தகுமாரி | 1 | 0 |
| 39. மாயப்ரபஞ்சம் | 1 | 0 |
| 40. சந்திர மண்டலம் | 1 | 0 |

### 1938

| | ரூ. | அ. |
|---|---|---|
| 41. வாழ்க்கையின் நாதம் | 1 | 4 |
| 42. உளுத்த இதயம் | 0 | 4 |

**“ஜகன்மோகினி” ஆபீஸ்,**

**26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.**

## 31

வேணி, வாஸந்தி, ராஜு மூவரும் அன்று மூர்த்தியின் வரவை எதிர்பார்த்துக்கொண்டே சந்தோஷமாக இருந்தார்கள். வேணி, மூர்த்தியின் தையல் மெஷினைத் துடைத்துக்கொண்டிருந்தாள். வாஸந்தி தன் புத்தகங்களை அடுக்கிக்கொண்டிருந்தாள். அச்சமயம் ஒரு ஆள் வந்து, "அம்மா! அம்மா!" என்று கூப்பிட்டான். வேணி எழுந்து வந்து, "யாரப்பா!" என்றாள்.

அம்மனிதன் :—தர்ஜி திருமூர்த்தி உங்க புருஷனும்மா! ஒங்க பேரு திருவேணியம்மாளாம்மா?

வேணி :—ஆமாம்! என்ன சமாச்சாரம்?

வந்தவன் :—அம்மா! திருமூர்த்தி ஊரிலிருந்து வரும்போது வழியிலெ யாரோ திருடர்கள் நன்னு அடிச்சு படுகாயப்படுத்திட்டாளாம். அவருக்கு நெனவே இல்லாமெ நடு வழியிலே விழுந்து கிடந்ததெ யாரோ பாத்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்து விட்டிருக்கா. ஆஸ்பத்திரிலே விசாரிச்சத்துலே, இவர் தர்ஜி திருமூர்த்தின்னு யாரோ சொல்லி தெரிஞ்சுது. ஒங்களுக்குத் தகவல் சொல்லச் சொன்னா.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் நின்ற இடத்திலேயே வேணி 'ஹா'வென்று சாய்ந்து விட்டாள். "அப்பாவையாம்மா அடிச்சுப்புட்டா? ஐய்யயோ! அப்பா! அப்பா!" என்று குழந்தைகள் பெரிதாகக் கத்த வாரம்பித்து விட்டார்கள். வேணிக்கு ஆகாயமும், பூமியும் ஒன்றாகி விட்டது. பேசவே முடியாமல் கல்லாய்ச் சமைந்து விட்டாள்.

வாஸந்தி வந்த மனிதனை நோக்கி, "ஐயோ! நாங்க வந்து எங்கப்பாவெ பாக்கலாமா? எங்கப்பா எப்படி இருக்கா? எங்களெ அழெச்சிண்டு போரயா?" என்றாள். வந்த மனிதன் குழந்தையின் பரிதாபம் தாங்காமல் மனம் உருகினான். "அம்மா! இப்போ யாரும் வரக் கூடாது. சாயங்காலம் 5 மணிக்கு யார்

வேண்ணாலும் வரலாம். நீங்க அப்போ வந்து நாலாவது வார்டு எங்கென்னு கேளுங்க. அங்கே கொண்டு விடுவா. பதினாலாவது படுக்கையிலெ ஓங்கப்பா படுத்திருக்கார். நான் போய் வரேன்" என்று போய் விட்டான். வாஸந்தி "அம்மா! அம்மா! என்னம்மா! பேசமாட்டெங்கரெ. ஐயோ! அம்மா" என்று கதறியவாறு, வேணியின் முகத்தில் ஜலத்தைத் தெளித்தாள். வேணி அப்போதும் கண் விழிக்கவில்லை. "ராஜு! அம்மாவெ பார்த்துக்கோடா! இதோ நொடிப்போதிலே மாமியை அழெச்சிண்டு வரேன்" என்று கூறிவிட்டு ஓட்டமாக ஓடினுள்.

அடுத்த நிமிடமே மைதிலியுடன் ஓடிவந்தாள். மைதிலி வாஸந்தி மூலம் விஷய மறிந்து கொண்டு, கண்ணீர் வடித்தபடியே வேணியைத் தூக்கித் தன் மடியில் போட்டுக்கொண்டு, மூர்ச்சை தெளியச் செய்து, பின்னர் "அம்மா! கடவுளைப் பிரார்த்தியுங்கோ! அழுதா என்ன பண்றது? கருப்பன் வண்டி கொண்டு வருவான். ஆஸ்பத்திரிக்குப் போய் பாத்துட்டு வாங்கோ!" என்று தேறுதல் கூறினுள்.

யார் தேற்றினுல்தான் வேணியின் மனம் தேறுதலடையும். பேசவும் முடியாது பதுமைபோலானுள். 4 மணிக்கெல்லாம் கருப்பன் வண்டியுடன் தயாராய் வந்தான். வேணியும் குழந்தைகளும் வண்டியில் ஏறிக்கொண்டார்கள். "கருப்பா! கூடவே போய் பாத்துட்டு ஜாக்கிரதையா அழைச்சிண்டு வந்து வீட்டிலே விட்டு விட்டு வா!" என்று மைதிலி உத்திரவு போட்டுவிட்டு, தன் வீட்டிற்குச் சென்றுள். வண்டியும் நகர்ந்தது.


## அன்பின் சிகரம்

2-ம் பதிப்பு] [விலை அணு 4

பக்திப் பெருக்கும், காதல் ரசமும் நிரம்பியது. உயிரினுமினிய உள்ளன்புடன் செய்த உபகாரத்தின் அருமையை அறியாத அன்பற்ற அலகையின் முடிவு என்ன?......

## 32

மைதிலிக்கு உண்டான துக்கத்திற்கு அளவே இல்லை. "இம்மாதிரி படுகாயப்படுத்தி ஒரு குடும்பத்தையே பாழ்படுத்திய சண்டாளர்கள் யாராக இருக்கும்? அன்று அவமானப்படுத்தியதால், அதையே ஒரு க்ஷாத்திரமாக வைத்துக்கொண்டு, கிழவனே ஒருகால் இம்மாதிரி பழிக்குப் பழி வாங்கி இருப்பானோ!" என்று அவள் நினைக்கும்போது அவள் தேகமே நெருப்புப் பிடித்து எரிவதுபோல் வேதனையுண்டாகியது. கூறத்திற மற்ற சங்கடம் அவளை வதைக்கின்றது. வேணியின் பரிதாபகரமான முகமும் குழந்தைகளின் முகமும் அவள் கண் முன்பு தோன்றிப் பின்னும் நெஞ்சு பிளந்து விடும்போல் சங்கடம் செய்கிறது.

அச்சமயம் கிழவர் மாடி வராந்தாவில் தனக்குத் தானே, "ஆமாம்; ஆமாம். இதுதான் சரியான பழிக்குப் பழி. பழிக்குப் பழி வாங்கிவிட்டேன். இனிமேல் பிண்டத்திற்குத் திண்டாடட்டும். என்னைப் பொம்மனாட்டி வேஷம் போட்டு மானபங்கம் பண்ணின கொழுப்புப் புடிச்ச வேணி கம்மனாட்டியாகி மூலேலே ஒக்காண்டு அழட்டும். இதுதான் சரியான வழி" என்று கூறிய வார்த்தைகள் மைதிலியின் காதில் கூரிய ஈட்டியைப் பழுக்கக் காய்ச்சி சொருகுவதுபோல் இருந்தது.

"ஹா! ஐயோ! நான் நெனச்சதுபோலவே ஆயிடுத்தே. கடவுளே!" என்று தன்னை மீறிப் பொங்கிவரும் ஆத்திரத்துடன் தடதடவென்று மாடிக்குச் சென்று கிழவனின் தோள்களைப்பிடித்து உலுக்கு உலுக்கு என்று உலுக்கியபடியே, 'ஐயோ! படுமோசம் போய்விட்டதே. உங்களுடைய அக்கிரமச் செய்கைக்கு நற்புத்தி வரப் பண்ணினதை அடியோடு மறந்துபோய் இப்படியா ஒரு உத்தமியின் வயிறெரியப் பண்றது? ஒரு குடும்பத்தைச் சிதற அடிக்கிறது. ஐயையோ! சகிக்கலேயே! நியாயம் அநியாயம் கிடையாதா? மான அவமானமில்லையா? இப்படியா கொலை செய்யறது? என்னைக் கொலை செய்தது போதாதென்று இன்னொரு கொலையும் செய்துவிட்டீர்களே!

ஆமாம்! நான் இதைக் கண்டிப்பாய்ப் போலீஸாருக்குச் சொல்லிவிட்டுறேன். என் வயிறு எரியறது. நெஞ்சு பிளக்கிறது' என்று கண்ணீர் விட்டுக் கதறினுள். கிழவர் முட்டாள்தனமாக வாய் விட்டுக் கூறியதை எண்ணி வருந்தி மைதிலி கூறியதைக் கேட்டு பயந்தார். ஆனுல் அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல், மைதிலியை விரைக்கப் பார்த்தபடியே, 'ஓகோ! சொல்லேண்டீ! சொல்லித்தான் பாரேன்! நீ பட்ற பாடு தெரியறது' என்ருர்.

மைதிலியின் ஆத்திரம் பொங்கியது. 'ஆமாம், இப்போ பட்ற அவஸ்தையை விட—இம்ஸையை விட—இனுமே என்ன இருக்கு. இதோ! சொல்லியே தீருகிறேன். வந்ததை அனுப விக்கத் தயார்' என்று ஆவேசத்துடன் அழுத்தமான குரலில் கூறியபடியே, சடக்கென்று தன்னறைக்கு வந்து ஒரு காகிதத்தை எடுத்தாள். அப்போதிருந்த ஆத்திரத்தில் காட்டிக் கொடுத்து விடவே துணிந்து "போலீஸ் இன்ஸ்பெக்டர் சார்!" என்ற தலை யங்கத்தை எழுதினுள். அதே சமயம் வழக்கமாகக் கேட்கும் வானக்குயிலின் நாதம் கம்பீரத் தொனியுடன்,

(முன் தொடர்ச்சி—சரணம்)

அகந்தையே அழிக்கும் ஆத்திரம் பழிக்கும்
இகழ்ந்திடும் செய்கையை எரித்து நல்சாந்தியை
அகத்தில் கோள்வாய் மனமே! (தூய்மை)

என்று ஒலித்தது. வழக்கம்போல் அவள் மனத்தை உருக்கியது. நீர் வழிந்த கண்களுடன், அச்சங்கீத ஒலி கேட்கும்வரையில் பதுமையானுள். உடனே அவள் மனத்தில் சொல்லமுடியாத ஓர் வேதனையும் துக்கமும் நெஞ்சைப் பிளந்தது. அவ்வறையில் மாட்டப்பட்டிருந்த நளாயினி, தமயந்தி, சந்திரமதி, ஸாவித்ரி, லக்ஷ்மி, ஸரஸ்வதி முதலிய படங்கள் அவள் கண்ணில் பட்டன. மனம் இடிந்துபோய், பேனு நழுவி நிலை புரண்டது. "பாரத நாரீமணிகள், இந்து தர்மத்தின் தத்துவத்தை நிலை நாட்டிய வீரமாமணிகள், பதிவிருதா சிரோமணிகள்! உங்கள் இனத்தில் பிறந்தும் உங்கள் வழியைப் பின்பற்ருது ஆத்திரப்பட்டுச் செய்ய எண்ணிய காரியத்தில், உயர்ந்த இந்து தர்மத்திற்கே களங்கத்தைத்

தேடும் மகா பாவியாவேன். கட்டிய கணவன் பெரிய வியாதிக் காரனுனுலும் நளாயினி சகிக்கவில்லையா? தன்னை அடிமையாக விற்றுலும் சந்திரமதி பொறுக்கவில்லையா? தன் கணவனுக்காக எமனுடன் வாதாடி பதிவிருதா தர்மத்தை ஸாவித்திரி நிலை நாட்ட வில்லையா? 'கட்டிய கணவனைக் காட்டிக் கொடுத்த மகா பாவி' என்று என்னை உலகம் தூற்றுமாயின் பாரத நாரீமணிகளுக்கும் இந்து தருமத்திற்கும் களங்கம் வருமல்லவா? 'ஹா! என்ன ஜென்மமெடுத்தேன்?' என்று தனக்குள் பேசிக்கொண்டு காகிதத்தைக் கிழித்தெறிந்துவிட்டுச் சோபாவில் சாய்ந்தாள்.

கருப்பன் வந்தான். அவனைக் கண்ட மைதிலி, "கருப்பா! எப்படி இருக்காரு நீ பாத்தியா? அம்மா, குழந்தைங்க எல்லாரும் என்ன பண்ரு? நெனவு தெரியறதா! டாக்டர் என்ன சொன்ஞராம்?" என்று கேட்டாள்.

கருப்பனின் கண்ணில் கண்ணீர் வழிகிறது. வாய் பேச முடியவில்லை. திணறியவாறு "அம்மா! என்னுத்தை சொல்லுவேங்க. வவுறு பத்தி எறியுதுங்க. சோத்துக் கையிலெ எல்லா வெரலையும் எந்தப் பாவியோ நல்லா கல்லாலே நசுக்கி பஞ்சாக்கிப் பூட்டாங்களாம். அதுக்காவ மணிக்கட்டு வரைக்கும் வெட்டிப்புட்டாங்களாம். மழக்கம்னு சொல்லமுடியாது. அம்மா உசிரே பூடும்பேலேக்கீது. கொயந்தங்க கதறுதுங்க. அவருக்குத் தையல் தொழிலுக்கு அந்த கைதானே முக்யம். அது பூட்டுதுங்களாம்மே" என்று கருப்பன் கூறும்போது மைதிலிக்குச் சகிக்க முடியாத துக்கமும் கிழவர்மீது ஆத்திரமும் பொங்கி விட்டன. பதில் பேசமாட்டாது குப்புறப் படுத்து தேகங்குலுங்கப் புலம்புகிருள்.

அவள் பரிதாபத்தைக் கருப்பனுல் கண்டு சகிக்க முடியவில்லை. "அம்மா! அவங்களுக்கு இன்னிக்கு சோறுகூட பிடிக்காதும்மா! நீங்கதான் போயி ரவெ பலவந்தமா சாப்பிடச் சொல்லணும்மா! அந்தம்மா ரொம்ப இடிஞ்சு பூட்டாங்கம்மா! வண்டீ தயாராக்கீது. ரவெ வாங்கம்மா!" என்று நயமாகக் கூப்பிட்டான்.

மைதிலி கண்ணைத் துடைத்துக்கொண்டு எழுந்து உள்ளே போய் டிப்பன் செட்டுகளில் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். இதைக் கிழவர் மெத்தையிலிருந்து கண்கள் தீப் பொறி பறக்கப் பார்த்தபடியே, 'கரப்பா! கரப்பா!' என்று கூவினர். ஆனல் அது அவர்கள் காதில் கேட்கவில்லை.

## 33

மத்தியில் சில மாதங்கள் உருண்டோடி விட்டன. மைதிலி அடிக்கடி வேணியின் வீட்டிற்குச் சென்று அவளுக்கு ஒத்தாசை செய்யும் செய்கை கிழவருக்குப் பிடிக்காததாலும் மைதிலி எங்கே ஒரு வேளை இல்லாவிட்டால் ஒரு வேளை தன்னைக் காட்டிக் கொடுத்து விடுவாளோ வென்ற பயத்தினலும் ஏதோ ஒரு சாக்கை வைத்துக் கொண்டு மைதிலியையும், மீனட்சியையும் அழைத்துக் கொண்டு கிராமத்திற்குப் போய் விட்டார். தான் மட்டும் ஊருக்கு அவ்வப்போது வந்து போய்க் கொண்டிருந்தார்.

மைதிலிக்கு மனம் முறிந்துபோய் ஒருவிதமான சலிப்பும் வேதனையும் உண்டாகி விட்டதால், 'நான் உயிருடன் இருந்தால் என்ன; இறந்தால் என்ன? எங்கு இருந்தால்தான் என்ன? எமன் கோயிலில் கொண்டு வைத்தாலும் இருப்பதற்குப் பயம் என்ன? இங்கிருப்பதில் கிழவரின் சந்தேகம் அதிகரித்து இன்னும் ஆத்திரமும் அவமானமும் தானே வருகிறது. கண் மறைய எங்காவது சாவதே நலம்' என்று எண்ணி கிராமத்திலிருந்தாள்.

ஆனல், அவ்வப்போது வேணியையும் வாஸந்தியையும் அவளால் மறக்கவே முடியாமல் தவிப்பாள். 'தொழிலும் போய் விட்டதே. இனி எப்படி பிழைக்கிறர்களோ! என்ன கதியை அடைந்திருக்கிறர்களோ!' என்று விசனிப்பாள். 'நாம் மெய்ம் மறந்து அனுபவிக்கும் சங்கீதம்—வானக்குயிலின் இனிய கானம்—

கேட்காமலிருக்கிறேமே' என்று மட்டும் வருந்துவாள். இவ்விதம் சில மாதங்களாகி விட்டன.

கிழவரின் புத்தியில் இந்த சிறைவாஸம் போதும் என்று தோன்றியதோ என்னவோ, மீண்டும் ஊருக்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டார். வந்த உடனே வேணியின் வீட்டிற்குச் சென்று விசாரிக்கையில், வேணி அவ் வீட்டிலில்லை. வேறு எங்கேயோ மாற்றிப் போய் விட்டதாக தகவல் கிடைத்தது கேட்டு மைதிலி மிகவும் வருத்தத்துடன் தன் வீட்டிற்குத் திரும்பி வந்து விட்டாள்.

இதைக் கிழவர் பார்த்துக் கொண்டிருந்து "ஆரம்பிச்சுட்டயா? ஒன் கொழுப்பை அடக்கறத்துக்குத் தானே ஒன்னே நாட்டுப்புறத்திலே கொண்டு போட்டேன். இன்னும் திமிர் விடல்லெயே. அந்த வேணிக்கு பொழப்பே இல்லாததாலே தாசியாப் பூட்டாளாம். ஊரே சிரிக்கிறதாம். தெரியுமா? இனுமே இப்படி போனேயொ கொலை பண்ணிப்புடுவேன்" என்று கண்டித்தார். நொந்துபோய்விட்ட மைதிலி வாயைத் திறக்கவே இல்லை. வேணியைத் துச்சமாகச் சொல்லிய வார்த்தை தாங்காமல் உள்ளே போய்விட்டாள்.

## 34

மூர்த்தியின் தற்போதைய நிலைமையைப் பார்த்த எவர் மனம்தான் உருகாது? கண்ணீர் பெருகாது. அவன் யார் செய்த புண்ணியவசத்தினுலோ உயிருக்கு ஆபத்தின்றிப் பிழைத்து வீடு வந்து சேர்ந்தானே யன்றி, அவனுடைய பிழைப்புக்கு ஆதாரமான தையல் வேலை செய்வதற்கு முடியாமல் கை போய்விட்ட விசனத்தை அவனுல் சகிக்கவே முடியவில்லை. "இத்தகைய ஊனத்தை யடைந்த பிறகு நான் பிழைத்ததை விட என் உயிர் நீங்கி இருக்குமாயின் எத்தனை சந்தோஷப்பட்டிருப்

பேன்? இப்போது நான் பிழைத்தும் பலனில்லாதுபோய் விட்டதே! ஆ! ஈசா! என்ன செய்வேன்?" என்று தனக்குள் சதா எண்ணி எண்ணி உருகுவான்.

தன் கையையும், தையல் மெஷினையும் மாறி மாறிப் பார்த்து பெருமூச்சு விடுவான். கண்ணீர் தாரை தாரையாகப் பெருகி ஓடும். சதா புலம்பிப் புலம்பி பின்னும் மெலிந்துவிட்டான். இவனுடைய சங்கடத்தைக் கண்டு சகிக்கமாட்டாத வேணியும் தவித்து உருகுவாள். குழந்தை வாஸந்தியோ தன் பிதாவின் வருத்தத்தை முற்றுமறிந்து, 'இனிமேல் என்ன செய்வது? பிதாவின் தொழில் போய்விட்டதே! எப்படி பிழைக்க வழி செய்வார்?' என்று விசனப்படுவாள்.

தன் வாழ்க்கையின் நாதமாகிய தையல் மெஷினைத் துடைத்துக்கொண்டே கண்ணீர் பெருகியவாறு மூர்த்தி, "ஹா! கடவுளே! இப்படியா என் கதியை முடித்தாய்? இந்த மெஷினின் இனிய ரீங்காரம்போன்ற சப்தமே என் வாழ்க்கையின் நாதமாக எண்ணி உள்ளம் பூரித்திருந்தேனே! அப்படிப்பட்ட மெஷினுக்கு இனுமே நான் லாயக்கில்லாதபடி செய்துட்டாயே! இது ஒனக்கு தருமமா! இந்த மெஷினே எனக்குப் பெரும் புதையல்னு நெனச்சிண்டிருந்தேனே. என் எண்ணம் ஈடேறாது செய்துட்டயே! இந்த ஆநந்தமான சப்தத்தை நான் இனுமே எப்போ கேட்பேன்?" என்று மனம் வருந்திக் கொண்டிருக்கையில், வாஸந்தி வந்து பக்கத்தில் நின்றாள்.

தந்தையின் கஷ்டம் சகிக்க முடியவில்லை. சிறுமியாயினும் அவள் கண்ணிலும் ஜலம் மளமளவென்று வந்துவிட்டது. 'அப்பா! அப்பா! எம்பா அழறே! சாமி ஒன் கையெ வெட்டிட்டாரேன்னு அழறே! சாமிக்குக் கொஞ்சங்கூட புத்தியே இல்லேப்பா! சாமிக்கு நம்ப மேலே ஆசெயெ இல்லேப்பா! ஆசெ இருந்தா இப்படி செய்வாரா! இல்லாட்டா ஒன்னே அடிச்ச திருடனையாவது புடிச்சி தரமாட்டாரா! நாம்ப இனுமே எப்படிப்பா பொழக்கறது?" என்று அழுதாள்.

வேணி:—ஒங்களே போலீஸார் கேட்டபோது விரோதிகளே இல்லேன்னு சொல்லிப்புட்டங்களே! என் அப்படி சொன்னங்கோ!

ஒங்களுக்குப் போட்டியா தையல் கடைகளே வெச்சு ஒங்க தொழிலெ கெடுத்தவாளே ஏன் சொல்லக்கூடாது? அதோடு அந்த கட்டடெலெ போற கிழவன் அன்னிக்கி நடந்த ஆத்திரத்துலே, அவன்தான் செய்திருப்பான்னு ஏன் சொல்லக்கூடாது?

மூர்த்தி :—வேணீ! நீ புத்திசாலியாயிருந்தும் புத்தி இல்லாமெ பேசறே! நம்மாலேதான் காரியமெல்லாம் ஆறதுன்னு நெனைக்கிறயா! அநியாயமா அவா இருக்கும், இவா இருக்கும்னு சந்தேகத்தாலே ஒத்தர்மேலே பழி போட்றது நியாயமா! அதனுலே நமக்கு இன்னும் பாவமே யொழிய லாபமில்லை. எல்லாருக்கும் சரியான கூலியைக் கடவுள் குடுப்பான். நீ வீணு அவசரப்பட்டுப் பேசாதே! நான் செய்த பாபம் இப்படி அனுபவிக்கணும்னு இருந்தது. அனுபவிக்கிறேன்.

வாஸந்தி :—ஆமாம்பா! பாவம், பாவம்னு சொல்லிண்டிருந்தா ஒன்னே அடிச்சப் படுபாவி ஆப்டுடுவானுப்பா! போலீஸாரிடம் நீ சொன்னுதானேப்பா தேடிப் புடிப்பா! ஏம்பா! ஒனக்கு இனுமே ஊசி கோர்க்க முடியாது. தைக்கவும் முடியாது. பின்னே எப்படிப்பா சாப்பட்றது?

மூர்த்தி :—கண்ணு! வாஸந்தீ! இத்தனை கோலங்காட்டின ஈசன் அதுக்கும் வழி செய்யாதெயா இருப்பான்? அவன் என்ன வழியிலே பொழப்பு கொடுக்கிறுனே அப்படி சாப்பட்றது.

வேணி :—ஏற்கெனவே மூணு நாலு மாசமா வீட்டு வாடகெ நின்னுபோச்சுன்னு வீட்டுக்காரா தொண தொணைன்னு கேக்கரா! ஆ ஊன்ஞ, தையல் மெஷினைக் குடுத்துடு. எடுத்து வித்துப் புட்ரேன்னு பேசரா!

மூர்த்தி :—"ஹா! ஐயோ! முடியாது! முடியாது! அரிச்சந்திரனைப்போலே நான் என்னேயே அடிமையாக்கியும் விற்றும் பணம் கொடுப்பேனே யொழிய, என் உயிருக்கும் உயர்வான மெஷினே நான் குடுக்கமாட்டேன். மெஷினைக் குடுத்துட்டா என்னுயிர் போயிடும். வேணீ! வேணீ! கிழவி கால்லே விழுந்து பொறுத்துக்கும்படி வேண்டிக்கோ! நான் பிச்செ எடுத்தாவது பணத்தெ குடுத்துட்ரேன்" என்று கூறும்போது, 'அவ்வறை

முற்றிலும், மூர்த்தி பிச்சைக்காரன்! பிச்சைக்காரன்’என்று சப்தம் ஒலிப்பது போன்றும், அவனுடைய உருவம் பிச்சை எடுப்பது போல் அவ்வறை முற்றிலும் தெரிவதுபோலும் தோன்றிய தோற்றத்தைக் கண்டதும், ‘ஹா!’ வென்று மூர்த்தி அலறிவிட்டான். அவனுடைய நிலைமை கலங்கிவிட்டது. மெஷின்மீது அப்படியே குப்புறச் சாய்ந்தான்.

வாஸந்தி :—அப்பா! அப்பா! அழாதெப்பா! நீ அழுதாக்கா எனக்கும் அழுகெ வரதப்பா. நீ அழாதே. இதோ பாரு! என்னெ பாத்து சிரிப்பா. இதோ பாரேன். எனக்கு ஒரு யோசனை வந்துடுத்துப்பா—என்று அழுதுகொண்டே சிரித்தவாறு தந்தையின் தலையைத் தூக்கினுள்.

மூர்த்தியும், குழந்தையின் அன்பையும் விசனத்தையும் எண்ணி கலங்கியபடியே கண்ணீர் வழிய சோகமும், துக்கமும், வெறுப்பும், அன்பும், வாஞ்சையும் கலந்த ஒரு சிரிப்பு ‘கலகல’ வென்று சிரித்தவாறு வாஸந்தியை இழுத்துக் கட்டிக் கொண்டான். வாஸந்தியும் குலுங்கக் குலுங்க அழுதபடியே சிரித்துக் கொண்டு, “அப்பா! அப்பா! நேத்திக்கி எதிர்த்த வீட்டுலே ஏதோ விசேஷம்னு அம்மாக்கும் எனக்கும் புது முறத்திலெ வெற்றிலெ பாக்கு, ஒரு படி கடலெ, ஒரு ரவிக்கை எல்லாம் குடுத்தாப்பா! அந்த கடலெயே அப்படியே சுண்டல் பண்ணித் தரச் சொல்லி நம்ப ரெண்டு பேரும் சாயங்காலம் பீச்சுலெ கொண்டு போய் வித்துடலாம். அதுலே காசு வரும். நாம் கஞ்சியாவது குடிக்கலாம். என்னப்பா! என்ன சொல்றே” என்று கொஞ்சிக் கொஞ்சி கேட்டாள்.

இது கேட்ட மூர்த்தியின் இருண்டு கிடந்த இதயத்தில் பளிச்சென்ற ஓர் ஜோதி உதயமாயதுபோல் தோன்றியது. வாஸந்தியை ஆநந்தமும் ஆச்சரியமும் அன்பும் பொங்கிய உணர்ச்சியோடு சேர்த்துக் கட்டியணைத்து முத்தமிட்டான். அபாரமாகப் பொங்கும் ஆநந்தத்தில் வாய் திறந்து பேசமாட்டாது சிலை போலானுன். அவன் அந்த யோசனைக்கு இசைந்துவிட்டதை அவனது உணர்ச்சி நிறைந்த முகமே எடுத்துக் காட்டியதால், வேணி சந்தோஷத்துடன் அடுப்பில் காயும் ஜலத்தில் கடலையைப் போட்டாள்.

## 35

கடற்கரையில் மாலை நேரத்தின் ஆநந்தத்தை யனுபவித்துக்கொண்டே ஆயிரக் கணக்கான கூட்டங்கள் தம்தம் இஷ்ட சகாக்களுடனும், காதலிகளுடனும், குழந்தைகளுடனும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அச் சமயம் வாஸந்தி வழக்கம்போல் சுண்டல் பாட்டுப் பாடிக் கொண்டே வருகிறாள். மூர்த்தி கூடையை எடுத்துக் கொண்டு கூட வருகிறான். ஜனங்கள் வாஸந்தியின் பாட்டைக் கேட்பதற்காகவே அவளைப் பாடச் செய்து பின்னர் சுண்டல் வாங்குவது வழக்கம். அன்றும் அப்படியே பலர் சுண்டல் வாங்கிக் கொண்டார்கள்.

வாஸந்தி தன் கையில் சேர்ந்த சில்லரையை எண்ணிப் பார்த்தாள். நான்கு அணாதான் இருந்தது. தந்தையின் கையிலிருக்கும் சுண்டலை அவன் கையை இழுத்துப் பார்த்தாள். இன்னும் பாதி சுண்டல் அப்படியே இருந்தது கண்டு, "எம்பா! இன்னிக்கி சீக்கிரம் வெலையாகலெயே! பாதிக்கு மேலே அப்படியே இருக்கே. வீட்டுக்கார கெழவிக்கு இன்னிக்கு எப்படியானாலும் ரெண்டு ரூபாய் குடுக்கரேன்னு அம்மா சொல்லி இருக்காளே; கையிலே ஒன்னரை ரூபாதான் இருக்கு. இன்னும் அரை ரூபா வந்தாதானேப்பா ரெண்டு ரூபா கெழவிக்கு குடுக்கலாம். கால் ரூபாய்க்கு நாம்ப அரிசி வாங்கிச் சாப்படலாம்" என்றாள்.

மூர்த்தி:—அம்மா! அதோ கூட்டமா சின்ன பசங்கள் இருக்கே அங்கே போனாக்கா நெரய வாங்குவா! வா போகலாம்— என்றான். வாஸந்தியும் அங்கே ஓடினாள். அப்போது வழியில் அடையாளமே தெரியாமல் மெலிந்துபோய், துரும்பினும் துரும்பாய்ப் போய்விட்ட மைதிலி, மீனாவின் உபத்திரவத்திற்காக அன்று மெல்ல கடற்கரைக்கு வந்து மணலில் உட்கார்ந்திருந்தாள்.

வாஸந்தி ஓடுவதைப் பார்த்துத் திடுக்கிட்டவளாய் எழுந்து ஆவேசத்துடன் ஓடிப்போய், "ஹா! வாஸந்தி! என் கண்ணே! இதென்ன இது. நீயா சுண்டல் விற்கறே? ஐயோ! வயிறெரி

கிறதே. வாஸந்தி! அம்மா, ராஜு எல்லாரும் சௌக்கியமா! கண்ணே! ஒன்னெ பாத்து எத்தனெயோ நாளாச்சே!" என்று கூறியபடியே மூர்த்தியின் கையின் மூளியைக் கவனித்தாள்.

அவள் வயிற்றிலும் மார்பிலும் செய்யும் சங்கடம் கூறத் திறமில்லை. தன் கணவன் செய்த சதியல்லவா இது என்று நினைக்கும்போது, அவளுடைய வேதனை சகிக்க முடியாத பயங்கரமாகத் தோன்றியது. வாஸந்திக்கும், மைதிலியைக் கண்டதும் சுண்டல் விற்கும் எண்ணமும் மறந்துபோய் ஆவலே வடிவாய், 'மாமீ! மாமீ!' என்று சேர்த்துக் கட்டிக்கொண்டாள். "எம்மாமீ! இப்படி எளச்சுபோய்ட்டங்கோ? அம்மா கூட ஒங்களேபோலத் தான் ஆயிட்டா! சதா ஒங்க வார்த்தேதான். அங்கே வந்தா தாதா அடிக்கப்போருரேன்னு பயந்துண்டு வரதெயில்லே மாமீ!

எங்கப்பாக்கு கை போயிடுத்தொன்னே! அதுனலே இப்படி தினம் சுண்டல் வித்து நாங்க பொழக்கிருேம். சரி, நான் போறேன் மாமீ! பாதி சுண்டலுக்கு மேலே அப்படியே இருக்கு மாமீ" என்ருள். மைதிலி மிகுந்த பொறுமையுடன், "வாஸந்தீ! எதோ சுண்டலெ காட்டு பார்ப்போம்" என்ருள். வாஸந்தி மூர்த்தியின் கையிலிருந்து சுண்டல் கூடையை வாங்கிக் காட்டினுள்.

மைதிலி கூடையுடன் அப்படியே வாங்கி நிர்த்தாக்ஷிண்யமாகவும் யாரும் எதிர்பார்க்கா வண்ணமும் அங்கு போகும் மீன் பிடிக்கும் செம்படவனைக் கூப்பிட்டு அவன் கையில் கூடையுடன் சுண்டலைக் கொடுத்துவிட்டுத் தன் கையிலிருந்த மணிபர்ஸை அப்படியே வாஸந்தியின் கையில் கொடுத்து, "கண்ணு! இதைத் தடுத்தால் எனக்குக் கெட்ட கோபம் வரும். அப்பறம் ஒன்னெடே பேசவேமாட்டேன். இதை அப்படியே அம்மாவிடம் கொண்டுபோய் கொடு. முழிக்காதே. ஊம். பேசாதே போய் விடு!" என்ருள்.

அதே சமயம் மோட்டாருக்கு ரெட்லைட்டு வைத்ததுபோல் கண்கள் சிவக்க, கிழவன் இதைப் பார்த்துக்கொண்டே எதிரில் வருவதைக் கவனித்துவிட்ட வாஸந்தி, "ஐயோ! மாமீ! தாதா

வந்துட்டார். அப்பா! அப்பா! நீ வந்துடு; போயிடலாம்" என்று தகப்பனாரின் கையைப் பிடித்துக்கொண்டு பர்ஸுடன் ஓட்டமாக ஓடிப்போய் விட்டாள்.

## 36

இடையில் ஒரு மாதம் ஓடி மறைந்தது. ஒவ்வொரு நாளும் மாயக் கொள்ளையின் பேச்சே அந்த ஊர் முற்றும் பரவிவிட்டது. வாசனை திரவியம் விற்பது மட்டுமல்ல. எண்ணெய், நெய், புஷ்பம் முதலிய முகர்ந்து பார்க்கக்கூடிய ஒவ்வொரு வஸ்துவிலும் மயக்கம் கலந்து கொள்ளையடிக்கிறார்கள் என்ற கம்ப்ளேண்டுகள் போலீஸுக்கு வந்து குவிந்து கொண்டே இருக்கின்றன.

தினம் வீதியில் செல்லும் ஒவ்வொரு வியாபாரியையும் போலீஸார் சோதிக்க வாரம்பித்தார்கள். ஒன்றிலும் தகவல் கண்டுபிடிக்க முடியாத பெருங் குழப்பமும் கலவரமும் உண்டாகி விட்டது. சில இடங்களில் இரெண்டொருவர் இறந்துவிட்டதாகவும் அவ்வப்போது செய்தி கிடைப்பதால், போலீஸ் டிபார்டுமெண்டிலேயே அதிகமான பரபரப்பையும் ஊக்கத்தையும் அளித்ததால் ரிஸர்வ் போலீஸை நிறைய வரவழைத்து ஆங்காங்கே ரகசியப் போலீஸும் உடுப்புப் போலீஸும் பாராப் போட்டுவிட்டார்கள்.

இன்று ஏகாம்பரத்தின் முகத்தைப் பார்க்கவே முடியவில்லை. அவருடைய உள்ளத்தில் தாங்க முடியாத விசனம் பொங்கி வழிகிறது. பெருமூச்சுடன் தன் ஆசனத்தில் உட்கார்ந்தபடியே, "ஹா! என்ன கஷ்டம். என்ன பரிதாபம்! குழந்தை வாஸந்தியின் துடிப்பைச் சகிக்கமுடியலேயே. மூர்த்தியின் கதறல் என்னுள்ளத்தைப் பிளக்கிறது. கோரக் காட்சி! கண்றாவிக் காட்சி. உம். சவத்தை சின்னாபின்னமாக்காமல் கொடுக்க உதவி செய்யாதே போனா நான் பொதுஜன ஊழியன்றதுக்கு என்ன பலன்?" என்று வாய் விட்டுச் சொன்னார்.

எதிரில் நிற்கும் சப்-இன்ஸ்பெக்டர், "ஆமாம் சார்! ரொம்ப பரிதாபமாயிருக்கு சார்! அந்தம்மாள் நாளைக்கி வெள்ளிக் கிழமையாச்சே! காத்தாலே பூஜைக்குப் புஷ்பம் ஒணும்னு புஷ்பம் வாங்கினளாம். அதோடெ சண்பகப் பூவும் இருந்ததாம். வாஸந்திக்காக மூந்து பார்த்து வாங்கினளாம். அப்படியே பிராணன் போயிருக்கு. அவள் மடியிலிருந்த மணிபர்ஸு, கழுத்திலிருந்த தாலி உருவு, கையிலிருந்த பித்தளை வளையல் எல்லாம் போயிட்டது. ஐயோ பாவம்! குழந்தைகளின் பரிதாபந்தான் சகிக்கல்லே. சவத்தைக்கொண்டு போகும்போது மூர்த்திக்கு மயக்கமே போட்டுவிட்டது" என்றார்.

என்ன அநியாயம்! இம் மாயக் கொள்ளையின் விஷம் வேணியை அரைக் கணத்தில் விழுங்கி விட்டதென்றால் ஊரே ஏன் கதறிக் கண்ணீர் விடாது? சவத்தைப் போலீஸார் முறைப் படிக்குக் கொண்டுபோய்ப் பரீக்ஷித்தார்கள். சவமாவது வந்து தம் கையினுல் அடக்கம் செய்ய வேண்டி மூர்த்தியும், வாஸந்தியும் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்தினிடம் கெஞ்சிக் கதறினர்கள்.

இயற்கையிலேயே நல்ல உத்தம குணமும் தயாளத் துவமும் பொருந்திய ஏகாம்பரம் மனமுருகியதால் மேலதிகாரி களின் உத்திரவு பெற்றுச் சவத்தை சீக்கிரமாக அவர்களிடம் கொடுத்துவிட்டார். ஒரு உத்தமி கற்பிற்கரசி, மங்கையர் மாணிக்கம் ஒரு விடிைப் பொழுதில் உலகைவிட்டு மறைந்து விட்டாள். என்னே மனித வாழ்வு!

---

## 37

பிண மேளத்தின் பெரும் முழக்கத்தையும் பீறிக்கொண்டு, "அம்மா! அம்மா! எங்களைத் தனியேவிட்டு எப்படி யம்மா போனே! இனுமே எங்களுக்கு யாரம்மா திக்கு!" என்ற இரு குரல்களின் கதறலும், "வேணீ! வேணீ! இது உனக்குத் தகுமா! இருண்ட உலகத்திலெ என்னைத் தவிக்க விட்டுப் போகலாமா?" என்ற ஒரு குரலின் ஓலமும், "ஐயோ

பாவம்! மாயக் கொள்ளையாலே நிமிஷத்துலெ செத்துட்டாளாமே. ஐயோ! கொழந்தைகளின் பரிதாபம் சகிக்கல்லயே! அந்த மனுஷன் உசிரும் பூடும்போல இருக்கே. வீட்டுலே ஒரு கிழவி கோட்டானுட்டமா இருக்காளே! அவ சாகக் கூடாதா! என்ன அநியாயச் சாவு. மகாலட்சிமிபோல போராளே" என்ற பொது ஜனங்களின் அபிமான வார்த்தைகளின் பேரொலியும் ஒன்று கூடி தெருவெங்கும் ஒரே சப்தமாக ஒலித்தது.

வேணிக்கு மஞ்சள், புஷ்பம், குங்குமம் முதலிய அலங்காரங்கள் செய்து அவளை அடக்கம் செய்யத் தூக்கிச் செல்லும் பரிதாபக் காட்சி வீதியிலுள்ள அத்தனை ஜனங்களின் மனத்தையும் உருக்கிக் கண்ணீர் பெருக்கச் செய்துவிட்டது. ஆனால், வேணியின் அந்தரங்க சினேகிதையும், பரிசுத்தாத்மாவுமான மைதிலியை, அன்று வாஸந்திக்குப் பீச்சில் மணிபர்ஸை கொடுத்த நாள் முதல் கிழவர் தனிச் சிறையில் போட்டுவிட்டதுபோல் தனியறையில் போட்டுப் பூட்டிவிட்டதால், இந்தக் கோரச் சம்பவத்தை, மனத்தை அள்ளிப் பிடுங்கும் துக்க சம்பவத்தை அந்த உத்தமி எப்படி அறியக்கூடும்? அறிந்தால் அவளது சரீரமும் ஆன்மாவும் சிறையிலடைபட்டு இருக்குமா?

கூடத்து உள்ளே அடைபட்டுக் கிடக்கும் மைதிலியின் காதில் ஏதோ சவத்தின் கொட்டு முழக்கு முதலில் கேட்டது. "எந்தப் புண்ணியாத்மாக்களோ இந்த பாப உலகத்தை விட்டுச் செல்கிறார்கள்! ஆணோ! பெண்ணோ! கிழமோ! கட்டோ யார் கண்டது. உம். அவர்கள் கஷ்டம் நீங்கி நிம்மதி உலகம் செல்லுகிறார்கள். அம்மாதிரி இப்பாவி செல்லும் காலம் வருமா! ஏது வரப் போவதே இல்லை" என்றெல்லாம் தனக்குள் எண்ணிப் படுத்திருக்கையில் "அம்மா! அம்மா!" என்று கதறும் குரல் கேட்டது.

அந்த சமயம் வீதிப் பக்கத்து ஜன்னல் பக்கமாக, "ஓணம்! ஓணம்! நன்னு ஓணம் என்னெ மானபங்கம் பண்ணின பாவம் வீணாகப் போகுமா! அதனால்தான் உன் பசெங்களையும் புருஷனையும் விட்டுட்டு உலகத்தையே விட்டுப்போறே! வேணீ! போ! போ! நாலு பேர் தோள்மேலே சவாரி போ! கண்ணை

முடிண்டுபோ ?" என்று ஆத்திரத்துடன் கிழவர் சொல்லும் குரல் மைதிலியின் காதில் நெருப்புபோல் விழுந்தது. அதே சமயம், "ஹா ! வேணீ ! வேணீ !" என்ற குரலும், "அம்மா ! அம்மா !" வென்ற கதறலும் மீண்டும் கேட்டது.

"ஐயோ ! வேணியா செத்துப்போய்விட்டாள். ஐயையோ! இதென்ன அக்கிரமம்! இதென்ன அநியாயம்! கருப்பா! கருப்பா. அடே கருப்பா!" என்று ஒரே கர்ஜனை செய்தாள். கருப்பன் கண்ணீர் பெருக ஓடி வந்து, "அம்மா! அந்த வேணி யம்மா செத்துபுட்டாங்களாம்மா! பொணம் எடுத்திகினு போராங் கம்மா. கொயங்தெங்க கண்ருவியும் அந்த ஐயாவோடே வவுத் தெரிச்சலும் பாக்கச் சகிக்கலேம்மா !" என்று புலம்பியபடியே சொன்னன்.

**மை**திலிக்கு ஏற்கெனவே அடைபட்டுக் கிடப்பதால் பயித் தியம் பிடித்ததுபோல் இருந்த நிலைமை பின்னும் அதிகரித்து, விசனமும் ஷாக்கும் [illegible]ததால், வெறி பிடித்தவள்போல், "ஐயோ! வேணியா[illegible]பிட்டா கருப்பா! கதவு பூட்டெ ஒடெ! ஒடெ! முன்னே [illegible]ச்சு எறி. உம். யோசனை என்ன? பூட்டெ ஒடக்கரெயா! நானும் வேணி பின்னுலேயே போரத் துக்கு இதோ பொடவெயாலே கழுத்துலே சுருக்கு மாட்டிண்டு சாகட்டுமா! கிழவரே எதிர்பார்க்காதே" என்று பெருத்த கூச்சல் போட்டுக் கத்துகிருள். கண்ணீர் ஆருய் ஓடுகிறது. தேகம் முற்றும் எரிவதுபோல் தத்தளிக்கிறது. புழுவைப்போல் துடித்த வாறு கதவை தடதடவென்று தட்டிப் பிளந்துவிட்டாள்.

கருப்பன் கிழவருக்காக முதலில் சற்று நேரம் பயந்தான். எனினும் மைதிலி தற்கொலை செய்து கொள்வதாகக் கூறிய உடனே ஒரு இரும்பு சுத்தியால் பூட்டின்மீது ஒரு அடி வைத்தான், அதே சமயம் கிழவரின் கைத்தடியால் கருப்பனின் மண்டையில் ஓங்கி பலமான அடி யொன்று விழுந்ததும், "ஹா ! அம்மா !" என்று கூவிக்கொண்டே தடாரென்று கருப்பன் கீழே விழுந்தான்.

---

18309



# ஸேவாஸதனம்

கோகிலகான மதுரை

## எம்.எஸ். சுப்புலெக்ஷ்மி

## எப்.ஜி. நடேசய்யர்

நடிக்கும் அற்புதப்படம்

டைரக்ஷன்: K. சுப்ரமணியம் B. A., B. L.,

மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷன்

7, பெல்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்

"JAGANMOHINI" Vol. XV No. 3 Regd. No. M. 2210




தலை வலிக்கு

# Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்
இருதயக் [illegible] யும்
விலக்கு [illegible]




அம்ருதாஞ்சனை
உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,
சென்னை கல்கத்தா பம்பாய்


Printed & Published by V. M. Parthasarathy
at "Jaganmohini" Press, 26, Car St, Triplicane, Madras.